

# இலங்கை தேயிலை சபை

வருடாந்த அறிக்கை 2012

# இலங்கை தேயிலை சபை

## வருடாந்த அறிக்கை **2012**

இலங்கை தேயிலை சபை
574, காலி வீதி
கொழும்பு – 03
இலங்கை

தொலைபேச: +94-11-2587814
+94-11-2582121
+94-11-2583687

துரித: +94 112587341
+94 112589132

இலத்திரனியல : teaboard@pureceylontea.com
இணையதளம : www.pureceylontea.com




# கருந்தேயிலை

பண்புசார் தரம் மற்றும் நிறத்தினை உயரிய மட்டத்தில் பெற்றுக் கொள்வதற்காக தேயிலை கன்றுகளில் ஒட்சியேற்றத்திற்கு உட்படுத்துவதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் தேயிலை வகையான கறுந்தேயிலை பொதுவாக சுவைமிக்கதாகும்.




# பசுமையான தேயிலை

செயற்பாட்டு முறைகளின் ஊடாக ஒட்சிசன் ஏற்றத்திற்கு உட்படாத *Camellia sinensis* லைகள் மூலம் பசுமையான தேயிலை உற்பத்தி செய்யப்படுகிறது. பசுமையான தேயிலை சீனாவில் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், ஆசியாவில் பல்வேறுபட்ட கலாசாரங்களுடன் பின்னிப்பிணைந்ததாக பசுமைத் தேயிலை மாற்றம் பெற்றுள்ளது.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| நோக்கு மற்றும் பணிக்கூற்று | 06 |
| இலங்கை தேயிலை சபையின் அங்கத்தவர்கள் | 09 |
| கணக்காய்வு குழுவின் அங்கத்தவர்கள் | 10 |
| ஊக்குவிப்பு மற்றும் விற்பனை அங்கத்தவர்கள் | 11 |
| சிரேஷ்ட முகாமைத்துவ பணியாளர் சபை | 12 |
| தலைவரின் வாழ்த்து செய்தி | 13 |
| அடிப்படை ஒப்பீட்டு சுட்டிகள் | 15 |
| நிலையியற் சபை பின்னனி | 19 |
| கைத்தொழில் தொடர்பான பக்கத் தோற்றம் | 25 |
| இலங்கை தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் | 67 |
| தேயிலை ஆணையாளர் பிரிவு | 67 |
| தேயிலை ஏற்றுமதிப் பிரிவு | 77 |
| தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு | 83 |
| தேயிலை சுவை பரீட்சிப்புப் பிரிவு | 95 |
| பகுப்பாய்வு இரசாயணக்கூடம் | 101 |
| நிருவாகப் பிரிவு | 107 |
| உள்ளக கணக்காய்வு, தகவல் தொழில்நுட்பப் பிரிவு | 110 |
| நிதி மீளாய்வு | 113 |
| இலங்கை தேயிலை சபையின் அலுவலகங்கள் | 144 |

# நோக்கு

இலங்கை தேயிலையை கோளமய சந்தையில் **‘பிரபல்யமிக்க பானமாக’** மாற்றியமைத்தல்.



# பணிக்கூற்று

சமகால கோவைகள் மற்றும் கைத்தொழில் நீடித்த நிரந்த அபிவிருத்தியின் மூலம் நாட்டிற்கு அன்னியநாட்டு செலாவணி உழைப்பினை மேம்படுத்தலும், இதன் மூலம் தேயிலை செய்கையாளர்களின் பொருளாதார அபிவிருத்தியினை உறுதிப்படுத்தல்.



# இலங்கை தேயிலை சபையின் அங்கத்தவர்கள்

| | |
|---|---|
| தலைவர் | திருமதி ஜானகி குறுப்பு |
| சபையின் செயலாளர் | இலங்கை தேயிலை சபையின் பணிப்பாளர் நாயகம்<br>திரு.எச்.டி.ஹேமரத்ன (2012 ஜுலை 23 வரை)<br>இலங்கை தேயிலை சபையின் பணிப்பாளர் நாயகம்<br>திரு.டி.டப்ளியு.எஸ்.நாரங்கொட (2012 ஒக்டோபர் 17 வரை) |
| சபையின் அங்கத்தவர்கள் | |
| அங்கத்தவர் | மேலதிக செயலாளர் (அபிவிருத்தி)<br>பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு – பிரதிநிதித்துவப்படுத்தி<br>திரு.பி.எல்.யூ.திசாநாயக்க |
| அங்கத்தவர் | நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சை பிரதிநிதித்துவப்படுத்தி<br>தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம்<br>திருமதி.புஷ்பா வெல்லப்பிலி (2012. முார்ச் 28ஆம் திகதி தொடக்கம்) |
| அங்கத்தவர் | சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர்<br>திரு.என்.பி.காரியவசம் |
| அங்கத்தவர் | கொழும்பு தேயிலை வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர்<br>திரு.ஜயந்த கேரகல |
| அங்கத்தவர் | இலங்கை பெருந்தோட்ட தொழிலாளர் சங்கத்தின் தலைவர்<br>திரு.எஸ்கே.எல். ஒபேசேகர |
| அங்கத்தவர் | கொழும்பு தரகர்கள் சங்கத்தின் தலைவர்<br>திரு.என்.சி.முணசிங்க (2012 ஏப்ரல் 23 ஆம் திகதி வரை)<br>திரு.தீபால் ஜயமன்ன (2012 ஏப்ரல் 23ஆம் திகதி தொடக்கம்) |
| அங்கத்தவர் | தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் தலைவர்<br>திரு.நிராஜ் டிமெல் (2012 ஆகஸ்ட் 21ஆம் திகதி வரை) |
| அங்கத்தவர் | திரு.நெவில் ரத்நாயக்க (2012 டிசெம்பர் 31ஆம் திகதி தொடக்கம்) |
| அங்கத்தவர் | இலங்கை தேயிலை கைத்தொழிற்சாலை உரிமையாளர்களின் சங்கத்தின் தலைரை பிரதிநிதித்துவப்படுத்தி<br>திரு. அனில் பெரேரா |
| அங்கத்தவர் | கௌரவ பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரினால் பெயரிடப்படும் அங்கத்தவர்<br>திரு.ஜெப் அலோசியஸ் |
| மேற்பார்வையாளர் | கலாநிதி எஸ்.எஸ்.பி.டி.ஜி.ஜயவர்தன<br>திரு.டி.சம்ப சிவம் |

# கணக்காய்வு குழுவின் அங்கத்தவர்கள்

| | |
|---|---|
| தலைவர் | திருமதி புஷ்பா வெல்லப்பிலி<br>பணிப்பாளர் நாயகம், அரச நிதித் திணைக்களம்<br>திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு (2012 ஏப்ரல் 23ஆம் திகதி தொடக்கம்) |
| **குழுவின் அங்கத்தவர்கள்** | |
| அங்கத்தவர் | திரு.பி.எல்.யு.திசாநாயக்க<br>மேலதிக செயலாளர் (அபிவிருத்தி)<br>பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு |
| அங்கத்தவர் | திரு.ஜயந்த குருகல<br>தலைவர்<br>தேயிலை ஏற்றுமதியாளர்களின் சங்கம |
| அங்கத்தவர் | திரு.அனில் பெரேரா<br>தலைவரைப் பிரதிநிதித்துவப்படுத்தி<br>இலங்கை தேயிலை கைத்தொழிலாளர் உரிமையாளர்களின் சங்கம் |
| மேற்பார்வயையாளர் | திருமதி.சி.எம்.எஸ்.அன்தனி<br>கணக்காய்வு அத்தியட்சகர்<br>கணக்காய்வாளர் திணைக்களம் |
| ஏற்பாட்டாளர் | திரு.எச்.டி.ஹேமரத்ன<br>புணிப்பாளர் நாயகம்<br>இலங்கை தேயிலை சபை (2012 ஜூலை 21 வரை) |
| ஏற்பாட்டாளர் | திரு.ஹசித்த டி. அல்விஸ்<br>புதில் பணிப்பாளர் நாயகம்<br>இலங்கை தேயிலை சபை (2012.7.31 தொடக்கம் 2012 11.02 வரை) |
| ஏற்பாட்டாளர் | திரு.டி.டப்ளியு.எஸ்.நாரங்கொட<br>பணிப்பாளர் நாயகம்<br>இலங்கை தேயிலை சபை (2012.11.02ஆம் திகதி தொடக்கம்) |

# ஊக்குவிப்பு மற்றும் விற்பனைக் குழுவின் அங்கத்தவர்கள்

ஊக்குவிப்பு மற்றும் விற்பனைக் குழு இலங்கை தேயிலைக்காக ஊக்குவிப்பு மற்றும் விற்பனை செயற்பாடுகள் தொடர்பாக சபைக்கு வழிகாட்டல்களை வழங்குவதற்காக நியதிக்கப்பட்ட உபகுழு

தலைவர்

திருமதி ஜானகி குறுப்பு
தலைவர், இலங்கை தேயிலை சபை

## குழுவின் அங்கத்தவர்கள்

### அரச துறை

திரு.பி.எல்.யு.திசாநாயக்க
மேலதிக செயலாளர் (அபிவிருத்தி)
பெருந்தோட்ட கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு

திரு.டி.டப்ளியு.எஸ்.நாரங்கொட
பணிப்பாளர் நாயகம், இலங்கை தேயிலை சபை

திரு.ஹசித்த டி அல்விஸ்
பணிப்பாளர் (ஊக்குவிப்பு), இலங்கை தேயிலை சபை

திரு.பி.டி.பெர்னாந்து
பணிப்பாளர் நாயகம், வர்த்தக திணைக்களம்

### தனியார் துறை

திரு.மலிங்க குணதிலக்க
பொதுச் செயலாளர்
இலங்கை பெருந்தோட்ட கைத்தொழிலாளர் சங்கம்

திரு.ரவி அபேவர்தன
அங்கத்தவர் - தனியார் தேயிலை கைத்தொழிலாளர் உரிமையாளர்களின் சங்கம்

திரு.அனில் குக்
தலைவர், கொழும்பு தரகவர்கள் சங்கம்

திரு.ரோகான் அதுகோரல
பொறுப்பாளர், தேசிய போட்போலியோ அபிவிருத்தி **(UNOPS)**

கலாநிதி.எஸ்.பி.டி.ஜீ.ஜயவர்தன
தலைவர் தேயிலை ஆராய்ச்சி சபை

திரு.நெவில் ரத்நாயக்க
தலைவர்
இலங்கை சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி சங்க சம்மேளம்

கலாநிதி காமினி அபேவிக்ரம
முகாமைத்துவப் பணிப்பாளர்
பெசிலர் தேயிலை ஏற்றுமதி (தனியார் கம்பனி)

ஜனாப் முபாடெல் ஜபார்தீன்
முகாமைத்துவப் பணிப்பாளர், ஜபார்தீன் நிறுவனம்

திரு. ரோமாஸ் மொராயஸ்
பணிப்பாளர், பின்லேஸ் கொழும்பு தனியார் கம்பனி

திரு.ஜயந்த கருணாரத்ன
பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்
இம்பிரியல் டீஸ் (தனியார்) கம்பனி

திரு.மலிக் பெர்னாந்து
பணிப்பாளர் - எம்.ஜே.எப் குறுப் ஒப் கம்பனி

திரு.ரோகான் பெர்னாந்து
பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர், எச்.வி.ஏ.குறுப் ஒப் கம்பனி

திரு.நிராஜ் டிமெல்
பணிப்பாளர் நாயகம், பேன் ரிஸ் தனியார் கம்பனி

ஜனாப் டியாப் அக்பார் அலி
பணிப்பாளர் வ.ப – அக்பார் என்ட் கம்பனி

திரு.அச்சி டி சில்வா
முகாமைத்துவ பணிப்பாளர் - யூனிலிவ லங்கா கம்பனி

# சிரேஷ்ட முகாமைத்துவ பணிப்பாளர் சபை

| | |
|---|---|
| பணிப்பாளர் நயாகம் | திரு.எச்.டி.ஹேமரத்ன (2012 ஜுலை 23 வரை)<br>திரு.டி.டப்ளியு.நாரங்கொட (2012 ஒக்டோபர் 17 தொடக்கம்) |
| பணிப்பாளர் (ஊக்குவிப்பு) | திரு.ஏ.எச்.டி அல்விஸ் |
| தேயிலை ஆணையாளர் | திரு.ஈஏ.ஜெ.கே.எதிரிசிங்க |
| உதவிப் பணிப்பாளர் நாயகம் (நிருவாகம்) | திரு.எஸ்.ஐ.சி.பெரேரா |
| உதவிப் பணிப்பாளர் நாயகம் (நிதி) | திருமதி.ஏ.டி.டப்ளியு.பண்டாரகே |
| பதில் பிரதம உள்ளக கணக்காய்வாளர் | திரு.எச்.டி.கே.ஜயசிங்க |

# தலைவரின் வாழ்த்துச் செய்தி



2011ஆம் அண்டு டிசெம்பர் மாதத்தின் இலங்கை தேயிலை சபையின் தலைவராக நியமிக்கப்பட்ட வேளையில் குறைந்த செலவில் போட்டிகரமான உற்பத்தியினை மேற்கொள்ளும் சவாலைப் போன்று உற்பத்தித் திறனும் குறைவடைந்திருந்தமை, நவீனமயப்படுத்தல் உட்பட முதலீடுகளின் பற்றாக்குறையின் காரணமாக கீழ்மட்டத்திலான பிரச்சினைகள் காரணமாகவும் போட்டிகரமான கோளமய சந்தையில் பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொண்ட கைத்தொழிலைப் பொறுப்பேற்க வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது.

வெளித்தோற்றத்தில் காணப்பட்ட நிலைமை இதுவாக இருந்ததுடன், தேயிலை சபையின் உள்ளகத்தில் பணியாளர் சபை பற்றாக்குறை மற்றும் செயற்றிறன் மிக்க தகவல் தொழில்நுட்ப முறைகளின்றிக் காணப்பட்ட போதிலும், தொடர்ந்தும் அதிகரித்துச் செல்லும் தேயிலைக்கான கேள்வியினை நிரப்ப பாரிய சிரமங்களை மேற்கொண்ட நிறுவனமாகும். இதனால், இலங்கை தேயிலை சபைக்கு ஊழியர்களைச் சேர்த்துக் கொள்வதை தடைவிதித்து நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதுடன், வழக்கினை சமாதானப்படுத்தி அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக செயற்பாடுகளை மேற்கொண்டமை தொடர்பிலும் கணனி மென்பொருள் கம்பனியுடன் மீளக்கலந்துரையாடி நிறுவனத்தின் தற்போதைய தேவைகளுக்கு ஏற்றவாறு தகவல் தொழில்நுட்ப முறைமையினைப் பெற்றுக் கொள்வது தொடர்பிலும் துரித கவனத்தைச் செலுத்த வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது. இதற்கு முன்னர் இருந்த தலைவரின் பதவிக் காலத்திற்குள் பல வருடங்களாக மறுசீரமைக்கப்படாத கட்டணங்கள் மற்றும் அறவீட்டு வரிகளை அதிகரித்தன் மூலம் போதியளவு நிதியின்மை தொடர்பிலான பிரச்சினைக்குத் தீர்வு வழங்க எனக்கு முடிந்ததுடன், அவ்வாறு கட்டணங்கள் மற்றும் வரி மறுசீரமைக்கப்படாதிருப்பின் மேலே குறிப்பிடப்பட்ட எந்தவொரு பணியினையும் மேற்கொள்ள முடியாதநிலை ஏற்பட்டிருக்கும்.

மீளாய்வுக்கு உட்படுட்ட ஆண்டுக்குள் தேயிலைக் கைத்தொழிலை பிரதான நிறுவனமான அதன் சகல தரப்பினர்களினதும் பங்கேற்புடன் அமுலில் இருந்த சகல சட்டஒழுங்கு விதிகள் மற்றும் கோவைகளை மீளாய்வுக்கு உட்படுத்தி இலங்கை தேயிலை சபையினால் வெற்றிகரமாக இது தொடர்பான பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன. புதிய தேயிலை சட்டவரைபு அமைச்சு மற்றும் சட்ட வரைஞர் திணைக்களத்தினால் தொடர்ந்தும் மேற்பார்வைக்கு உட்படுத்தப்படுகின்றது. ஆண்டுக்குள் அமுலில் இருந்த சட்ட ஒழுங்குகள் மற்றும் கோவைகள் தொடர்பில் மிகுந்த கவனத்துடன் அமுல்படுத்தப்பட்டமையினால் உற்பத்திச் சந்தர்ப்பத்தைப் போன்று விற்பசைன் சந்தர்ப்பங்களும் தயாரிக்கப்பட்ட தேயிலை வகைகளின் பண்புசார் தரத்தை சிறந்த முறையில் மேற்பார்வைக்கு உட்படுத்த முடிந்தது. மானிய உதவி, விவசாயத் திட்டங்களில் பயன்களைப் பெறும் தரப்பினர்களில் வரையறுக்கப்பட்ட பங்கேற்புகள் காரணமாக கைத்தொழிற்சாலை நவீனமயப்படுத்தல் மற்றும் மீள்செய்கை தொடர்பிலான அபிவிருத்திச் செயற்பாடுகளில் பாரிய முன்னேற்றங்களை காணமுடியவில்லை. அறுவடைக்குப் பின்னரான சேதங்களைக் கட்டுப்படுத்துவது போன்று தேயிலைக் கைத்தொழிற்சாலைகளில் அமுல்படுத்தப்படும் சிறந்த உற்பத்திப் பயன்பாடுகளை மேற்பார்வைகளைப் பலப்படுத்துவம் வகையில் “பி.லிப் 60” வேலைத்திட்டம் தேயிலை ஆணையாளர் திணைக்களத்தினால் அமுல்படுத்தப்பட்டள்ளது.

கோளமய தேயிலை சந்தையில் போட்டியிடுவதற்காக இலங்கை தேயிலையினை கோளமயவகையில் ஊக்குவிக்கக் கூடியவாறு சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட வியூக முறைகள் காணப்படுகின்றனமை அத்தியவசியமாகும். இதற்காக நிதி சேகரிப்பு நோக்குடன் 2010 ஒக்டோபர் மாதத்தில் ஊக்குவிப்பு மற்றும் விற்பனை அறவீட்டு வரி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டங்களைப் போன்று இந்நிதியினை பயன்படுத்தும் நோக்குடன் அமைச்சரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.
இதன் மூலம், 2012ஆம் ஆண்டு இத்தொடர்பு சாதன வர்த்தகத்தை அமுல்படுத்துவதற்கான இலக்கு கொண்ட சந்தையினை இனங்கண்டு விளக்கமான விற்பனைத் திட்டங்களை வகுப்பதற்கும் பொருத்தமான தொடர்புசாதன தரப்பினர்களைத் தேர்ந்தெடுத்து இவ்வர்த்தகத்தினை விருத்தி செய்தல் மற்றும் அமுல்படுத்துவதற்காகவும் உரிய செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் இலங்கைதேயிலை சபையினால் வர்த்தக விளம்பரம் தொடர்பில் முகவர் நிறுவனங்களின் சேவையினைப் பெற்றுக் கொள்வதற்காகவும் பெறுகை செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுவதுடன் எதிர்வரும் ஆண்டில் தேர்ந்தெடுப்புக்களை பூர்த்தி செய்வதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. மேலும், இலங்கைதேயிலை சபையினால் சகல ஏற்றுமதி சந்தை தொடர்பாகவும் மீளாய்வுக்கு உட்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், மூன்று ஆண்டு கால வியூக விற்பனைத் திட்டங்களை வகுப்பதற்கான பின்னணிகளை ஆய்வுக்கு உட்படுத்துவதற்கான பணிகள் வகுக்கப்பட்டுள்ளன. கோளமய சந்தையில் 100% சுத்தமான இலங்கை தேயிலையாக உறுதிப்படுத்தும் "சிங்க இலச்சினை" சூழலுக்குப் பொருத்தமானவாறு ஓசோன் இலச்சினை மற்றும் G1 ஏழு நாடுகளின் வலய இலச்சினைக்காக தரக்குறிப்புக்களை பதிவு செய்யும் பணிகளிலும் இலங்கை தேயிலை சபை ஏற்கனவே ஈடுபட்டுள்ளது.

நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் 30 ஆண்டுக்கு மேற்பட்ட காலம் தொடக்கம் புனரமைக்கப்படாதிருந்த இலங்கை தேயிலை சபையின் செயலாளர் அலுவலகத்தின் கட்டடத்தை புனரமைக்கும் பணிகள் ஆண்டுக்குள் ஆரம்பிக்கப்பட்ட மற்றுமொரு பாரிய பணியாக அமைந்ததுடன், உலகில் அதிசிறந்த தேயிலையாக "இலங்கை தேயிலை" நட்பெயருக்குப் பொருந்தக்கூடியவாறு அதிஉயர்ந்த தரத்தினைக் கொண்ட கட்டிடத்தில் அமைந்துள்ள பணிப்பாளர் சபை கூட்ட மண்டபம், அதிதிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மண்டபம் மற்றும் விற்பனை மத்திய நிலையம் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன.

உலகின் அதிசிறந்த தேயிலை உற்பத்தியாளராக இலங்கை தொடர்ந்தும் கருதப்படுவதுடன், கென்யா மற்றும் சீனா போன்ற இக்கைத்தொழிலில் புதிதாக பிரவேசித்த நாடுகள் காரணமாக இலங்கை தேயிலைத் துறையில் இலங்கையின் தரத்தினை சவாலுக்கு உட்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் உரிமையாக்கிக் கொள்ளப்பட்ட முதலாம் இடத்துடன் ஒப்பீடு செய்யும் போது போதியளவு சீனாவுக்கு ஓரளவு பின்னணியில் மற்றும் கென்யாவுக்கு குறிப்பிடத்தக்களவு கீழ் மட்டத்தில் தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் மூன்றாம் இடத்தை இலங்கை பெற்றுள்ள போதிலும், கோளமய ஏற்றுமதிப் பெறுமதிக்கமைய முதலாம் இடத்தில் உள்ள எமது நாட்டில் இச்சிரேஷ்ட கைத்தொழிலை மீளமீள வலியுத்தப்படுவது பெறுமதி சேர்க்கப்பட்டதன் அடிப்படையில் எமது வியூக முறைகளைப் பலப்படுத்துதல் அத்தியாவசியமாகும். பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை ஏற்றுமதி ஊக்குவிப்புக்காக வியூகங்களைப் பலப்படுத்தல் மற்றும் அதற்கு இணைவாக தேயிலை மீள்செய்கையின் போது, வெற்றிடம் நிரப்பும் போது மற்றும், பசளையிடும் போது அதிஉயர்தரத்திலான தேயிலை வகைகள் பயன்படுத்தப்படுகின்றமையும் போதியளவு நிதி மோசடி செய்வதனால் அறுவடையினை மேம்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

இலங்கை தேயிலை செய்கையில் ஈடுபடுட்டுள்ள முழுமையான இலங்கை பொருளாதாரத்தின் மிக முக்கியத்துவம் வாய்ந்த பலம்பொருந்திய சக்தியாக மாற்றம் பெற்றுள்ளது. இலங்கை தேயிலை கைத்தொழில் நாட்டில் உள்நாட்டு உற்பத்தியைப் போன்று அரச வருமானம் தொடர்பிலும் பாரிய பங்களிப்புக்களைக் காண்பிக்கின்றது. 2012ஆம் அண்டின் ஏற்றுமதி அளவு இதன் கொள்ளளவு 0.7% குறைவடைந்துள்ளதுடன், 2011ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது உழைப்புகளில் 9.6% அதிகரிப்புக் காண்பிக்கப்படுகிறது. இதன்மூலம், நாட்டிற்கு பெறப்பட்ட அன்னியநாட்டு செலாவணி உழைப்பு 1,414 அமெரிக்க டொலர்களாகும். குடந்த ஆண்டு பூராகவும் வருடாந்த தேயிலை உற்பத்தி 0.3% விருத்தியடைந்திருப்பது உற்பத்தியளவு 328.4 கிலோ கிராம் மில்லியனை எட்டும் வகையிலாகும்.. இலங்கை தேயிலை செய்கை மேற்கொள்ளப்பட்ட மொத்த நிலத்தின் அளவு அன்னளவாக 221,929 ஹெட்டயர் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது அதிஉயரிய ஏலவிற்பனையாக டெம்பானாவிற்கு 2.88 அமெரிக்க டொலர் ஈட்ட முடிந்துள்ள போதிலும் ஒரு கிலோகிராமிற்காக சாதாரண ஏலவிற்பனை விலை 3.07 அமெரிக்க டொலராகக் காணப்படுகின்றமை விசேடமாக குறிப்பிட வேண்டிய விடயமாகும். 2012ஆம் அண்டில் இணைந்த ஏலவிற்பனை விலை ரூபா 391.64 ஆகும். இது 2011 ஆம் ஆண்டில் அறிக்கைப்-படுத்தப்பட்ட அதி-உயரிய சாதாரண விலையான ரூபா 359.89 தொடக்கம் அதிகரித்துச் செல்லும் சர்வகால அறிக்கையாகும். இலங்கை தேயிலையில் காணப்படும் அதிசிறந்த சுவை மற்றும் தரம் காரணமாக உலகில் அதிசிறந்த தேயிலையாகக் காணப்படுவதுடன், சம்பிரதாயபூர்வமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பொருளாகவும் அமைந்துள்ளது. இதனால், உலகின் ஏனைய பிரதான ஏலவிற்பனைகளைவிட கொழும்பு தேயிலை ஏலவிற்பனைகளின் விலைகள் உறுதியாகவே உயரிய பெறுமதியினை காண்பிக்கின்றது.

2012ஆம் ஆண்டில் தேயிலைக் கைத்தொழிலுக்கு பாதிப்புக்கள் ஏற்பட்ட ஆண்டாகக் காணப்பட்டதுடன், இலங்கை தேயிலைக்காக பலமிக்க சந்தை வாய்ப்பினைக் கொண்ட மத்தியகிழக்கைப் போன்று பொதுவாக கோளமய அடிப்படையில் மற்றும் விசேடமாக ஐரோப்பாவில் காணப்படும் நிதி/ பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக நிச்சயமற்ற நிலமைகள் காணப்பட்டன. தேயிலைக்காக பிரதான சந்தை செலாவணி வகையான அமெரிக்க டொலர் மற்றும் ஏனைய பிரதான அன்னியநாட்டு செலாவணி வகைகளுக்கு இணைவாக இலங்கையின் ரூபாவுக்கான அதிஉயரிய செலாவணி விகிதாசாரமும் இது தொடர்பில் சிறந்த அழுத்தங்களை ஏற்படுத்தவில்லை.

கோளமய முன்னேற்றங்களுக்கு ஏற்றவாறு மற்றும் அதன்மூலம் உயரிய தரத்தை வெற்றி கொள்வதற்காக நீடித்த நிலையான தரத்தினைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் இல்ஙகை தேயிலை சபை அதன் கொள்கைகள் மற்றும் கோவைகளைப் போன்று தேயிலைக் கைத்தொழிலுக்காக வழங்கப்பட்டுள்ள நிதி ஒத்துழைப்பு யோசனைத் திட்டங்கள் தொடர்பாக தொடர்ந்தும் மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. கௌரவ பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மற்றும் இவ்வமைச்சின் செயலாளரினால் வழங்கப்படும் வழிகாட்டல்கள் மற்றும் வழங்கப்படும் ஆலோசனைகனைப் போன்று பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்களின் பங்களிப்புக்களை பாராட்டுவதுடன், இது தொடர்பில் எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜனாகி குறுப்பு
தலைவர்
இலங்கை தேயிலை சபை

# அடிப்படை ஒப்பீட்டு சுட்டிகள்

**தேயிலை உற்பத்தி**

| | 2010 | 2011 | 2012 | ஆண்டின் புள்ளி விபர ஒப்பீடுகள்2011 Vs 2012 (%) |
|---|---|---|---|---|
| மொத்த தேயிலை உற்பத்தி (கிலோகிராம் மில்லியன்) | 331.4 | 327.5 | 328.4 | 0.3 |

**நில அமைவிடத்திற்கு அமைய வகைப்படுத்தல் (கிலோகிராம் மில்லியன்)**

| | 2010 | 2011 | 2012 | ஆண்டின் புள்ளி விபர ஒப்பீடுகள்2011 Vs 2012 (%) |
|---|---|---|---|---|
| உயர் | 79.1 | 78.2 | 73.6 | (5.9) |
| மத்திய | 56.1 | 52.6 | 52.6 | 0.0 |
| தாழ் | 196.2 | 196.7 | 202.1 | 2.7 |

**செயற்பாட்டு முறைகளுக்கு அமைய வகைப்படுத்தல் (கிலோகிராம் மில்லியன்)**

| | 2010 | 2011 | 2012 | ஆண்டின் புள்ளி விபர ஒப்பீடுகள்2011 Vs 2012 (%) |
|---|---|---|---|---|
| சம்பிரதாயம் (சேதன, அவசர மற்றும் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட தேயிலை) | 309.7 | 302.0 | 302.1 | 0.0 |
| சி.டி.சி | 18.4 | 22.6 | 23.3 | 3.1 |
| பச்சை தேயிலை விற்பனை | 3.3 | 3.0 | 3.0 | 0.0 |

**தேயிலை விற்பனை**

| | 2010 | 2011 | 2012 | ஆண்டின் புள்ளி விபர ஒப்பீடுகள்2011 Vs 2012 (%) |
|---|---|---|---|---|
| மொத்த தேயிலை விற்பனை – அளவு (கிலோகிராம் மில்லியன்) | 322.4 | 323.3 | 325.4 | 0.6 |
| மொத்த தேயிலை விற்பனை – அலகுகளின் விலை (ரூபா/ கிலோகிராம்) | 370.58 | 360.53 | 392.03 | 8.7 |

**விற்பனை அளவினை வகைப்படுத்தல்**

| | 2010 | 2011 | 2012 | ஆண்டின் புள்ளி விபர ஒப்பீடுகள்2011 Vs 2012 (%) |
|---|---|---|---|---|
| உயர் | 74.6 | 73.8 | 69.8 | (5.4) |
| மத்திய | 54.2 | 52.4 | 52.4 | 0.0 |
| தாழ் | 193.6 | 197.1 | 203.2 | 3.1 |

**அலகுகளின் விற்பனைக்கு அமைய வகைப்படுத்தல்கள் (ரூபா/ கிலோகிராம்)**

| | 2010 | 2011 | 2012 | ஆண்டின் புள்ளி விபர ஒப்பீடுகள்2011 Vs 2012 (%) |
|---|---|---|---|---|
| உயர் | 338.26 | 333.28 | 379.18 | 13.8 |
| மத்திய | 332.80 | 319.48 | 350.86 | 9.8 |
| தாழ் | 393.61 | 381.65 | 407.06 | 6.7 |

**தேயிலை ஏற்றுமதி**

| | 2010 | 2011 | 2012 | ஆண்டின் புள்ளி விபர ஒப்பீடுகள்2011 Vs 2012 (%) |
|---|---|---|---|---|
| மொத்த தேயிலை ஏற்றுமதி – அளவு (கிலோ கிராம் மில்லியன்) | 305.7 | 303.2 | 306.0 | 0.9 |

வகைகளுக்கு அமைய வகைப்படுத்தல் 2011 தொடக்கம் வகைப்படுத்தல் தொடர்கள் மாற்றமடைந்துள்ளதுடன் கறும், பச்சை மற்றும் தொழில்நுட்ப தேயிலையாக மூன்று வகைகளுக்கு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| | 2010 | 2011* | 2012* | ஆண்டின் புள்ளி விபர ஒப்பீடுகள்2011 Vs 2012 (%) |
|---|---|---|---|---|
| தொகை தேயிலை | 176.8 | கறு -298.8 | கறு -302.0 | 1.1 |
| தேயிலை பக்கர் | 89.8 | | | |
| தேயிலை பொதி | 25.7 | பச்சை -2.5 | பச்சை -2.4 | 4.0 |
| திமர் தேயிலை | 1.8 | | | |
| பச்சை தேயிலை | 2.8 | திமர்-1.9 | திமர் -1.6 | 15.8 |
| ஏனைய தேயிலை | 8.9 | | | |

| | 2010 | 2011* | 2012* | ஆண்டின் புள்ளி விபர ஒப்பீடுகள்2011 Vs 2012 (%) |
|---|---|---|---|---|
| மொத்த தேயிலை ஏற்றுமதி – பெறுமதி (ரூபா பில்லியன்) | 151.2 | 151.8 | 169.0 | 11.3 |

# நிலையியற் சபை பின்னணி



# 1 நிலையியற் சபை பின்னணி

01

நிலையியற் சபை பின்னணி

1975 இலக்கம் 17,1990 இல 44, 2003 இல 29 மற்றும் 2006 இல 44 கொண்ட சட்டத்தினால் மறுசீரமைக்கப்பட்ட 1975 இலக்கம் 14 கொண்ட இலங்கை தேயிலை சபைச் சட்டத்தின் 1976 ஜனவரி முதலாம் திகதி இலங்கை தேயிலை சபை தாபிக்கப்பட்டது. இச்சட்டத்தின் கீழ், தேயிலை சபையின் நோக்கமாக அமைந்தது இலங்கை தேயிலைக் கைத்தொழிலின் அபிவிருத்தி மேற்பார்வையைப் போன்று கோளமய ரீதியில் இலங்கை தேயிலை (சிலோன் டி) ஊக்குவிப்பதாகும். தேயிலை சபையை தாபிக்க முன்னர் அது தேயிலை பிரச்சார சபையாக அறிமுகப்படுத்தப்பட்டதுடன், தனியார் துறையி-னரால் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 1976ஆம் ஆண்டில் இத்தேயிலை பிரச்சார சபை பாராளுமன்றத்தினால் ஒழிக்கப்பட்டதுடன், தேயிலை கைத்தொழிலின் சக அதிகாரங்களும் கொண்டதாக தற்போது அமுலில் உள்ள இலங்கை தேயிலை சபையாக மாற்றியமைக்கப்பட்டது.

இலங்கை தேயிலை கைத்தொழிலுக்குரிய செயற்பாடுகளாக உற்பத்தி, புதிய பிரதேசங்களில் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளல் மற்றும் தேயிலை மீள் பயிர்ச்செய்கை, பழைய தேயிலைத் தோட்டங்களை மீள்கட்டமைத்தல், தேயிலைக் கைத்தொழிற்சாலைகளை தாபித்தல் மற்றும் அவற்றின் செயற்பாட்டுப் பணிகள் போன்ற மேற்பார்வை பணிகளுக்கான பொறுப்புக்கள் இவ்வதிகார சபையிடம் காணப்படுகின்றது.

தேயிலை விற்பனை செய்யப்படும் சந்தர்ப்பத்தில் தரத்தினை மேற்பார்வை செய்தல், தேயிலை கப்பலேற்றல், மேற்பார்வை, தேயிலை தரகர்களின், கலப்புக்களை மேற்கொள்வோர் மற்றும் ஏற்றுமதியாளர்களின் களஞ்சிசாலைக் கட்டடத்தொகுதிகளின் பரிசோதனைக்கு உட்படுத்தல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு மிக்கதாக தேயிலையினைக் கலத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் தொடர்பான ஆலோசனைச் சேவைகளை வழங்குதல் ஆகிய பணிகளை விரிவுபடுத்துவதற்காக இலங்கை தேயிலை சபை திட்டங்களை வகுத்துள்ளது. இதற்கு மேலதிகமாக தேயிலைத் தோட்ட முகாமைத்துவம் மற்றும் தேயிலை உற்பத்தியின் மற்றும் விற்பனை ஈடுபடும் சகல நிறுவனங்கள மற்றும் அமைப்புக்களை மேற்பார்வை செய்தல், நிறுவகித்தலும், வழிகாட்டல்களை மேற்கொள்ளலும் தேயிலை சபையினால் மேற்கொள்ளப்படுகின்றன.

கோளமய தேவைகளை நிறைவேற்றுவதற்காக தற்போதைய சட்டங்கள் மற்றும் கோவைகளுக்கு இணைவாக கைத்தொழிலின் தேவைக்கு ஏற்றவாறு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன. தேயிலைக் கைத்தொழிலுடன் தொடர்புபட்ட மேற்பார்வை பணிகள், அபிவிருத்திப் பணிகள் மற்றும் இலங்கை தேயிலை (சிலோன் டி) உள்நாட்டு ரீதியில் மற்றும் வெளிநாட்டு ரீதியில் ஊக்குவிப்பதற்குரிய சகல விடயங்கள் தொடர்பிலும் கட்டுப்பாட்டு அதிகாரங்கள் தேயிலை சபையிடம் காணப்படுகின்றது. விசேடமாக தேயிலை உற்பத்தி மற்றும் தரப்பாதுகாப்பு, உள்நாட்டின் விநியோகம் மற்றும் தேயிலை ஏற்றுமதியைப் போன்று வெளிநாட்டுப் பிரச்சாரப் பணிகள் தொடர்பாகவும் மேற்பார்வைப் பணிகள் தேயிலை சபையினால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றன. அபிவிருத்தியுடன் கூடிய பணிகளுக்கு இடையே தேயிலை கைத்தொழிற்சாலைகளை விருத்தி செய்வதற்காக வழங்கப்படும் மானிய உதவிகள் தொடர்பில் மேற்பார்வைகளை மேற்கொள்ளல், கொள்கை வகுப்பு மற்றும் தேயிலை வகைகளின் தரப்பாதுகாப்பு தொடர்பில் உரிய பணிகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. தேயிலை விற்பனை பணிகள் மற்றும் ஊக்குவிப்புச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல், தேயிலை தொடர்பான புள்ளிவிபரங்களை சேகரித்தல் மற்றும் வரைவிலக்கணப்படுத்தல் தொடர்பிலான பொறுப்புக்களைக் கொண்டிருத்தலும், ஊக்குவிப்புப் பணிகளில் அடங்குகின்றன.

# 01 இலங்கை தேயிலை சபைக் கட்டமைப்பு

நிலையியற் சபை பின்னணி

## 1.1. பிரதான செயலாளர் அலுவலகம்

தேயிலை சபையின் நிருவாகம் மற்றும் நிதிச் செயற்பாடுகள் மற்றும் தேயிலைக் கைத்தொழிலில் மேற்பார்வை, அபிவிருத்தி மற்றும் ஊக்குவிப்பு தொடர்பில் சகல செயற்பாடுகளும் முழுமையாக மேற்பார்வைக்கு உட்படுத்தும் பொறுப்பு பிரதம செயலாளர் அலுவலகத்திற்குக் காணப்படுகின்றது. உதவி சேவைகளாக முகாமைத்துவப் பணிகள், நிருவாகம், நிதி, மேற்பார்வை, ஊக்குவிப்பு, அபிவிருத்தி, புள்ளிவிபரவியல் உள்ளகக் கணக்காய்வு, செயலாளர் அலுவலகம், இரசாயனப் பகுப்பாய்வு மற்றும் ஆய்வுப் பணிகள், தகவல் தொழில்நுட்பம், நூலகம் போன்ற பல்வேறுபட்ட செயற்பாடுகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

### 1.1.1. நிருவாகத்துறை

உதவிப் பணிப்பாளர் நாயகம் (நிருவாகம்) இன் கீழ் நிருவா-கப் பிரிவு முழுமையான மானிடவள முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி, பெறுகை மற்றும் களஞ்சியசாலை, பராமரிப்பு, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் போக்குவரத்து ஆகிய பணிகளுக்காக பொறுப்புக்களை நிறைவேற்றுகின்றது.

### 1.1.2. நிதிப் பிரிவு

இலங்கை தேயிலை சபையின் முழுமையான நிதி நிருவா-கம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பில் நிதிப் பிரிவு பொறுப்பாக செயற்பட வேண்டும். நிதிப்பிரிவின் ஏனைய பிர-தான பணிகளாக அமைவது சபையின் நிதிக் கொள்கைகளை வகுப்பதற்காக பரிந்துறைகளை வழங்குதல், வருடாந்த வரவு செலவுத் திட்டம், வருடாந்த நிதி வெளிப்பாடுகள், மாதாந்த கணக்கு மற்றும் தவணை அறிக்கைகளைத் தயாரித்தல், பொருள் ஆவணப் பராமரிப்பு, வருடாந்த பொருள் பரிசோதனைகளை மேற்கொள்ளுதல் மற்றும் கணக்காய்வாளருக்கு வருடாந்த கணக்கினைச் சமர்ப்பித்தல்.

## 1.2. தேயிலை ஆணையாளர் பிரிவு

தேயிலை பயிர்ச் செய்கை, தேயிலை உற்பத்தி மற்றும் பண்புசார் விருத்தி தொடர்பிலான மேற்பார்வைப் பணிகளுக்குரிய சகல பணிகளும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. ஏழு பிரதேச அலுவலகங்களைக் கொண்ட வலையமைப்பின் ஊடாக இப்பிரிவு செயற்படுகின்றது. தேயிலை ஆணையாளர் பிரிவின் கீழ் காணப்படும் தேயிலை ஏற்றுமதிக் கிளையினால் தயாரிக்கப்படும் தேயிலை வெளியேற்றம், களஞ்சியப்படுத்தல், பொதியிடல், தேயிலை ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொடர்பிலான சகல விடயங்களுக்கும் பொறுப்புக் கூறப்படுகின்றது.

## 1.3. தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு

இலங்கை தேயிலை உள்நாடு மற்றும் சர்வதேச ரீதியில் ஊக்குவிப்புப் பணிகளுடன தொடர்புபட்ட சகல விடயங்களுக்குமாக வெளிநாட்டு அலுவலகங்களின் மூலம் உதவிகள் வழங்கப்படுகின்றன. இதன்மூலம், காலத்திற்கு காலம் சந்தை புலனாய்வுத் தகவல்கள் வழங்கப்படுவதுடன், இது கைத்தொழிலில் காணப்படும் கேள்விக்கு அமைவாக மேற்கொள்ளப்படுகின்றது. உள்நாட்டுத் தேயிலையைப் போன்று வெளிநாட்டுத் தேயிலை நுகர்வோருக்காக பயன்மிக்க தேயிலை விற்பனை கருமபீடம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

தேயிலை ஊக்குவிப்புப் பிரிவின் கீழ் காணப்படும் தேயிலை சுவை பரீட்சார்த்தப் பிரிவு, பிரபல தேயிலை சுவை பரீட்சிப்பாளர்களைக் கொண்ட சுயாதீன சபை ஊடாக தேயிலை வகைகளை குறைந்தபட்சத் தரம், சிங்க இலச்சிணை தொடர்பாக கவனம் செலுத்தி, தரத்தைப் பரிசோதனை செய்தல் மற்றும் ஏனைய வகைகளைக் கொண்ட தேயிலை பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான பொறுப்புக்கள் இப்பிரிவுக்கு உள்ளது. அத்துடன், ஊடகங்கள் மூலம் பிரச்சாரங்களை மேற்கொள்ளல், உணவு வகைகள் தொடர்பாக சர்வதேச சந்தை விற்பனை கூடங்களில் பங்கேற்றல், விற்பனை நாமத்தினை ஊக்குவிக்கும் திட்டங்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதர அலுவலகங்களுடன் இணைந்து வெளிநாட்டு தேயிலை ஊக்குவிப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் வர்த்தக உத்தியோகத்தர்களின் உதவியுடன் பொதுப் பிரச்சாரப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சர்வதேச தேயிலை சபை மற்றும் தேயிலை சங்கத்துடன் FAO இன் தேயிலை தொடர்பான அரசாங்கங்களுக்கு இடையிலான குழுக்கள் போன்றவற்றுடன் இப்பிரிவு இணைந்து செயற்படுகின்றது.

## 1.4. பகுப்பாய்வு இரசாயன கூடம்

தேயிலை வகைகளின் பண்புசார் தரத்தினைப் பேணுவதற்காக உயர்தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி தேயிலை தொடர்பான இரசாயன நுண்ணுயிரியல் மற்றும் கிருமிநாசினி தொடர்பாக பரிசோதனைகள் நடத்தலும், தரச் சான்றிதழ்களை வழங்குதலும் இப்பிரிவிற்கான பொறுப்புக்களாகும். இதற்கமைய சகல பிரிவுகளிலும் தரச்சான்றிதழ்கள் தொடர்பில் பங்களிப்புக்கள் வழங்கப்படுவதுடன், இதன் மூலம் “சிலோன் டி” வகைகளில் நற்பெயரைப் பாதுகாப்பதற்காக உதவுதல்.

# கைத்தொழிலில் பக்கத் தோற்றம் - 2012













# 2. இலங்கை தேயிலை சுட்டி

திருப்திகரமான காலநிலைக்கு மேலதிகமாக சுதந்திர உள்ளீடு மற்றும் அது சார்ந்த துறையினை முன்னெடுத்து சிறந்த விவசாய பயன்பாடுகளைக் காரணமாகக் கொண்டு ஆண்டுக்குள் தேயிலை உற்பத்தி மேம்படுத்தப்பட்டன. பசளை மானிய உதவியினை வழங்கும் பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்தமையினால் ஆண்டின் வெற்றிக்கு பங்களிப்புகள் கிடைத்தன. இலங்கை தேயிலை உற்பத்தி 328.4 ஆக காணப்பட்ட போதிலும், 2011ஆம் அண்டில் உற்பத்தி செய்யப்பட்ட 327.5 கிலோ கிராமிற்கு இணைவாக 0.3% அதிகரிப்பு காண்பிக்கப்பட்டுள்ளது. தற்போது அறுவடை, பயன்பாடுகள் தேயிலை உற்பத்தியின் அளவு 197,025 ஹேக்டயர்களில் பயிரிடப்பட்டுள்ளது. 2012ஆம் ஆண்டில் தேயிலை உற்பத்தி ஹெக்டயருக்கு 1662 தொடக்கம் ஹெக்டயருக்கு 1667 வரை அதிகரித்துள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 31.5 ரூபாவாக அதிகரித்து ஆண்டிறுதியில் 392.03 ரூபாவாக கொழும்பு தேயிலை ஏலவிற்பனையில் சாதாரண விலையினை நிலைப்படுத்தி 2012 பெப்ரவரி மாதத்தில் இலங்கை ரூபாவின் பெறுமதி குறைவு, தேயிலை உற்பத்தி மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு பெரும் பயன்களுக்கு காரணமாக அமைந்திருந்தது.

## 2.1.தேயிலைக் காணிகளின் பரவலாக்கம்

இலங்கையில் தற்போது மதிப்பீடு செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட தேயிலை காணிகளின் அளவு 221,969*[1] ஹெக்டயர் என மறுசீரமைக்கப்பட்டுள்ளது. தேயிலை காணிகளின் முகாமைத்துவ ஒப்பளவுகளுடன் தேயிலைக் காணிகள் வகைப்படுத்தல்கள் தனியார்துறை (59%), நிலையியற் சபை (37%) அரச துறை (4%) என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேயிலை செய்கை பல மாவட்டங்களில் விசேடமாக ஈரலிப்பு வலயங்களில் செய்கை பண்ணப்பட்டுள்ளது. தேயிலை செய்கைக்காக பொருத்தமான காலநிலையினைக் காரணமாகக் கொண்டு இப்பிரதேசங்களில் விரிவடைந்துள்ளன. தேயிலை செய்கை அமைவிடங்களுக்கு அமைய வகைப்படுத்தல் 2.1 அட்டவணையின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது. தேயிலைக் காணிகளின் அமைவிடத்தை அடிப்படையாகக் கொண்டு உயர், மத்தி, தாழ் என தேயிலை செய்கையின் பிரதேசங்களில் 3 வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

2.1 வரைபடம் : தேயிலைக் காணிகளின் உரிமை




2.1 அட்டவணை

| அமைவிடம் | அளவு | விகிதாசாரம் |
|---|---|---|
| உயர் | 41137 | 18.5 |
| மத்தி | 71018 | 32.0 |
| தாழ் | 109814 | 49.5 |
| மொத்தம் | 221969 | 100.0 |

*1 சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் எண்ணிக்கை - 2005 சிறுதேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபை மற்றும் புள்ளி விபரவியல் ஆவணப்படுத்தல் திணைக்களம

02

கைத்தொழிலில் பக்கத் தோற்றம்

## 2.2. இலங்கை தேயிலை உற்பத்தி

2012 ஆம் ஆண்டின் முதலாம் பகுதிக்குள் தேயிலை செய்கை பண்ணப்பட்ட பிரதேசங்களில் காணப்பட்ட பொருத்தமான காலநிலையினைக் காரணமாகக் கொண்டு ஆண்டுக்கான தேயிலை உற்பத்தி 328.4 மில்லியன் கிலோகிராம் வரை அதிகரித்தது. 2011ஆம் அண்டில் 327.5 மில்லின் கிலோகிராமாக காணப்பட்டதற்கு இணைவாக 2012ஆம் ஆண்டில் தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளது.

இலங்கையின் பல்வேறுபட்ட அமைவிடங்களுக்கு அமைய தேயிலை பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கமைய கூடுதலான அளவு தாழ்ந்த பிரதேசங்களில் செய்கை பண்ணப்படும் தேயிலையாகும். இது கடல் மட்டத்தில் இருந்து 600 மீற்றர் பரம்பலில் அமைந்துள்ள காணிக-ளில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுவதுடன், கட்டாயமாக அதிசிறந்த சுவை நிறம் கொண்டதாக இது அமைந்துள்ளது.

இவ்வாறு அதிக கூடுதலான வருமானம் மற்றும் கேள்விகளைக் காரணமாகக்

2.2 அட்டவணை : அமைவிடத்திற்கு அமைய மொத்த தேயிலை உற்பத்தி

| அமைவிடம் | உற்பத்தி (கிலோ கிராம்) |
|---|---|
| உயர் | 73,642,586.8 |
| மத்தி | 52,633,128.7 |
| தாழ் | 202,121,318.3 |
| மொத்தம் | 328,397,033.7 |

கொண்டு ஏற்பட்ட அதிகரிப்பின் மூலம் தாழ்ந்த பிரதேச தேயிலை அளவு கடந்த காலத்தில் அதிகரித்துள்ளது. இதேே-வளை, உயர்ந்த பிரதேசம் தேயிலை 1,200 மீற்றர் உயர் பிரதேசங்களில் பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் அவற்றுக்குப் பொருத்தமான சுவை, மற்றும் நறுமணத்துடன் அதி-உயரிய தரத்தினைக் கொண்ட தேயிலையாக கருதப்படுகின்றது.

தாழ்ந்த பிரதேசங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும் தேயிலை, தேசிய தேயிலை உற்பத்தி மூன்றில் இரண்டு (62%) இற்கு கூடுதலான அளவிற்காகப் பங்களிப்பு செய்வதுடன், உயர், மத்தி பிரதேசங்களில் தேயிலை வகைகளுக்கு பங்களிப்புகள் தொடராக 22% மற்றும் 16% ஆகும்.

### 2.2.1.மாதாந்த தேயிலை உற்பத்தி

வரை படத்தின் மூலம் காண்பிக்கப்பட்டிருப்பது 2012ஆம் ஆண்டின் மொத்த தேயிலை உற்பத்தியாகும். 2012ஆம் ஆண்டில் பெப்ரவரி தொடக்கம் ஜுலை வரை மொத்த மாதாந்த தேயிலை உற்பத்தி கடந்த ஆண்டுக்கு இணைவாக ஓரளவு வீழ்ச்சியைக் காண்பித்துள்ளது. இருப்பினும், ஆண்டின் இறுதிப் பகுதியில் இது அநேகமாக தழுவப்பபட்டுள்ளது. 2.2 அட்டவணையின் மூலம் காண்பிக்கப்பட்டிருப்பது இரு வருடங்களுக்காக அமைவிடத்திற்கு அமைய மாதாந்த தேயிலை உற்பத்தியாகும்.

2.2 அட்டவணைக்கு அமைய மாதாந்த தேயிலை உற்பத்தி



## 2.2.2.விவசாய காலநிலை மாவட்டங்களுக்கு அமைய பகுப்பாய்வு

2.3 அட்டவணையின் மூலம் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டின் பல்வேறுபட்ட விவசாய காலநிலை மாவட்டங்களில் உற்பத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது புள்ளிவிபரங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

தொடராக 57 கிலோ கிராம் மில்லியன மற்றும் 52.1 கிராம் மில்லியன உற்பத்தி செய்து இரத்தினபுரி மற்றும் காலி விவசாய காலநிலை மாவட்டங்களுக்கு இடையே கூடுதலான உற்பத்தியினைக் கொண்ட மாவட்டமாகப் பதிவாகியுள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2012ஆம் ஆண்டில் மேற்கு உப மாவட்டத்தில் சகல விவசாய காலநிலை மாவட்டங்களை அதிஉயரிய மட்டத்திலான தேயிலை உற்பத்தி காண்பிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 2.3 : விவாசாய - காலநிலை மாவட்டங்களுக்கமைய தேயிலை உற்பத்தி

| விவசாய காலநிலை மாவட்டம் | ஊற்பத்திப் பெறுமதி (மெ.தொ) | | வித்தியாசம் | |
|---|---|---|---|---|
| | 2012 | 2011 | அளவு (மெ.தொ.) | % |
| A. நுவரெலியா | 3,564 | 4,663 | (1,099) | -24% |
| B. மேற்கு | | | | |
| 1. ரம்பொட | 3,139 | 2,466 | 673 | 27% |
| 2. பூண்டுலோயா | 2,498 | 3,370 | (872) | -26% |
| 3.அகரபதன | 6,834 | 8,118 | (1,284) | -16% |
| 4. நானுஓயா/லிதுல/தலாவாகலை | 1,820 | 10,445 | 1,375 | 13% |
| 5. பதன/ கொடகல | 6,232 | 5,621 | 611 | 11% |
| 6. ஹட்டன் / திக்ஓயா | 8,595 | 9,115 | (520) | -6% |
| 7. பொகவந்தலாவ | 5,410 | 8,158 | (2,748) | -34% |
| 8. அப்கொடி / மஸ்கெலிய | 8,541 | 8,205 | 336 | 4% |
| முழு மேற்கு | 53,069 | 55,497 | (2,428) | -4% |
| C. மத்திய | | | | |
| 1.வட்டவல/கினிகத்ஹேன/நோட்டன்பிரிஜ் | 2,837 | 2,133 | 704 | 33% |
| 2. புசல்லாவ / ஹேவாகெட | 6,548 | 8,305 | (1,757) | -21% |
| 3. கொத்மலை | 2,201 | 915 | 1,286 | 141% |
| 4. கம்பொல/நாவலபிட்டிய/தொலஸ்பாகே | 14,523 | 14,397 | 126 | 1% |
| 5. நிலம்பே/ஹந்தானை/கலஹ | 1,255 | 1,798 | (543) | -30% |
| 6. கடுகன்னாவ | 7,796 | 6,027 | 1,769 | 29% |
| 7. மடுகேலே/நாகஸ்/ரன்கல | 5,458 | 4,348 | 1,110 | 26% |
| 8. ஹுன்ஸ்கிரிய/நாகல்ஸ்/யக்தெஸ்ஸ | 994 | 2,781 | (1,787) | -64% |
| 9. பலாங்கொட/ரக்வானை | 3,569 | 9,534 | (5,965) | -63% |
| முழு மத்திய | 45,180 | 50,238 | (5,058) | -10% |
| D. உடபுஸ்ஸல்லாவ | | | | |
| 1. உடபுஸ்ஸல்லாவ/ஹல்கிரத்ஓய | 4,870 | 4,797 | 73 | 2% |
| 2. மதுரட | 2,827 | 1,784 | 1,043 | 58% |
| முழு உடபுஸ்ஸல்லாவ | 7,698 | 6,581 | 1,117 | 17% |

02

கைத்தொழிலில் பக்கத் தோற்றம்

அட்டவணை 2.3 : விவாசாய - காலநிலை மாவட்டங்களுக்கமைய தேயிலை உற்பத்தி

| விவசாய காலநிலை மாவட்டம் | ஊற்பத்திப் பெறுமதி (மெ.தொ) | | வித்தியாசம் | |
|---|---|---|---|---|
| | 2012 | 2011 | அளவு (மெ.தொ.) | % |
| E. ஊவா | | | | |
| 1. கொஸ்லந்த/ ஹல்தும்முல்ல | 314 | 616 | (302) | -49% |
| 2. ஹபுதலே | 3,771 | 4,822 | (1,051) | -22% |
| 3. பண்டாரவெல/புனகல்ல | 2,953 | 3,264 | (311) | -10% |
| 4. மல்வத்த/ வெலிமட | 3,197 | 3,362 | (165) | -5% |
| 5. தேமொதர / ஹாலிஅல/ பதுளை | 7,767 | 8,979 | (1,212) | -14% |
| 6. எல்ல/நமுனுகுல | 1,180 | 1,419 | (239) | -17% |
| 7. பஸ்ஸர/லுனுகல்ல | 4,004 | 3,696 | 308 | 8% |
| 8. மடோல்சீம | 2,368 | 2,339 | 29 | 1% |
| முழு ஊவா | 25,554 | 28,497 | (2,943) | -10% |
| F. தாழ்நில பயிர்ச் செய்கை | | | | |
| 1. தெனியாய | 16,545 | 16,525 | 20 | 0% |
| 2. காலி | 44,393 | 52,134 | (7,741) | -15% |
| 3. களுத்துறை | 21,553 | 18,086 | 3,467 | 19% |
| 4. கேகாலை | 10,817 | 4,848 | 5,969 | 123% |
| 5. களனிவெலி | 829 | 6,517 | (5,688) | -87% |
| 6. கண்டி/மாத்தளை/குருணாகல | 3,572 | 2,456 | 1,116 | 45% |
| F. தாழ்நில பயிர்ச் செய்கை | | | | |
| 7. மாத்தறை | 4,460 | 17,073 | (12,613) | -74% |
| 8. மொரவக்க | 25,488 | 7,922 | 17,566 | 222% |
| 9. இரத்தினபுரி | 57,042 | 52,387 | 4,655 | 9% |
| 10. பலாங்கொட | 8,633 | 4,109 | 4,524 | 110% |
| மொத்த தாழ்நிலப் பயிர்ச் செய்கை | 193,333 | 182,056 | 11,277 | 6% |
| மொத்த எண்ணிக்கை | 328,397 | 327,532 | 865 | 0.26% |

*Source : SLTB Production Reports*

## 2.2.3.மாவட்ட அடிப்படையில் தேயிலை உற்பத்தி

இலங்கையில் பல்வேறுபட்ட நிருவாக மாவட்டங்களில் தேயிலை உற்பத்தி மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் அதன் அமைவிடம் விளக்கமாக 2.4 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதானமாக உயர்நில தேயிலை உற்பத்தி நுவரெலிய மாவட்டத்தில் பதிவாகியுள்ளதுடன், கடந்த ஆண்டுக்காக அதிஉயரிய தாழ் நில தேயிலை உற்பத்தி இரத்தினபுரியில் பதிவாகியுள்ளதைக் காணமுடிகிறது.

2.4 அட்டவணை : மாவட்ட அடிப்படையில் தேயிலை உற்பத்தி (கிலோகிராம்)

| மாவட்டம் | உயர் | மத்திய | தாழ் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பதுளை | 14,043,682 | 12,785,277 | 0 | 26,828,959 |
| கொழும்பு | 0 | 0 | 675,457 | 675,457 |
| காலி | 0 | 0 | 48,793,613 | 48,793,613 |
| அம்பாந்தோட்டை | 0 | 0 | 284,332 | 284,332 |
| களுத்துறை | 0 | 0 | 17,357,166 | 17,357,166 |
| கண்டி | 909,246 | 21,865,441 | 10,297,619 | 33,072,306 |
| கேகாலை | 0 | 804,428 | 11,216,887 | 12,021,315 |
| மாத்தளை | 0 | 1,437,987 | 522,932 | 1,960,919 |
| மாத்தறை | 0 | 232,304 | 44,289,223 | 44,521,527 |
| நுவரெலியா | 57,760,400 | 13,117,544 | 828,544 | 71,706,489 |
| இரத்தினபுரி | 929,258 | 2,390,148 | 67,855,546 | 71,174,952 |
| மொத்தம் | 73,642,587 | 52,633,129 | 202,121,318 | 328,397,034 |

## 2.2.3.1.தேயிலை கொழுந்து சேகரிப்பு முறைக்கான அமைய உற்பத்தி பகுப்பாய்வு

கைத்தொழிற்சாலையின் மொத்த தேயிலை உற்பத்தியில் சகல தோட்டங்களிலும் அல்லது ஏனைய தோட்டங்கில் இருந்து சேகரிக்கப்படும் தேயிலை கொழுந்து அல்லது ஏனைய விநியோகஸ்தர்கள் மூலம் கொள்வனவு செய்யப்படும் தேயிலைக் கொழுந்தும் அடங்குகின்றது. நிருவாக மாவட்டத்திற்குள் அவ்வவ் தேயிலைக் கொழுந்து சேகரிப்பு மூலம் தயாரிக்கப்படும் தேயிலை வகைகளின் மொத்த உற்பத்தி கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணை மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.5 அட்டவணை : மாவட்டங்களுக்கு அமைய தேயிலை உற்பத்தி

| நிருவாக மாவட்டம் | தமது தோட்டத்தின் கொழுந்து | ஏனைய தோட்டங்களின் கொழுந்து | வாங்கிய கொழுந்து | மொத்த உற்பத்தி |
|---|---|---|---|---|
| பதுளை | 11,200,555.20 | 6,489,694.50 | 9,138,709.50 | 26,828,959.20 |
| கொழும்பு | 1,083,375.00 | 479,487.50 | 49,955,044.00 | 51,517,906.50 |
| காலி | - | - | 675,457.00 | 675,457.00 |
| அம்பாந்தோட்டை | - | - | 284,332.00 | 284,332.00 |
| களுத்துறை | 674,164.00 | 55,931.00 | 15,833,878.85 | 16,563,973.85 |
| கண்டி | 5,875,218.50 | 2,090,804.00 | 24,782,280.30 | 32,748,302.80 |
| கேகாலை | 1,119,618.00 | 487,017.00 | 7,431,402.90 | 9,038,037.90 |
| மாத்தளை | 646,261.00 | 195,014.00 | 1,877,323.00 | 2,718,598.00 |
| நுவரெலியா | 49,269,178.96 | 10,621,971.35 | 12,431,046.50 | 72,322,196.81 |
| இரத்தினபுரி | 6,354,008.50 | 903,049.50 | 66,125,294.15 | 73,382,352.15 |
| மொத்த உற்பத்தி | 78,764,440.66 | 21,822,086.85 | 227,810,506.20 | 328,397,033.71 |

02

## 2.2.4.செயற்பாட்டு முறைகளுக்கு அமைய உற்பத்திப் பகுப்பாய்வு

கைத்தொழிலில்
பக்கத்
தோற்றம்

### 2.2.4.1.கறுந்தேயிலை மற்றும் பச்சைத் தேயிலை உற்பத்தி

2012 ஆம் ஆண்டில் சம்பிரதாய தேயிலை உற்பத்தி 0.03% ஆகும். (101,404கிலோகிராம்) விருத்தி எட்டப்பட்டுள்ளதுடன், 2011ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது சிடிசி தேயிலை உற்பத்தி 3.2% இனால் அதிகரித்துள்ளது. மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணைக்கு அமைய 0.8 மில்லியன் கிலோ கிராம் (0.25%) அதிஉயரிய அதிகரிப்பு கறுந்தேயிலை உற்பத்தியில் பதிவாகி உள்ளதுடன், பச்சை தேயிலை உற்பத்தி 43,858 கிலோ கிராம் அதிகரிப்பு காண்பிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இது 1.5% அதிகரிப்பாகும்.




2.6 அட்டவணை : செயற்பாட்டு முறைகளுக்கு அமைய தேயிலை உற்பத்தி

| செயற்பாட்டு முறை | 2011 | 2012 | தளம்பல் | |
|---|---|---|---|---|
| | அளவு (கி.கிராம்) | அளவு (கி.கிராம்) | அளவு (கி.கிராம்) | விகிதாசாரம் (%) |
| சம்பிரதாய | 301,959,681 | 302,061,086 | 101,404 | 0.03% |
| சிடிசி | 22,583,966 | 23,303,833 | 719,867 | 3.19% |
| பச்சை | 2,988,256 | 3,032,115 | 43,858 | 1.47% |
| மொத்தம் | 327,531,903 | 328,397,034 | 865,130 | 0.26% |

### 2.2.4.2.திடீர் தேயிலை மற்றும் காபன் தேயிலை உற்பத்தி

2011 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது திடீர் தேயிலை மற்றும் காபன் தேயிலை ஆகிய இரு வகைகளின் உற்பத்தி வீழ்ச்சியினைக் காண்பிக்கின்றது. 2012ஆம் ஆண்டுக்காக திடீர் தேயிலை வகைகள் 0.29 மில்லியனினால் குறைவடைந்துள்ளடன் காபனிக் தேயிலை உற்பத்தி அளவு 0.08 மில்லியன் கிலோ கிராமினால் வீழ்ச்சி காண்பிக்கப்பட்டுள்ளது.

## 2.2.5.செயற்பாட்டு தேயிலை உற்பத்தி செலவீனம்



உற்பத்தித் திறன் மற்றும் உற்பத்தி செலவீனம் ஆகிய ஒவ்வொன்றுடன் தொடர்புபட்ட விடயங்களாகும். அதிகரித்துச் செல்லும் உற்பத்திச் செலவீனம் பெருந்தோட்டக் கைத்தொழில் துறையில் தொடர்ச்சியாகக் காண்பிக்கப்பட்டுள்ள பிரச்சினைக்குரிய நிலைமைகளாகும். தேயிலை உற்பத்தித் துறைக்காக கணிசமான ஊழியர் அளவு தேவைப்படுவதனால் தேயிலை வகைகளின் ஊழிய உற்பத்தித் திறன் மற்றும் உற்பத்திச் செலவீனத்திற்கு இடையே தீவிர தொடர்புகள் காணப்படுகின்றன. தேயிலை உற்பத்தி செய்யப்படும் பிரதான நாடுகளுக்கு இடையே இலங்கையின் தேயிலை உற்பத்திச் செலவீனம் அதிஉயரிய மட்டத்தை எட்டியுள்ளது. கோளமய தேயிலை சந்தையின் எமது நாடு போட்டிகரமான நிலமைகள் தொடர்பில் இதன்மூலம் அழுத்தங்களை ஏற்படுத்தி உள்ளன.

கடந்த தசாப்தத்திற்குள் தயாரிக்கப்பட்ட ஒரு கிலோ தேயிலைக்காக உற்பத்தி செலவீனம் துரிதமாக அதிகரித்துள்ளது. விசேடமாக ஊழியர் செலவீனம் அதிகரித்தமை, உள்ளீடுகளின் அதிகரித்தமை உற்பத்திச் செலவீனம் அதிகரிக்கக் காரணமாக அமைந்துள்ளது. 2011/12 ஆண்டுக்களுக்காக குடிசன புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் மூலம் வகுக்கப்பட்ட புள்ளிவிபரங்களுக்கு அமைய வருடாந்த தேயிலை உற்பத்திச் செலவீனம் ஒரு கிலோ கிராமிற்கு 390.89 ஆகும். 2010/11 ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது அது 10% அதிகரிப்பைக் காட்டுகின்றது.

2.3 குறிப்பு : தயாரிக்கப்பட்ட தேயிலை ஒரு கிலோ கிராமிற்காக மொத்த செலவீனம்



02

கைத்தொழிலில் பக்கத் தோற்றம்

## 2.3.இலங்கையில் தேயிலை விற்பனை

2011 ஆம் ஆண்டன் ஒப்பீடு செய்து போது 2012ஆம் அண்டில் இல்ஙகை தேயிக் கைத்தொழிலில் அதிகூடுதலான விலை பதிவாகியது. 2012ஆம் ஆண்டு அரச, தனியார் மற்றும் நேரடி விற்பனையும் அடங்கலாக 392.03 ரூபா பெறுமதிக்கு கிலோ கிராம் 325.4 மில்லியன் தேயிலை அளவுக்கு 360.53 சாதாரண பெறுமதிக்கு 323.3 கிலோ கிராமிற்கு தேயிலை விற்பனை செய்யப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் அலகின் பெறமதி 31.50 ரூபா (8.7**%**) ஆக அதிகரித்ததுடன், அதில் ஒரு கிலோ கிராமிற்காக 60.53 தொடக்கம் ரூபா 392.03 வரையான அதிகரிப்பாகும்.

### 2.3.1.விற்பனை முறைகள்

கைத்தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை விற்பனை செய்யும் பிரான முறையாக அமைவது பகிரங்க ஏலவிற்பனையாகும் 2012ஆம் ஆண்டு கொழும்பு ஏல தேயிலை விற்பனையில் கீழ் 320.0 மில்லியன் கிலோ கிராம் விற்பனை செய்யப்பட்டது தனியார் விற்பனை அளவு 3.7 மில்லியன் (1.1%) என்பதுடன் எஞ்சும் 0.5% அளவு நேரடி விற்பனை ஊடாக விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 2.3.2.கொழும்பு தேயிலை ஏல விற்பனை

2012 ஆண்டில் கொழும்பு தேயிலை வர்த்தகர்களின் சங்கத்தின் கீழ் இலங்கை வர்த்தக சபையினால் நடாத்தப்பட்ட தேயிலை ஏலவிற்பனைகளின் எண்ணிக்கை 50 என்பதுடன், பகிரங்க மற்றும் தனியார் விற்பனைக்காக 3.3 கிலோகிராம் (1.0%) குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு பதிவாகியது. இது எவ்வாறாக இருப்பினும், 2012ஆம் அண்டுக்குள் கொழும்பு தேயிலை ஏலவிற்பனையின் மூலம் பெறப்பட்ட சாதாரண விலையுடன் ஒப்பீடு செய்யும் போது அதி-உயரிய பெறுமதி பதிவாகியுள்ளதுடன், அது ஒரு கிலோ கிராமிற்கு 359.89 ரூபா முதல் 391.64 வரை வருடாந்த அதிகரிப்புக்கு காரணமாக அமைந்தது.

### 2.3.3.பயிர்ச் செய்கை அமைவிடங்களுக்கு அமைய விற்பனைகள்.

தேயிலை பயிர்ச் செய்கை அமைவிடங்களுக்கு அமைய தேயிலை விற்பனைப் பகுப்பாய்வு 2.7 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2012ஆம் ஆண்டில் புரள்வுக்கு அடிப்படையாக கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் பொழுது சகல பயிர்ச் செய்கை அமைவிடங்களிலும் ஒரு அலகின் விலை அதிகரித்துள்ளது.

2.7: அட்டவணை : பயிர்ச் செய்கை அமைவிடங்களுக்கு அமைய தேயிலை விற்பனை

| பயிர்ச் செய்கை அமைவிடம் | அளவு (கி.கிராம்.மி.) | | | | அலகு விலை (கி.கி.ருபா) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2011 | வேறு | % | 2012 | 2011 | வேறு | % |
| உயர் | 69.8 | 73.8 | (4.00) | (5.42) | 379.18 | 333.28 | 45.90 | 13.77 |
| மத்திய | 52.4 | 52.4 | 0.00 | 0.00 | 350.86 | 319.48 | 31.38 | 9.82 |
| தாழ் | 203.2 | 197.1 | 6.10 | 3.09 | 407.06 | 381.65 | 25.41 | 6.66 |
| மொத்த விற்பனை | 325.4 | 323.3 | 2.10 | 0.65 | 392.03 | 360.53 | 31.50 | 8.74 |

வகை : இலங்கை தேயிலை சபை விற்பனை அறிக்கை

02

கைத்தொழிலில் பக்கத் தோற்றம்

## 2.4. தேயிலை ஏற்றுமதி

2012 தேயிலை ஏற்றுமதி 319.9 கிலோ கிராம் என்பதுடன் அதன் மூலம் 180.4 பில்லியன் ரூபா வருமானமாக ஈட்ட முடிந்துள்ளது. ஒரு கிலோ கிராமிற்காக மீள் கப்பலேற்றும் இலவச சாதாரண அலகு விலை ரூபா 563. 94 ஆகும். தேயிலை ஏற்றுமதியின் மூலம் 150 பில்லியன் ரூபாவைவிட மேற்பட்ட ஏற்றுமதி வருமானத்தைப் பெற்றுக் கொள்ளமுடிந்த இரண்டாவது ஆண்டாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

அதிசிறந்த தரத்திலான தேயிலை உற்பத்தி செய்வதனை தொடர்ந்தும் கருத்திற் கொள்ளப்பட்ட போதிலும், கோளமய தேயிலைக் கைத்தொழில் இலங்கையின் பங்களிப்பு கிரமமாக குறைவடைந்து செல்கிறது. தேயிலை சந்தையில் ஏனைய போட்டிகரமான நாடுகளில் இருந்து விடுக்கப்படும் தீர்க்கமான போட்டிகள் மூலம் இலங்கையில் காணப்படும் போட்டிகரமான நிலமைக்கு பாதக அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளன. தேயிலைக்காக இலங்கையில் காணப்படும் உயரிய உற்பத்திச் செலவீனம் மற்றும் குறைந்த அறுவடையின் மூலம் இந்நிலமை தொடர்ந்தும் விருத்தியடைந்துள்ளதுடன், கோளமய நுகர்வோரின் திடீர் மாற்றங்கள் சுவைகள் தொடர்பாக கவனம் செலுத்தாது பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை வகைகளுக்கு இணைவாக சம்பிரதாய (ஒதோடொக்ஸ்) தேயிலை உற்பத்தி விருத்தி செய்வது தொடர்பாக மாத்திரம் இலங்கை தொடர்ந்தும் கவனம் செலுத்துவதன் மூலம் கோளமய சந்தையின் இலங்கையின் பங்களிப்பு தொடர்ந்தும் குறைவடையும்.

நவீன HS குறயீடுகளுக்கு அமைவான வகைகளுக்கு ஒதுக்கப்பட்ட தேயிலை ஏற்றுமதி இப்பிரிவின் கீழ் பட்டியல்படுத்தப்பட்டு மொத்த தேயிலை, பல்வேறுபட்ட பிரிவுகளில் தேயிலை பக்கட் மற்றும் கறுந்தேயிலை மற்றும் பச்சை தேயிலை மற்றும் திடீர் தேயிலை தயாரிக்கும் இயந்திரத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்ட தேயிலைப் பொதியில் இது அடங்குகின்றது.

### 2.4.1.வகைகளுக்கு அமைய தேயிலை ஏற்றுமதி பகுப்பாய்வினை மேற்கொள்ளல்.

தேயிலை தொடர்பாகக் காணப்படும் சபை பொதுவாக தேயிலை இதழ்களின் பண்புசார் தரத்தில் தங்கியுள்ளதுடன், குறிப்பித்தக்களவு மட்டத்திலான மாற்றங்களுக்கும் இது உட்பட்டுள்ளது. உதாரணமாக, மத்தியகிழக்கு நாடுகள் மற்றும் சுயாதீன இராச்சியங்களில் பொதுக் கூட்டமைப்பு (CIS) இற்குரிய நாடுகளின் மக்களுக்கு தாழ் நிலங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும் சம்பிரதாய, பிரதானமாக இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் தேநீரில் சுவை கூடிய தேயிலை-யைத் தேர்ந்தெடுக்க கூடுதலான விருப்பம் காண்பிக்கப்படுகின்றது.

2012 ஆண்டில் திரண்ட தேயிலை ஏற்றுமதி (கறுந்தேயிலை மற்றும் திடீர் தேயிலை பொதிகள் மாத்திரம்) 0.7% என்பதுடன் இதன் அளவு 2011ஆம் ஆண்டிற்கு இணைவாக வீழ்ச்சியடைந்துள்ளது. இதன் மூலம் உழைக்கப்பட்ட வருமானம் 9.6% என்பதுடன் இது 2011ஆம் ஆண்டுக்கு இணை-வாக அதிகரித்துள்ளது. மீள் கப்பலேற்றும் செலவீனம் கொண்ட அலகு விலையில் மாற்றங்களுக்கு உட்பட்டு ஒரு கிலோ கிராமிற்காக ரூபா 53.22 ஆக காணப்பட்டது. இரு எவ்வாறாக இருப்பினும், 2012ஆம் ஆண்டு திரண்ட தேயிலை ஏற்றுமதி உழைப்பு 1,414.0 மில்லியன் அமெரிக்க டொலர் என்பதுடன் 2011ஆம் ஆண்டில் பதிவாகிய 1,488.4 மில்லியன் அமெரிக்க டொலருக்கு இணைவாக இது 5.0% வீழ்ச்சியைக் காண்பிக்கின்றது.

02

கைத்தொழிலில் பக்கத் தோற்றம்

2.4 அட்டவணை : மாதாந்ததேயிலை ஏற்றுமதி – அளவு மற்றும் அலகின் பெறுமதி




மூலம் : இலங்கை சுங்க புள்ளிவிபரங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டது.

## 2.4.2.வருடாந்த தேயிலை ஏற்றுமதி -2012

2012 ஆம் ஆண்டில் ஜனவரி தொடக்கம் டிசெம்பர் வரையான காலத்திற்காக வகைகளுக்கு இணங்க தேயிலை ஏற்றுமதி 2.8. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.8. அட்டவணை : வருடாந்த தேயிலை ஏற்றுமதி -2012

| வகைகளுக்கு அமைய மீள் ஏற்றுமதி | 2012 டிசெம்பர் மாதமளவில | | |
|---|---|---|---|
| கறுந்தேயிலை பொதியிடல் | அளவு (கி.கிராம்) | பெறுமதி (ரூ.) | (ரூ./கி.கி) |
| தேயிலை பொதி | 20,602,905 | 22,333,698,412 | 1,084.01 |
| தேயிலை தொகை | 129,493,216 | 64,136,650,791 | 495.29 |
| தேயிலை பக்கட் (4-கி.1 கி.கி) | 94,027,545 | 50,616,750,569 | 538.32 |
| தேயிலை பக்கட்(1கி.கி 3.கி.கி.) | 865,140 | 519,428,202 | 600.40 |
| தேயிலை பக்கட்(3கி.கி5.கி.கி.) | 17,864,920 | 8,653,095,435 | 484.36 |
| தேயிலை பக்கட்(5 கி.கி 10கி.கி.) | 39,193,702 | 18,667,841,443 | 476.30 |
| கறுந்தேயிலை – மொத்தம | 302,047,428 | 164,927,464,852 | 546.03 |
| பச்சைத் தேயிலை பொதியிடல் | | | |
| தேயிலை பொத | 748,066.00 | 1,304,941,954 | 1,744.42 |
| தேயிலை தொகை | 758,679.00 | 381,510,319 | 502.86 |
| தேயிலை பக்கட்(4 கி.கி 1.கி.கி.) | 850,695.00 | 981,606,987 | 1,153.89 |
| தேயிலை பக்கட்(1கி.கி 3.கி.கி.) | 8,297.00 | 7,825,228 | 943.14 |
| தேயிலை பக்கட்(3கி.கி 5.கி.கி.) | 59,487.00 | 22,702,206 | 381.63 |
| தேயிலை பக்கட்(5கி.கி 10.கி.கி.) | 15,352.00 | 16,466,088 | 1,072.57 |
| பச்சைத் தேயிலை – மொத்தம | 2,440,576 | 2,715,052,782 | 1,112.46 |
| திடீர் தேயிலை | | | |
| திடீர் தேயிலை – மொத்தம | 1,551,562.00 | 1,372,361,880 | 884.50 |
| மொத்த தேயிலை ஏற்றுமத | 306,039,566.00 | 169,014,879,514 | 552.26 |

02

கைத்தொழிலில் பக்கத் தோற்றம்

| 2.9 அட்டவணை : வருடாந்த இறக்குமதி தேயிலை ஏற்றுமதி (மீள் - ஏற்றுமதி) 2012 | | | |
|---|---|---|---|
| வகைகளுக்கு அமைய மீள் ஏற்றுமதி | 2012 டிசெம்பர் வரை | | |
| கறுந்தேயிலை பொதியிடல் | அளவு (கி.கிராம்) | பெறுமதி (ரூ.) | (ரூ./கி.கி) |
| தேயிலை பொதி | 3,389,691 | 3,530,046,886 | 1,041.41 |
| தேயிலை தொகை | 2,174,483 | 1,162,032,440 | 534.39 |
| தேயிலை பக்கட் (4-கி.1 கி.கி) | 5,506,922 | 3,356,503,281 | 609.51 |
| தேயிலை பக்கட்(1கி.கி 3.கி.கி.) | 139 | 297,987 | 2,143.79 |
| தேயிலை பக்கட்(3கி.கி5.கி.கி.) | 0 | 0 | 0.00 |
| தேயிலை பக்கட்(5கி.கி 10கி.கி.) | 176,790 | 105,851,210 | 598.74 |
| கறுந்தேயிலை – மொத்தம் | 11,248,025 | 8,154,731,804 | 724.99 |
| பச்சைத் தேயிலை பொதியிடல | | | |
| தேயிலை பொத | 1,062,158.00 | 1,825,183,128 | 1,718.37 |
| தேயிலை தொகை | 100,697.00 | 79,551,486 | 790.01 |
| தேயிலை பக்கட்(4 கி.கி 1.கி.கி.) | 1,426,633.00 | 1,327,080,826 | 930.22 |
| தேயிலை பக்கட்(1கி.கி 3.கி.கி.) | 7,839.00 | 3,748,458 | 478.18 |
| தேயிலை பக்கட்(3கி.கி 5.கி.கி.) | 3.00 | 3,521 | 1,173.67 |
| தேயிலை பக்கட்(5கி.கி 10.கி.கி.) | 60,977.00 | 24,298,753 | 398.49 |
| பச்சைத் தேயிலை – மொத்தம் | 2,658,307.00 | 3,259,866,172 | 1,226.29 |
| திடீர் தேயிலை | | | |
| திடீர் தேயிலை – மொத்தம் | 674.00 | 809,574 | 1,201.15 |
| மொத்த தேயிலை ஏற்றுமத | 13,907,006.00 | 11,415,407,550 | 820.84 |
| | | | |
| பச்சைத் தேயிலை பொதியிடல் | 319,946,572.00 | 180,430,287,064 | 563.94 |

மூலம் - இலங்கை சுங்கத் திணைக்களம்

## 2.4.3. பெறுமதி சேகரிக்கப்பட்ட தேயிலை ஏற்றுமதி

கோளமய தேயிலை சந்தையின் இலங்கை அடையாளம் மற்றும் சம்பிரதாய நிலைமைகளைத் தொடர்ந்தும் பேணுவதற்கு அவசியமாயின் பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை வகைகளுக்கு பயன்மிக்கதாக துரிதகதியில் மாற்றமடைந்து செல்லும் சந்தையின் கேள்விக்கு ஏற்றவாறு செயற்படுவதற்கு இலங்கை பொறுப்பாக இருக்க வேண்டும். பெறுமதி சேகரிக்கப்பட்ட தேயிலை, தேயிலைப் பக்கட், தேயிலைப் பொதி மற்றும் திடீர் தேயிலை ஏற்றுமதியின் மூலம் மொத்த ஏற்றுமதி அளவு 57.4% பகுதியினை பதிவுசெய்ய இலங்கைக்கு முடிந்தது. இதன்மூலம் மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 61.8% பகுதியினைப் பங்களிப்பு செய்து பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை வகைகளின் மூலம் ஈட்டப்பட்ட வருமானத்தினை அதிகரிக்க இம்முறை இலங்கைக்கு முடிந்துள்ளது.






02

## 2.4.4. இலங்கையின் தேயிலை ஏற்றுமதி செய்யப்படும் பிரதான நாடுகள்

கைத்தொழிலில் பக்கத் தோற்றம்

வரலாறு அடிப்படையில் இலங்கையின் பிரதான தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகளாக ஐக்கிய இராச்சியம் உட்பட ஐரோப்பிய நாடுகள் அடங்குகின்றன. இது எவ்வாறாக இருப்பினும், தேயிலை பொதிப் பயன்பாடு அதிகரித்துள்ளமையினால் தற்போது இலங்கையின் தொகை தேயிலை ஏற்றுமதி மத்தியகிழக்கு நாடுகளுக்கே அனுப்பப்படுகின்றன.

ரஷ்யா உலகில் பாரிய தேயிலை இறக்குமதி செய்யப்படும் நாடு என்பதனால் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் 15.4% ஏற்றுமதி அளவு, 15.9% அளவினையும் உழைத்தல் உட்பட இலங்கை தேயிலை கொள்வனவு செய்யும் பாரிய நாடாக ரஷ்யா காணப்படுகின்றது. இலங்கை தேயிலை ஏற்றுமதி செய்யப்படும் பிரதான கேந்திர நிலையம் தொடர்பான பட்டியலில் இரண்டாவது இடத்தில் ஈரான் இருப்பதுடன் 8.1% ஏற்றுமதி அளவு கொண்டதாக மூன்றாவது இடத்தில் சிரியா உள்ளது. பிராந்திய ரீதியில் மத்தியகிழக்கு நாடுகள் இலங்கையின் பிரதான தேயிலை ஏற்றுமதி செய்யும் பிரதான கேந்திர நிலையமாகக் கருதமுடியும். பெற்றோலிய வளம் கிரமமாக அதிகரிப்பதனால் அந்நாடுகளில் தேயிலைக்காக காணப்படும் கேள்வி நிலையான அடிப்படையில் விரிவடைந்துள்ளது.

சுத்தமான இலங்கைதேயிலை ஏற்றுமதி செய்யப்படும் பிரதான பத்து நாடுகளுக்கு மொத் 70% ஏற்றுமதிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது எவ்வாறாக இருப்பினும், மீள் கப்பலேற்றும் செலவீனத்தைக் கொண்ட சாதாரண அலகு விலைக்கு இணைவாக மீள்கப்பலேற்றும் செலவீனம் கொண்ட விலைகளில் குறிப்பிடத்ததகளவு அதிகரிப்பினை பேணுவதற்கு ஈரான் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு முடிந்தது. மேலும் ஐக்கிய அமெரிக்க இராச்சியம் பொருளாதாரம் தொடர்பாகக் காணப்படும் இருள் மிகுந்த எதிர்பார்ப்புகள் காரணமாக ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் தங்கம் தொடர்பாக கடன் நெருக்கடியினால் தேயிலை ஏற்றுமதிகள் மூலம் பெறக்கூடிய வருமானம் குறைவடையக் கூடும்.

2.10 அட்டவணை : இலங்கையில் தேயிலை ஏற்றுமதி செய்யப்படும் பிரதான கேந்திர நிலையங்கள் - 2012

| நாடு | அளவு (கி.கிராம்) | பெறுமதி (ரூபா.) | மீள்.க.இல. (ரூ./கி.கிராம்) | % பங்களிப்பு - அளவு | % பங்களிப்பு- பெறுமதி | மீள்.க.இல. * வித்தியாசம் (ரூ./கி.கிராம்) |
|---|---|---|---|---|---|---|
| ரஷ்யா | 47,250,313 | 26,861,817,131 | 568.50 | 15.4 | 15.9 | 16.24 |
| ஈரான | 38,125,937 | 22,359,546,157 | 586.47 | 12.5 | 13.2 | 34.20 |
| சிரியா | 24,718,795 | 13,238,591,632 | 535.57 | 8.1 | 7.8 | (16.70) |
| ஈராக | 23,483,363 | 10,636,265,163 | 452.93 | 7.7 | 6.3 | (99.34) |
| துருக்கி | 23,131,102 | 11,459,307,236 | 495.41 | 7.6 | 6.8 | (56.86) |
| லிபியா | 16,325,958 | 6,452,045,763 | 395.20 | 5.3 | 3.8 | (157.06) |
| ஐ.அ.எமிரேட | 11,582,777 | 6,200,968,119 | 535.36 | 3.8 | 3.7 | (16.90) |
| அஸர்பைஜான | 10,591,385 | 5,699,647,356 | 538.14 | 3.5 | 3.4 | (14.12) |
| ஜப்பான் | 9,545,484 | 6,097,967,217 | 638.83 | 3.1 | 3.6 | 86.57 |
| ஜோர்தான | 9,397,691 | 4,504,109,682 | 479.28 | 3.1 | 2.7 | (72.99) |
| மொத்தம் | 214,152,805 | 113,510,265,456 | 530.04 | 70.0 | 67.2 | (22.22) |

*மீள் கப்பலேற்ற இலவச விலைகளில் குறைவான வித்தியாசங்கள் (சுத்தமான இலங்கைத் தேயிலை ஏற்றுமதிகளின் சாதரான அளவிற்கு உரியதாக) அடைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. மூலம் : இலங்கை சுங்கம

02

கைத்தொழிலில் பக்கத் தோற்றம்

## 2.4.4.1 கறுந்தேயிலை ஏற்றுமதி

2012 ஆம் ஆண்டில் 46.6 மில்லியன் கிலோ கிராம் இறக்குமதி செய்து இலங்கையின் கறுந்தேயிலை இறக்குமதி செய்யும் பிரதான நாடு (15.4%) என நிலையாக தொடர்ந்தும் உறுதிப்படுத்த ர்'யாவுக்கு முடிந்தது. ஈரான் மற்றும் சிரியா தொடராக 38.1 மில்லியன் கிலோ கிராம் (12.6%) மற்றும் 24.7 மில்லியன் கிலோ கிராம் (8.2%) கறுந்தேயிலை அளவு இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

2.11 அட்டவணை : பிரதான கறுந்தேயிலை ஏற்றுமதி செய்யப்படும் நாடுகள

| நாடு | அளவு (கி.கிராம்) | பெறுமதி (ரூபா.) | மீள்.க.இல. (ரூ./கி.கிராம்) | % பங்களிப்பு - அளவு | % பங்களிப்பு- பெறுமதி | மீள்.க.இல * வித்தியாசம் ((ரூ./கி.கிராம்) |
|---|---|---|---|---|---|---|
| ரஷ்யா | 46,649,873 | 26,201,573,850 | 561.66 | 15.4 | 15.9 | 15.63 |
| ஈரான் | 38,110,203 | 22,349,565,890 | 586.45 | 12.6 | 13.6 | 40.42 |
| சிரியா | 24,712,130 | 13,232,151,936 | 535.45 | 8.2 | 8.0 | (10.58) |
| ஈராக் | 23,464,603 | 10,625,109,028 | 452.81 | 7.8 | 6.4 | (93.22) |
| துருக்கி | 23,129,068 | 11,457,014,848 | 495.35 | 7.7 | 6.9 | (50.68) |
| பிரதான நாடுகளின் மொத்தம் | 156,065,877 | 83,865,415,552 | 537.37 | 51.7 | 50.8 | (8.66) |

* விகிதாசாரம் அடைப்புக்குள் குறிப்பிடப்பட்டுள்ளது.

மூலம் : இலங்கை சுங்கம்

## 2.4.4.2. பச்சை தேயிலை ஏற்றுமதி

பச்சை தேயிலை ஏற்றுமதி செய்யப்படும் பிரதான 10 நாடுகளில் ரஷ்யா 2012ஆம் ஆண்டு 0.6 மில்லியன் கிலோ கிராம் குறிப்பிடத்தக்களவு பதிவாக்கியது. இதன் விசேட அம்சமாக அமைவது பச்சைத் தேயிலைப் பொதி ஏற்றுமதி அளவு 50% ஐ விட கூடுதலாக ஏற்றுமதி செய்ததுடன், பிரதான நாடுகள் ஐந்தாகும்.

2.12 அட்டவணை : பிரதான பச்சை தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகள்

| நாடு | அளவு (கி.கிராம்) | பெறுமதி (ரூபா) | மீள்.க.இல (ரூ.கி.கிராம்) | % பங்களிப்பு - அளவு | % பங்களிப்பு- பெறுமத | மீள்.க.இல *ஏனைய (ரூ.கி.கிராம்) |
|---|---|---|---|---|---|---|
| ரஷ்யா | 600,440 | 660,243,281 | 1,099.60 | 24.6 | 24.3 | (12.86) |
| ஐ.அ.எமிரேட் | 343,802 | 167,335,628 | 486.72 | 14.1 | 6.2 | (625.74) |
| உக்ரேன் | 238,157 | 268,536,120 | 1,127.56 | 9.8 | 9.9 | 15.10 |
| தாய்வான் | 86,193 | 95,183,122 | 1,104.30 | 3.5 | 3.5 | (8.16) |
| இத்தாலி | 84,502 | 138,701,912 | 1,641.40 | 3.5 | 5.1 | 528.94 |
| பிரதான நாடுகளின் மொத்தம் | 1,353,094 | 1,330,000,063 | 982.93 | 55.4 | 49.0 | (129.53) |

* விகிதாசாரம் அடைப்புக்குள் குறிப்பிடப்பட்டுள்ளது.

மூலம் - இலங்கை சுங்கம

02

கைத்தொழிலில் பக்கத் தோற்றம்

# 2.4.4.3.திடீர் தேயிலை ஏற்றுமதி

இலங்கையில் திடீர் தேயிலை ஏற்றுமதி செய்யப்படும் பிரதான நாடுகளுக்கிடையே முதல் இடம் அயர்லாந்துக்குக் கிடைப்பதுடன், கடந்த ஆண்டுக்கு இணைவாக 1.46 மில்லியன் கிலோ கிராம் (94.3%) அளவு இறக்குமதி செய்ய முடிந்துள்ளது. திடீர் தேயிலை இறக்குமதி செய்யப்படும் பிரதான நாடுகள் தொடர்பான பட்டியலில் இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களில் தங்கியிருப்பது ஜப்பான் மற்றும் ஐக்கிய எமிரேட் இராச்சியமாகும்.

2.5 உரு : திடீர் தேயிலை ஏற்றுமதி செய்யப்படும் பிரதான இராச்சியங்கள்




மூலம் : இலங்கை சுங்கம் மூலம் பெற்பபட்டது.

## 2.4.4.4 ஆர்டிடி (பருகுவதற்காக தயார்) தேயிலை ஏற்றுமதி

2012 ஆம் ஆண்டில் 11 நாடுகளுக்காக பொருளாதார ரீதியில் தேயிலை ஏற்றுமதி இலங்கையில் இருந்து கப்பலேற்றப்பட்டது. 43.7 லீற்றர் (80.8%) இலங்கை தேயிலை விற்பனை செய்யப்படும் பிரதான இறக்குமதி தேசம் இத்தாலியாகும். நிறுவன ரீதியில் தேயிலை ஏற்றுமதி தொடர்பாகக் கருத்திற் கொள்ளும் போது (உ-ம் : மீள் ஏற்றுமதி) ஈரான், ரஷ்யா, உக்ரேன், உஸ்பகிஸ்தான் ஆகிய நாடுகளில் கிலோ கிராம் மில்லியனைவிட கூடுதலான அளவு 2012ஆம் ஆண்டுக்காக ஏற்றுமதி செய்ய முடிந்துள்ளது. இலங்கையில் மொத்த இறக்குமதியில் மீள் ஏற்றுமதி அளவு 55% ஐ விட கூடுதலாக இறக்குமதி செய்ய இந்த நாடுகள் பங்களிப்பு செய்தன.

# 2.5. கோளமய தேயிலை கைத்தொழில் பக்கத்தோற்றம்

தேயிலை என்பது உலகின் பிரதான நாடுகளின் பிரபல்யத்தைப் போன்று விரிவான அடிப்படையில் நுகரப்படும் அதி உன்னத பானமாகும். இலங்கை ஏற்றுமதிகளில் விசேடமாக தேயிலை ஏற்றுமதியின் மூலம் அதன் கீர்த்திமிக்க வரலாற்றின் ஆரம்பம் தொடக்கம் தேசிய பொருளாதாரத்திற்கு மற்றும் சமூக அபிவிருத்திக்கு அத்தியவசிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கையின் ஏற்றுமதி வருமானம் தொடர்பிலும் சந்தைப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்றுமதியின் மூலம் முக்கிய பங்களிப்புக்கள் வழங்கப்படுகின்றன. அத்துடன் நாட்டின் பாரிய சேவை வழங்குனர்களுக்கு இடையே இத்துறையும் உள்ளடக்க முடிந்துள்ளது. தேயிலை உற்பத்தி செய்யப்படும் நாடுகளுக்கு இடையே பிரதானமாக உற்பத்தி செய்யும் நாடுகளாகக் காணப்படுவது இந்தியா, சீனா, இலங்கை, கென்யா, இந்தோனேசியா போன்றனவாகும். இந்நாடுகள் உலக உற்பத்தியில் 77% உம் உலக ஏற்றுமதியில் 80% இற்கும் பங்களிப்பு செய்கின்றன. விசேடமாக கென்யா உட்பட ஆபிரிக்க கண்டத்தில் பாரிய அறுவடை பதிவாகியுள்ளது. கோளமயத் தேயிலைக் கைத்தொழிலில் இலங்கையின் நிலைப்பாட்டினைக் கருத்திற் கொள்ளும் போது 2012ஆம் அண்டின் ஏனைய தேயிலை உற்பத்தி செய்யப்பட்ட அங்கத்தவர்களுக்கிடையே ஒப்பிடு செய்யும் போது சாதாரண அலகு விலை ஏலவிற்பனை மற்றும் வருமான செயற்சாதனை (ஏற்றுமதி) விருத்தி செய்து தொடர்ச்சியாக முன்னோக்கி நகர்ந்துள்ளது.

## 2.5.1 கோளமய தேயிலைப் பிரதேசங்கள்

2012 ஆம் ஆண்டின் இறுதியில் உலகில் மொத்த தேயிலை பயிர்ச் செய்கை அளவு 3 மில்லியன் ஹெக்டயர்களைவிட கூடுதலான அளவு விரிவடைந்துள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டு இருந்தது.

2.13 அட்டவணை : அதிஉயரிய தேயிலை செய்கை அளவு

| நாடு | 2010 (ஹெக்.) | 2011 (ஹெக்.) | 2012 (ஹெக்.) |
|---|---|---|---|
| சீனா | 1,970,200 | 2,112,510 | 2,279,940 |
| இந்தியா | 579,400 | 578,000 | 580,000 |
| கென்யா | 171,916 | 187,855 | 190,717 |
| இலங்கை* | 188,007 | 187,860 | 187,000 |
| வியட்நாம் | 129,000 | 127,000 | 124,027 |
| இந்தோனேசியா | 122,796 | 122,764 | 121,076 |
| மியன்மார | 78,400 | 78,500 | 78,500 |
| துருக்கி | 77,500 | 77,700 | 77,800 |
| பங்களாதேஷ் | 54,900 | 54,400 | 54,500 |
| ஜப்பான் | 46,800 | 46,200 | 45,900 |

* பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டதாக பதிவு செயது மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்ட பிரதேசங்கள்
மூலம் : வருடாந்த சர்வதேச தேயிலைக் குழு (ITC) புள்ளிவிபர ஒப்பீடு - 2013

சர்வதேச தேயிலைக் குழு (ITC) இற்கு அமைய கூடுதலான தேயிலைக் காணி அளவு சீனாவில் காணப்படுவதுடன், இது கடந்த தசாப்தங்களில் கூடுதலாக விருத்தியடைந்துள்ளது. மேலும கென்யாவில் தேயிலைப் பரம்பல் 2012ஆம் ஆண்டில் அதிஉயரிய பெறுமதியைக் காணப்பித்திருப்பது இலங்கை காணிகளின் அளவுக்கு அப்பாலாகும். 2010-2012 ஆகிய ஆண்டுகளுக்காக நாடுகளுக்கு அமைய அதிஉயரிய தேயிலைக் காணி அளவு கொண்ட 10 நாடுகள் 2.13 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 2.5.2 கோளமய தேயிலை நுகர்வு

2009-2011 காலத்திற்கு உட்பட்ட 3 ஆண்டு காலங்களுக்குள் வருடாந்த தேயிலை நுகர்ச்சி மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை சாதாரண தேயிலைப் பயன்பாட்டின் மூலம் வெளிவரும் விடயங்களுக்கு அமைய 1,279.03 மில்லியன் கிலோ கிராம் அளவினைக் கொண்ட சீனா முன்னணியில் உள்ளது. இது தனிப்பட்ட தேயிலை நுகர்ச்சி 0.95 கிலோ கிராம் போன்ற குறைந்த மட்டத்தில் காணப்பட்ட போதிலும், இதனை இந்தியாவுடன் ஒப்பீடு செய்யும் போது 871.67 மில்லியன் கிலோ கிராம். அத்துடன் தனிநபருக்கான அளவு 0.73 கிலோ கிராமாகும். .

சர்வதேச தேயிலைக் குழுவினால் வெளியிடப்பட்ட 2008-10 மற்றும் 2010-12 ஆகிய கால எல்லைக்குள் உரிய அவ்வவ் இராச்சியங்களின் தனிநபர் தேயிலை நுகர்ச்சி புள்ளிவிபரங்களுக்கு அமைய இறுதி மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலத்திற்குள் வருடாந்த தனிநபர் நுகர்வு மெக்ஸிக்கோ, சீனா, இந்தோனேசியா மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகளின் தேயிலைப் பயன்பாட்டுக்கு உரியதான 0.67kg, 0.08kg கிலோ கிராம், 0.06kg மற்றும் 0.05kg என தொடராக அதிகரித்துள்ளது. ஏனைய நாடுக-ளுடன் நோக்கும் போது குவைட் சிரிய இராச்சியங்கள் 0.29kg கிலோ கிராம் மற்றும் 0.17kg என துரிதமாக வீழ்சிசியடைந்துள்ளதைக் காண-முடிகிறது.

02

கைத்தொழிலில் பக்கத் தோற்றம்

இது எவ்வாறாக இருப்பினும், தனிநபர் தேயிலை நுகர்ச்சி குவைட், லிபியா, மற்றும் துருக்கி ஆகிய நாடுகளில் கூடுதலான பெறுமதியினை காண்பிப்பதுடன், இது தொடராக 3.25, கிலோ கிராம் 2.39 கிலோ கிராம் மற்றும் 2.04 கிலோ கிராம் என்ற அடிப்படையில் அமைகின்றன. 2.14 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தனிநபர் நுகர்ச்சி 1.00 கிலோ கிராமையுடம் விட கூடுதலான அளவு காண்பிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலாகும்.

2.14 அட்டவணை : நாடுகளுக்கு அமைய தேயிலை நுகர்ச்சி தொடர்பான புள்ளிவிபரங்கள

| நாடு | 2009-11 | | 2010-12 | |
|---|---|---|---|---|
| | மொத்தம் (கி.கிராம். மில்லியன்) | தனிநபர் ( கி.கிராம்) | மொத்தம் (கி.கிராம். மில்லியன்) | தனிநபர் ( கி.கிராம்) |
| குவைட் | 9.47 | 3.54 | 8.68 | 3.25 |
| லிபியா | 10.23 | 1.72 | 13.60 | 2.39 |
| துருக்கி | 150.10 | 2.06 | 151.57 | 2.04 |
| ஐக்கிய இராச்சியம் | 122.46 | 1.92 | 123.51 | 1.97 |
| ஆப்கானிஸ்தான் | 50.37 | 2.06 | 49.27 | 1.97 |
| அயர்லாந்து | 9.85 | 2.18 | 8.51 | 1.90 |
| மொரோக்கோ | 56.17 | 1.76 | 56.17 | 1.74 |
| தாய்வான் | 44.18 | 1.65 | 44.00 | 1.64 |
| கட்டார் | 2.43 | 1.42 | 2.53 | 1.46 |
| ஹொங்கொங் | 9.64 | 1.36 | 9.48 | 1.34 |
| இலங்கை | 28.03 | 1.36 | 27.79 | 1.33 |
| சிரியா | 28.54 | 1.42 | 26.50 | 1.25 |
| சிலி | 20.45 | 1.20 | 21.40 | 1.24 |
| ஈராக் | 42.00 | 1.31 | 40.35 | 1.21 |
| கென்யா | 85.03 | 1.08 | 91.63 | 1.14 |

மூலம் : வருடாந்த சர்வதேச தேயிலை (ITC) புள்ளிவிபரங்கள் – 2013

## 2.5.3. கோளமய தேயிலை உற்பத்தி

உலக தேயிலை உற்பத்தி பிரதானமாக 4 நாடுகளில் அதாவது இந்தியா, சீனா, கென்யா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு வரையறுக்கப்பட்டுள்ளதுடன், 2012ஆம் ஆண்டு (2.6 வரைபடக் குறிப்பினைப் பார்க்கவும்) ஏற்கனவே உலக உற்பத்தியின் 75% அண்மித்த அளவுக்காக அந்நாடுகள் பங்களிப்பு செய்தன. 2012ஆம் ஆண்டில் உலகத் தேயிலை உற்பத்தியாக 4.7 பில்லியன் கிலோ கிராம் சமகால சாதனை தாபிக்கப்பட்டுள்ளது. 2010-2012 ஆம் ஆண்டுகளில் கோளமயத் தேயிலை உற்பத்திக்கு பிரதானமாக தேயிலை உற்பத்தியாளர்களிடம் இருந்து பெறப்பட்ட பங்களிப்பு (100 மில்லியன் கிலோ கிராமை தாண்டுவோர் ) 2.6 படக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியா மற்றும் சீனா ஓரளவு பாரிய தேயிலை உற்பத்தியாளர்களாக நிலைப்படுத்தப்பட்டுள்ள போதிலும், இந்நாடுகளில் குறிப்பித்தக்களவு உள்நாட்டு நுகர்ச்சியின் மூலம் நுகர்வுப் பொருள் கணிசமான அளவு ஏற்றுமதி செய்யப்படும் கோளமய ஏற்றுமதியாளர்களாக கென்யா மற்றும் இலங்கை மாற்றம் பெற்றுள்ளது. சீனாவினால் 1,915 மில்லியன் கிலோ கிராம் அதிஉயரிய இடத்தில் காணப்பட்டதுடன் 2012ஆம் ஆண்டில் 1,111.8 மில்லின் கிலோ கிராம் வருடாந்த உற்பத்திக்கு உரிமைகோரி இந்தியா இரண்டாவது இடத்தில் நிலைகொண்டுள்ளது. 2012ஆம் ஆண்டின் இலங்கையின் வருடாந்த மதிப்பீட்டைத் தாண்டி கென்யா மூன்றாம் இடத்தில் தற்கி 369.6 கிலோ கிராம் உற்பத்தி மட்டத்தை பேணியுள்ளது.

2.6 வரைபடக் குறிப்பு : உலக தேயிலை உற்பத்தி புள்ளிவிபரம்




மூலம் : வருடாந்த சர்வதேச தேயிலை (ITC) புள்ளிவிபரக் குறியீடுகள் – 2012

02

கைத்தொழிலில் பக்கத் தோற்றம்

## 2.5.4. கோளமய தேயிலை விற்பனை

கொழும்பு தேயிலை ஏலவிற்பனை 2012ஆம் ஆண்டில் உயரிய விற்பனை அளவைக் கையாண்டு பிரதான ஏலவிற்பனை மத்திய நிலையமாக அதன் தரத்தினை மேம்படுத்தியது. இது எவ்வாறாக இருப்பினும். 320 மில்லியன் கிலோ கிராமை-விட மேற்பட்டளவு விற்பனையைப் பேணுவதற்கு மொம்பசா ஏலவிற்பனைக்கு முடிந்ததுடன், 2012ஆம் அண்டில் தமது விற்பனை அளவு குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்ததை கொல்கத்தா ஏலவிற்பனை மத்திய நிலையத்தில் காணமுடிந்தது.

2.15 அட்டவணை : பிரதான தேயிலை ஏலவிற்பனை தொடர்பான புள்ளிவிபரம்
(தரம் மில்லியன் கிலோ கிராம்களில், சாதாரண அலகின் -அமெரிக்க டொலர்/கிலோ கிராம்களில்)

| ஏலவிற்பனை மத்திய நிலையங்கள் | 2010 | | 2011 | | 2012 | |
|---|---|---|---|---|---|---|
| | அளவு | விலை | அளவு | விலை | அளவு | விலை |
| சிதாகொங் | 56.8 | 2.61 | 53.9 | 2.14 | 58.1 | 2.41 |
| கொசின் | 61.0 | 1.71 | 58.8 | 1.73 | 57.4 | 1.80 |
| கொழும்பு | **322.4** | **3.28** | **323.3** | **3.26** | **325.4** | **3.07** |
| குவஹாட் | 121.5 | 2.43 | 125.8 | 2.33 | 119.3 | 2.47 |
| ஜகர்த்தா | 38.5 | 1.82 | 32.8 | 1.97 | 32.0 | 1.97 |
| கல்கட்டா | 154.9 | 2.86 | 165.9 | 2.78 | 151.0 | 2.81 |
| லிம்பே | 15.8 | 1.58 | 13.3 | 1.61 | 12.5 | 1.70 |
| மும்பாய் | 348.1 | 2.54 | 333.9 | 2.72 | 321.5 | 2.88 |

மூலம் : சர்வதேச தேயிலை குழு ( *ITC* ) இணைத்தளம் ஊடாக கணிப்பீடு செய்யப்பட்டது.

கடந்த 3 ஆண்டு பூராகவும் அதிஉயரிய சாதாரண விற்பனை விலையினைப் பேணி கொழும்பு தேயிலை ஏலவிற்பனையின் மூலம் சாதனை படைக்கப்பட்டுள்ளது. மேலும் உரிய காலஎல்லைக்குள் ஒரு கிலோ கிராமை விட 3.00 அமெரிக்க டொலரைத் தாண்டிய ஒரேயொரு ஏலவிற்பனை மத்திய நிலையமாக இது காணப்பட்டது. மும்பசா ஒரு கிலோ கிராமிற்கு 2.88 அமெரிக்க டொலர் இரண்டாவது மிகப் பெரிய சாதாரண ஏலவிற்பனை விலை பெறப்பட்டதுடன், 2012ஆம் அண்டில் மூன்றாவது இடத்தில் கொல்கத்தா காணப்பட்டது.

02

கைத்தொழிலில் பக்கத் தோற்றம்

## 2.5.5 கோளமய தேயிலை ஏற்றுமதி

2012 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஒரு வருடத்திற்கு இணைவாக 9.0 மில்லியன் கிலோ கிராம் (0.5%) குறைவு கோளமய தேயிலை ஏற்றுமதியில் காண்பிக்கப்பட்டுள்ளது. கென்யா மற்றும் இலங்கையினால் தமது ஏற்றுமதி அளவை அதிகரித்து தொடராக தனித்தனியாக 2.1% மற்றும் 0.9% வளர்ச்சி பெறப்பட்டதுடன், இது 2012ஆம் அண்டின் ஏனைய பிரதான தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகளுடன் ஒப்பீடு செய்யும் போது காணமுடிந்தது. தேயிலை ஏற்றுமதி செய்யும் பாரிய நாடுகளான கென்யா, சீனா மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் 60% ஐ விட கூடுதலான கோளமய ஏற்றுமதி அளவினைப் பெற்றுள்ளன.

2.7 வரைபடக் குறிப்பு : பிரதான தேயிலை ஏற்றுமதியாளர்கள்




மூலம் : வருடாந்த சர்வதேச தேயிலைக் குழு புள்ளிவிபர குறியிடு 2012 குறிப்பு மீள் - ஏற்றுமதியினை கருத்திற் கொள்ளாது இலங்கை கணிப்பீடு செய்தல்

2011 ஆம் ஆண்டின் ஏற்றுமதி வருமானத்தின் பிரதானமாக தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகள் கீழேயுள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளன. கென்யா தேயிலை ஏற்றுமதி மூலம் கணிசமான வருமானத்தை உழைத்த நாடாக தெரியவந்துள்ளது. இது எவ்வாறாக இருப்பினும் 2011ஆம் ஆண்டு வரை பிரதான ஏற்றுமதி வருமானத்தை ஈட்டிய நாடாக இலங்கையும் அடங்குகின்றது.

2.16 அட்டவணை : அதிஉயரிய ஏற்றுமதி வருமானம் (2012)

| நாடு | ஏற்றுமதி வருமானம் (அ.டொ. மில்லியன்) |
|---|---:|
| கென்யா | 1,328.0 |
| இலங்கை | 1,324.7 |
| சீனா | 1,115.7 |
| இந்தியா | 686.8 |
| வியட்நாம் | 227.0 |
| இந்தோனேசியா | 156.7 |

மூலம் : வருடாந்த சர்வதேச தேயிலைக் குழு புள்ளிவிபர குறியிடு 2013




# Export Markets of Ceylon Tea

02

## 2.6. இலங்கை தேயிலை தொடர்பான ஏற்றுமதி சந்தையின் மீளாய்வு

கைத்தொழிலில் பக்கத் தோற்றம்

மொத்த இலங்கை தேயிலை ஏற்றுமதியில் 15.2% பங்கு " இலங்கை தேயிலை" (Ceylon Tea) பிரதான கொள்வனவாளராக ரஷ்யா கூட்டரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்டதுடன், தொடராக 12% மற்றும் 8% பங்குகளைக் கொண்டதாக 2012ஆம் ஆண்டில் இலங்கை தேயிலையைக் கொள்வனவு செய்த 2ஆம் மற்றும் 3ஆவது மிகப் பாரிய கொள்வனவாளர்களின் இடத்தினை ஈரான் மற்றும் சிரியா கொண்டுள்ளன. ஈரானின் நேரடி ஏற்றுமதி தொடர்பில் கருத்திற் கொள்ளும் போது ஈரானினால் 14% தேயிலை கொள்வனவுக்கு பங்களிப்பு செய்கிறது. ஊண்மையிலேயே ஈரான் மற்றும் ஈராக் இலங்கை தேயிலையை மொத்த அடிப்படையில் தேயிலை ஏற்றுமதி 2011ஆம் ஆண்டைவிட சிறந்த நிலையில் காணப்படுகின்றது. இந்த நாடுகளினால் 30.93 மில்லியன் தொடக்கம் 38.12 மில்லியன் கிலோ ஈரானுக்கும் 22.62 கிலோ தொடக்கம் 23.48 கிலோ மில்லியன் ஈராக்கிற்கும் 19.17 மில்லியன் கிலோ தொடக்கம் 23.13 கிலோ வரை துருக்கிற்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. ஈரானுக்கு ஐக்கிய அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளினால் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டமையினால் பாரிய பாதிப்புக்கள் ஏற்பட்ட போதிலும் உள்நாட்டு மோதல்கள் மற்றும் உள்நாட்டு நெருக்கடிகள் உருவாக்குதல் போன்ற நிலமைகளுக்கு தொடர்ச்சியாக முகங்கொடுக்க வேண்டிய நிலை ஈராக்கிற்கு ஏற்பட்டமையினால் இதனை பாரிய வெற்றியாகக் கருதமுடியும். சாதாரண நிலமையின் கீழ் இலங்கை தேயிலையின் அடைவு மட்டம் சிறந்த நிலையில் இருக்கும் என்பது தெளிவானது. ஈராக் நான்காவது மிகப் பெரிய கொள்வனவாளராக இருப்பதுடன், 23.5 கிலோ நேரடி ஏற்றுமதி மேற் கொள்ளப்படுகின்றது. 2010ஆம் ஆண்டில் 13 மில்லியன் கிலோவுக்கு இணைவாக 81% முன்னேற்றத்தை பெற்றுக் கொள்ள முடிந்தமை குறிப்பிடத்தக்கது.

2012ஆம் ஆண்டில் குறைந்தளவிலான மீள் ஏற்றுமதி செயற்பாடுகள் டுபாயில் மேற்கொள்ளப்பட்டதுடன், ஐக்கிய எமீர் இராச்சியத்தின் 21.76 மில்லியன் கிலோ கொள்வனவு 11.58 கொள்வனவாக வீழ்ச்சியடைந்தது. (இது 50% வீழ்ச்சியாகும்.). பிராந்திய ரீதியில் நோக்கும் போது மத்தியகிழக்கு மற்றும் வடஆபிரிக்காவினால் மொத்த இலங்கை தேயிலையின் கப்பலேற்றப்பட்டவைகளில் 55% அளவு 2012ஆம் அண்டில் கொள்வனவு செய்யப்பட்டது. .இலங்கை தேயிலைக்காக காணப்படும் ஒரேயொரு அபிவிருத்தியடைந்து வரும் சந்தையான ஜப்பானினால் மிகப் பெரிய முதல் கொள்வனவாளர்கள் 10 பேர்களுக்கு இடையே தமது கௌரவத்தைப் பாதுகாத்து 2011ஆம் ஆண்டு 11.65 மில்லியன் கிலோ கொள்வனவுக்கு இணைவாக 2012ஆம் ஆண்டில் 9.54 மில்லியன் கிலோ கொள்வனவு செய்யப்பட்டது. (மொத்த ஏற்றுமதிப் பங்குகளில் 4%) 2012ஆம் ஆண்டில் பாரிய இயற்கை பேரழிவினை ஜப்பான் சந்திக்க நேரிட்டமையினால் கொள்வனவு வெகுவாகக் குறைவடைந்தது.

நாட்டில் சுமூகநிலை காணப்படாத போதிலும் லிபியா 7.40 மில்லியன் கிலோ தொடக்கம் 16.32 மில்லியன் கிலோ வரையான கொள்வனவு முன்னேற்றங்கள் காணப்படுகின்றன. இலங்கை தேயிலையைக் கொள்வனவு செய்யக்கூடிய மற்றுமொரு முக்கிய இடமாக ஜோர்தான் கருதப்பட்ட போதிலும், கொள்வனவு அளவு குறைவடைவதற்கு காரணமாக அமைந்தது. ஈராக் கூடுதலான அளவு நேரடியாக கொள்வனவு செய்யப்பட்டமையும். ரஷ்யா மற்றும் ஏனைய இராச்சியங்களினால் கொள்வனவு செய்யப்பட்ட அளவு மொத்தமாக இலங்கை தேயிலை ஏற்றுமதியின் 25% சதவீதமாகும். மேற்கு, மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளினால் 7% தொடக்கம் 8% வரை இணைந்தளவு தேயிலை கொள்வனவு மேற்கொள்ளப்பட்ட போதிலும், கிழக்கு ஆசியா மற்றும் ஓசானியா இராச்சியங்கள் 7% தொடக்கம் 8% அளவினைப் பெற்றுள்ளன. இலங்கை தேயிலையின் எஞ்சிய 5% அளவு இறக்குமதி செய்யப்படுவது மேற்கூறப்பட்ட வலய நாடுகளில் அடங்காத அமெரிக்கக் கண்டத்தின் ஏனைய வலையங்களாகும்.

## 2.6.1. ரஷ்யா மற்றும் சுயாதீன இராச்சியங்களின் பொது சபையில் வலயம்.

02

கைத்தொழிலில் பக்கத் தோற்றம்

2.17. அட்டவணை : ரஷ்யா மற்றும் சுயாதீன இராச்சியத்திற்குட்பட்ட நாடுகளின் இலங்கை தேயிலைக்கான சந்தைப் பங்கு

| இல. | நாடு | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| | | சந்தைப் பங்கு-% | | | |
| 1 | ரஷ்யா | 23 | 25 | 26 | 33 |
| 2 | யுக்ரேன் | 32 | 32 | 34 | 36 |
| 3 | அஸர்பைஜான் | 61 | 68 | 98 | 98 |
| 4 | கசகஸ்தான் | 5 | 5 | 2 | 2 |
| 5 | உஸ்பகிஸ்தான் | 41 | 48 | 42 | 31 |
| 6 | கிர்கிஸ்தான் | 35 | 33 | 28 | 20 |
| 7 | சுயாதீன இராச்சியத்திற்குட்பட்ட ஏனைய நாடுகள். | 30 | 49 | 32 | 34 |

மூலம் : சர்வதேச தேயிலைக் குழு புள்ளிவிபரவியல் தகவல் வெளியீடுகள் 2013

ரஷ்யா மற்றும் சுயாதீன இராச்சியங்களின் பொதுச் சபையில் அடங்கும் வலயங்கள் சம்பிரதாய தேயிலை பானமாகக் கொள்ளும் வலயங்கள் என்பதுடன் அதிஉயரிய உபசரணை கொண்டதாக தேயிலை பானம் கருதப்படுகின்றது. இவ்வலயங்களில் மிகுந்த விருப்பத்திற்குரிய பானங்களுக்கிடையே சுகாதாரத்திற்கு மிகவும் பொருத்தமான பானமாக தேயிலை கருதப்படுகின்றது. மேற்கூறப்பட்ட 2.17 அட்டவணைக்கு அமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள சந்தை நிலமைகள் ரஷ்யா மற்றும் சுயாதீன இராச்சியங்களின் பொதுச் சபைக்குரிய வலயத்தில் காணப்படுகின்றது.

## 2.6.1.1 ரஷ்யா



இலங்கை தேயிலையை கொள்வனவு செய்யும் மிக பாரிய தேசமாக ரஷ்யா கருதப்படுகின்றது. 33% சந்தைப் பங்குகளைக் கொண்டதாக 2012ஆம் ஆண்டில் இலங்கை சந்தையின் முன்னணி நாடாக ரஷ்யா காணப்பட்டது. 2012ஆம் ஆண்டில் ரஷ்யா 180,129,924 கிலோ கிராம் தேயிலை இறக்குமதி செய்ததுடன் இது 59,072,933 கிலோ கிராம் இலங்கையில் இருந்து இறக்குமதி செய்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் இருந்து ரஷ்யா மொத்த அடிப்படையில் தேயிலை இறக்குமதி செய்யும் பிரதான நாடாகும். தொகை தேயிலைக்காக வரிச் சலுகை மற்றும் ஆரம்பப் பொதியிடப்பட்ட தேயிலைக்காக 20% வரி விதிக்கப்பட்டுள்ளமை இதற்குப் பிரதான காரணமாக கரு-தமுடியும். பெறுமதி சேர்க்கப்பட்ட ஏற்றுமதிகளில் தேயிலை பக்கட் மற்றும் தேயிலை பொதி கப்பல் பொருள் அளவில் தொடராக 15% இனாலும் 24% இனாலும் குறைவடைந்துள்ளது. "ரிஸ்டன்;" (ஐக்கிய இராச்சியத்தின் பான வகைகள்) போன்ற ஒரு சில தேயிலை வகைக-ளுடன் தொடர்புபட்ட பொதியிடும் தொழிற்சாலைகள் ரஷ்யாவில் செயல்படுவதுடன், "அக்பார்;" பொதியிடும் செயற்பாடுகள் பல ஆண்டுகள் தொடக்கம் ரஷ்யாவில் பொதியிடும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை தேயிலை வகையாகும். இலங்கையில் பொதியிடுவது தொடர்பிலான ஒப்பந்தத்தைப் பெற்றுள்ள பிரதான தேயிலைக் கம்பனிகள் பல காணப்படுகின்றன. (அஹமட், லிப்டன், ஒரின் போன்றன) ரஷ்யா அவர்களது பொதியிடும் கொள்ளளவினை அதிகரித்துள்ளது.

ரஷ்யா கூட்டரசின் மிகவும் பிரபல்யம் வாய்ந்த தேயிலை வகைக-ளில் ஒரிம்-டிரேட், எல்எல்சி, (பச்சை, பீலிட், டெஸ்ட், பிரின்சஸ், கீட்டா, பிரின்சஸ் நூரி, பிரின்சஸ் ஜாவா) முன்னணியில் இருப்பதுடன், இக்கம்பனியின் "மைஸ்கி" மற்றும் "லிஸ்மா" ஆகிய தேயிலை வகைகளும் யுனிலிவர் கம்பனியின் "லிப்டன;" "புருக;" மற்றும் "பெசோடா", அஹமட் கம்பனியின் "அஹமட;" ஆகிய தேயிலை வகைகள் பிரபல வகைகளாக மாற்றம் பெற்றுள்ளன.

02

கைத்தொழிலில் பக்கத் தோற்றம்

## 2.6.1.2. யுக்ரேன்



ரஷ்யாவிற்கு அடுத்தபடியாக வலயத்தில் இரண்டாவது மிகப் பாரிய தேயிலை சந்தையாக யுக்ரேன் இருப்பதுடன் இது 36% சந்தைப் பங்குகளுடன் முன்னணியில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. யுக்ரேன் மக்கள் பிரதானமாக கறுந்தேயிலையினை நுகர்வதுடன், தேயிலை இறக்குமதிகளில் பாரிய முன்னேற்றங்களும் காணப்படுகின்றன. சம்பிரதான தேயிலை வகை பிரபல்யத் தேயிலை வகையாகும். சகல யுக்ரேன் மக்களும் தேயிலையை நுகர்வருடன், குளிர்காலத்தில் கேள்விகள் அதிகரிக்கின்றன. தேயிலை நுகர்வு பருவ காலங்களுக்கு அமைய மாற்றமடைகின்றன. இந்நாடுகளில் பொருளாதாரத்திற்கு அமைய மற்றும் நிலையான நிலைப்பாட்டுக்கு அமைய தேயிலையின் விலைகள் நிலையாகக் காணப்படுகின்றன. மேடி, ஓரிடி, அஹமட் தேயிலை, சுலோட்டியா போன்ற பிரபல இலங்கை தேயிலை வகைகளுக்கு இந்நாட்டில் கூடுதலான கேள்விகள் காணப்படுகின்றன. சுகாதாரத்திற்கு உகந்த பானமான பச்சை தேயிலை வகைகள் தொடர்பில் வாடிக்கையாளர்கள் கூடுதல் அறிவுறுத்தப்பட்டமையினால் பாரிய நகரங்களில் பச்சை தேயிலைக்கான கேள்விகள் அதிகரித்துள்ளன.

மொத்த தேயிலை ஏற்றுமதி மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலைக்கு இடையே ஏற்றமதி இறக்குமதி வரி முரண்பாடுகள் (பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலைக்காக 10% மற்றும் தொகைத் தேயிலைக்காக வரிச் சலுவை) ரஷ்யாவைப் போன்று பாரிய அளவிலாக அமையாத போதிலும், ஏற்றுமதி, இறக்குமதிகளில் மாற்றம், இலங்கை தேயிலை விலை அதிகரிப்பு மற்றும் கூடுதலான போக்குவரத்துக் கட்டணம் (முன் பொதியிடப்பட்ட தேயிலை வகைகளுக்கு இணைவாக தேயிலை தொகைகள் இடப்படும் பொதியின் அளவு) இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்காக தேயிலை பொதியிடும் செயற்பாடுகள் ஊக்குவிக்கப்பட்டுள்ளமை இதற்கு பிரதான காரணமாகும். பொருளாதார நெருக்கடி மற்றும் செலாவணி வீழ்ச்சியடைந்தமையால் பொருளாதாரத்திற்கு அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளதுடன், முன் பொதியிடப்பட்ட தேயிலைக்கான கட்டளைகளைக் குறைத்து உள்நாட்டு ரீதியில் பொதியிடுவதற்காக மொத்தத் தேயிலை கப்பல் பொருட்களுக்கு கட்டளையிடும் அளவினை அதிகரிக்க இறக்குமதியாளர்கள் ஆர்வம் ஊட்டப்பட்டமையும் பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள அழுத்ததிற்கு பிரதான காரணமாக அமைந்துள்ளது. வெளிநாடுகளில் பொதியிடும் போது ஏனைய வகைகளைக் கொண்ட மிகுந்த இலாபகரமான தேயிலை கூடுதலான விகிதாசாரம் கலக்குவதற்காக பயன்படுத்தப்படுவதனால் சிக்கனமான முறையில் செயற்பட முடிந்துள்ளது.

### 2.6.1.3 அஸர்பய்ஜான்



2009 ஆண்டு தொடக்கம் 2012ஆம் ஆண்டு வரையான காலத்திற்குள் இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை வகைகளின் அளவு 4,698 மெற்றித் தொன் தொடக்கம் 7500 மெற்றித் தொன் வரையாகும். 2011 ஆம் ஆண்டில் இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை அளவு 7385 மெற்றித் தொன் என்பதுடன் இது மொத்த ஏற்றுமதியில் 80%. ஆகும். இது 2010ஆம் ஆண்டுக்கு இணைவாக 11.6% முன்னேற்றத்தைக் காண்பிக்கின்றது. மொத்த ஏற்றுமதி அளவு 1.540 மெற்றித் தொன்னினால் குறைவடைந்தமையினால் 2012ஆம் ஆண்டில் மொத்த ஏற்றுமதி அளவு 98% . அஸர்பய்ஜான் புள்ளிவிபரவியல் முகவர் நிறுவனத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வ தகவல்களுக்கு அமைய இறக்குமதி செய்யப்பட்ட தேயிலை அளவுக்கு அமைய இலங்கை இந்தியாவைவிட முன்னணியில் இருப்பதுடன், ஜோர்ஜியா, ரஷ்யா மற்றும் துருக்கி ஏனைய விநியொகஸ்தர்களாகும்.

இலங்கை சுங்க புள்ளிவிபரங்களுக்கு அமைய 2011ஆம் ஆண்டின் 11,970 மெற்றித் தொன் அளவு ஏற்றுமதி செய்யப்பட்டது. இது 92% தொகை அடிப்படையில் என்பதுடன், 5.6% பக்கட்டுக்களாகும். அத்துடன், 0.08% தேயிலை பொதி மற்றும் 0.14% பச்சை தேயிலையாகும். 2.06% ஏனைய வகைகளைப் போல் வகைப்படுத்தப்பட்டவைகளாகும். 2011ஆம் ஆண்டில் 10,614 மெற்றித் தொன் அளவு ஏற்றுமதி செய்யப்பட்டதுடன், 94% தொகை அடிப்படையிலும் 5.72% பக்கட் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்டதாகும். 2012 ஆம் ஆண்டின் ஏற்றுமதி 11.33% இனால் குறைவடைந்துள்ளது. இதன் மூலம் இவ்வாண்டில் 7.5 மில்லியன் கிலோ கிராமினால் (4% இனால்) இலங்கை தேயிலை உற்பத்தி வீழச்சியடையக் காரணமெனக் குறிப்பிடமுடியும். இது எவ்வாறாக இருப்பினும், ஆண்டின் முதல் பகுதியில் உலக கறுந்தேயிலை அறுவடை 60 மில்லியன் கிலோவினால் மறை விருத்தி காணப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டு உற்பத்தி உட்பட மொத்த தேயிலை விற்பனை கொள்ளளவு M/S Azersun Holding, Baku மற்றும Beta தேயிலை கம்பனியினால் நிறுவகிக்கப்படுகிறது. விற்பனை Azersun Holding, சந்தையின் 50% ஐ விட கூடுதலான பங்களிப்பு உரிமையினைக் கொண்டுள்ளது. Final, Philosofer, Blendo, Azercay மற்றும் Maryam அவர்களின் பிரபல்யமான தேயிலை வகைகளாகும். Beta தேயிலைக் கம்பனி விற்பனை மூலம் 35% காணப்படுகின்றது. அவர்களின் வகைகளுக்கு அமைய Beta, Champion மற்றும் Bayce Impra, Ahmad, Lipton மற்றும் Hyleys உட்பட எஞ்சிய வகைகளுக்கான 15% சதவீதத்தை விட குறைந்த பங்களிப்பு காணப்படுகின்றது.

### 2.6.1.4 கஸகஸ்தான்



ரஷ்யா மற்றும் உஸ்பகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக CIS மூன்றாவது மிகப் பெரிய தேயிலை நுகர்வு நாடாகும். கஸகஸ்தானில் மொத்த தேயிலை விற்பனை கொள்ளளவு 26,000 – 29,000 மெற்றித் தொன் வகையான பங்களிப்பைக் கொண்டுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஏனைய CIS நாடுகளுக்கு இணைவாக கஸகஸ்தானில் தேயிலை பாலுடனேயே நுகரப்படுகிறது. அத்துடன் உலர்த்தப்பட்ட பழ வகைகள் ஜாம், தேன், மரமுந்திரிகை, பிரேன்ஸ் மற்றும் சொக்லேட் போன்ற பல்வேறுபட்ட வகைகளுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. கஸகஸ்தானில் தனிநபர் தேயிலை பயன்பாடு 1.8 கிலோ கிராமிற்கு அண்மித்த பெறுமதியைக் காண்பிக்கின்றது. கஸகஸ்தானில் அதிஉன்னத பான விற்பனை வகைகளில் தேயிலைக்கு சிறந்த சந்தை வாய்ப்புகள் காணப்படுவதுடன், நாட்டில் காணப்படும் கலாச்சாரம் மற்றும் சம்பிரதாயங்கள் இலகுவில் மாற்றமடையாமையினால் மிக நீண்ட காலமாக கேள்வியினைப் பேணுவதற்கு முடிந்தள்ளது. TealandTOO மற்றும் Tea House TOO ஆகிய முன்னணியாளர்கள் சில்லறை விலைக்கு விற்பனையில் 29% மாகப் பேணுகின்றன. 1998ஆம் ஆண்டு தொடக்கம் கஸகஸ்தானுக்கு தேயிலை விநியோகிக்கும் இரண்டாவது மிகப் பெரிய விநியோகஸ்தராக இலங்கை காணப்படுவதுடன், இந்நிலமை 2003ஆம் அண்டு வரை காணப்பட்ட இது 2012ஆம் அண்டின் சந்தைப் பங்குகள் 2% ஆகும்.

சந்தையில் பங்குகள் குறைவடைவதற்கு பிரதான காரணமாக அமைந்தது சி.டி.சி தேயிலை இறக்குமதி என்பதுடன், கசகஸ்தானில் தேயிலை சந்தையில் பிரதானமாக இறக்குமதி செய்யப்படுவது சி.டிசி. தேயிலை வகையாகும். எனவே புள்ளிவிபரங்களுக்கு அமைய கென்யாவுக்கு உயரிய சந்தைப் பங்களிப்புக்கள் காணப்படுகின்றன. அஸர்பைஜான், ஐக்கிய அரபு எமீர் இராச்சியம் மற்றும் துருக்கி போன்ற ஏனைய தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளின் சந்தைப் பங்களிப்பு கிரமமாக குறைவடைந்துள்ளதை மேற்பார்வை செய்ய முடியும்.

கிலசிக் தேயிலை (15%)மற்றும் இப்பிரியல் தேயிலை (தனியர் கம்பனி) (9.3%), இனால் அனுப்பப்பட்ட தேயிலை வகைகளைவிட 2012ஆம் ஆண்டில் கஸகஸ்தானுக்கு தேயிலை விநியோகத்தை மேற்கொண்ட பிரதான விநியோகஸ்தராக அமைந்தது Ranfer தேயிலை கம்பனியாகும். தொகை தேயிலைக்காக அமுல்படுத்தப்பட்ட வரிச் சலுகை பக்கட்டுக்களாக தயாரிக்கும் செயற்பாடுகளுக்கு ஊக்கமளிக்கப்பட்டன.

### 2.6.1.5 உஸ்பகிஸ்தான்



உஸ்பகிஸ்தானில் பிரதானமாக பச்சைத் தேயிலைக்கான சந்தை வாய்ப்புக்கள் காணப்படுவதுடன், சீனா பிரதான விநியோகஸ்தராகும். இதனால் இலங்கையின் சந்தைப் பங்களிப்பு குறைவடைந்துள்ளது. தேயிலை மூலப்பொருள் உஸ்பகிஸ்தானுக்கு வழங்கும் அடிப்படை விநியோகஸ்தர்களில் ஒரு விநியோகஸ்தரான 31% சந்தை பங்குகளுக்கான உரிமையும் இலங்கைக்குக் காணப்படுகின்றது.

ஐக்கிய அரபு எமீர் இராச்சியம் ஜோர்ஜியா, டெக்மெனிஸ்தான் மற்றும் ரஷ்யா ஊடாக உஸ்பகிஸ்தானுக்கு தேயிலை இறக்குமதி செய்யப்படுகின்றது. பிரதான தேயிலைக் கம்பனியாக "Ahmad" (ஐக்கிய இராச்சியம்), "Alokozay-tea" (ஐக்கிய அரபு எமீர்), "Beta" (துருக்கி), "Jambo" (கென்யா) "Impra" (இலங்கை), "Weston", "SAM (Samarqand Tea) மற்றும் "Tashkent". ஆகும். மூலங்களுக்கு அமைய, Beta, Bayce, Tashkent Tea, Impra, Ahmad மற்றும் Jaf பிரபல்யமிக்க தேயிலை நாமங்களாகக் கருதப்படுகின்றன.

02

கைத்தொழிலில் பக்கத் தோற்றம்

### 2.6.1.6 கிரிகிஸ்தான்



இந்த நாடு விசேடமாக கறுந்தேயிலை நுகரும் நாடாகும். உண்மையான தேயிலைப் பயன்பாட்டின் அளவு வருடத்திற்கு 4,000 மெற்றித் தொன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. சந்தை வட்டாரங்களின் ஊடாக இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சுமார் 5.5 மில்லியன் மக்கள் இங்கு வாழ்கின்றனர். தனிநபர் நுகர்வு வருடத்திற்கு 700 கிலோ கிராமாகும். பச்சைத் தேயிலை குளிர் காலத்தில் கூடுதலாகப் பருகுவதுடன், கறுந்தேயிலை பொதுவாக சகல காலங்களிலும் நுகரப்படுகின்றது. நிறுவன உணவு பிரிவினைத் தவிர தேயிலைப் பொதி நுகர்வு விசேடமாகும். அரசின் மூலங்களுக்கு அமைய 3,500 – 4,000 மெற்றித் தொன் உத்தியோகபூர்வமாக நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகிறது. இதற்கு மேலதிகமாக சீனா, கசகஸ்தான், டேமனிஸ்தான், உஸ்பகிஸ்தான் ஆகிய நாடுகளின் எல்லைகளின் ஊடாக மேற்கொள்ளும் வர்த்தகத்தின் ஊடாகவும் அண்ணளவாக 500 மெற்றித் தொன் நாட்டிற்கு தறுவிக்கப்படுகின்றது.

CIS சர்வதேச அரச புள்ளி விபரக் குழு மூலம் வழங்கப்பட்ட புள்ளிவிபரங்களுக்கு அமைய 2012ஆம் ஆண்டு 20% சந்தைப் பங்குகளைக் கொண்ட இணைந்த சந்தையின் முன்னணியில் இருப்பதுடன், சீனா இரண்டாவது இடத்தைக் கொண்டுள்ளது. பக்கட் அடிப்படையிலான தேயிலைக்காக கூடுதலான கேள்வி காணப்படுகின்றன. இதன் மூலம் தொகைத் தேயிலை 5% மற்றும் பொதித் தேயிலை 2% மாகக் காணப்படுகின்றது. 93% தேயிலை சந்தைக் கொள்ளவு காணப்படுவதாக சந்தை மூலங்கள் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தொகைத் தேயிலை கிராமிய பிரதேசங்களில் மாத்திரம் விற்பனை வைக்கப்பட்டுள்ளதுடன், தேயிலை பொதி மற்றும் சுவையூட்டப்பட்ட தேயிலை நுகர்வு உயரிய மட்டத்தில் காணப்படுவதில்லை. பச்சைத் தேயிலைக்காகக் காணப்படும் கேள்வி விருத்தியடைந்துள்ளது.

### 2.6.1.7 சுயாதீன இராச்சியங்களில் பொதுச் சபையில் அடங்கும் ஏனைய நாடுகள்.

#### பெலரஸ்



9.48 மில்லியன் சனத்தொகை இங்கு காணப்படுகின்றது. பெலரசில் மொத்த தேயிலை விற்பனை வருடத்திற்கு 8,000 மெற்றித் தொன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் இதன்மூலம், 50% ரஷ்யா மற்றும் யுக்ரேன் எல்லையின் ஊடாகப் பெறப்படுகின்றது. CIS இராச்சியங்களுக்கு இடையிலான புள்ளிவிபரக் குழு மூலம் பெறப்பட்ட தகவல்களுக்கு இணங்க இலங்கையின் சந்தைப் பங்களிப்பு 23.5% ஆகும்.

இலங்கை சுங்கப் புள்ளிவிபரங்களுக்கு அமைய இலங்கை பெலரசுக்கு நேரடியாக தேயிலை ஏற்றுமதி செய்கின்றது. இந்த சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்படும் இலங்கை தேயிலையை 70% மேற்பட்டவை பெறுமதி சேர்க்கப்பட்டதாகும். பெலரஸ் சந்தைக்கு தொடர்ந்தும் தேயிலை விநியோகிக்கும் கம்பனிளாக Orimi Trade (Princes Series, Green field & TESS), Ahamed Tea (Ahamed), Lipton, May Tea Company (Maisky Chai) Riston, Dilmah, Jaf, Sunleaf, Olinda, Mabroc, Tea Tang மற்றும் Basilur சந்தை மூலங்களின் ஊடாக அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளன.

#### மொல்டோவா



மொல்டோவா சிறியளவு பொருளாதார முன்னேற்றத்தை எட்டிய நாடாகக் காணப்படுவதுடன், இது ஐரோப்பாவில் மிக வறுமையான நாடாகும் இங்கு தனிநபர் தேயிலை நுகர்வு 500 கிராமாகும். உண்மையான விற்பனைக்கமைய வருடாந்தம் 2,500 – 3,500 மெற்றித் தொன்னுக்கு அண்ணளவான பெறுமதி தேயிலைக்காகக் காணப்படுவதாக மொத்த சந்தை மதிப்பீடுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கறுந்தேயிலை மற்றும் பச்சைத் தேயிலை நுகர்வு விகிதாசாரம் 95:5 ஆகும். சுவையூட்டப்பட்ட தேயிலை குறிப்பிட்டளவு நுகரப்படுவதுடன் தேயிலைப் பொதிக்காக காணப்படும் கேள்வி நகரப் பிரதேசங்களில் கிரமமாக அதிகரித்துள்ளன. தேயிலை யுக்ரேன் எல்லையின் ஊடாக மொல்டோவிற்கு அனுப்பப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

2012 ஆம் ஆண்டில் இலங்கை 40% பங்களிப்புக் கொண்ட சந்தையில் முன்னணியில் உள்ளது. ரஷ்யா மற்றும் யுக்ரேனில் இருந்து இறக்குமதி செய்யப்படும் தேயிலை மொல்டோவிற்கு “இலங்கை தேயிலை” மீள் ஏற்றுதமி செய்யப்படுகின்றது. இலங்கை தேயிலை பிரபல்யமிக்கது என்பதுடன், சகல விற்பனை நிலையங்களிலும் கூடுதலாகக் காணப்படுகின்றன,

### டெக்மினிஸ்தான்



இந்நாட்டில் மொத்த தேயிலை சந்தைக் கொள்வனவு வருடாந்தம் 1.5 கிலோ கிராம் தனிநபர் நுகர்ச்சியுடன் சுமார் 8,000 மெற்றித் தொன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இந்நாடு பச்சைத் தேயிலைச் சந்தையாகும். இது சீனாவில் இருந்து பெறப்படுவதுடன், கறுந்தேயிலை ஐக்கிய அரபு எமீர் இராச்சியம், ஈரான், ஜோர்ஜியா மற்றும் இலங்கையில் இருந்து தறுவிக்கப்படுகின்றன. ஈரானின் கறுந்தேயிலை கூடுதலாகக் காணப்படுவதுடன், அந்நாட்டில் இது பிரபல்யமிக்கதாகவும் உள்ளது. பச்சைத் தேயிலை கிராமிய பிரதேசங்களிலும், கறுந்தேயிலை நகரப் பிரதேசங்களிலும் கூடுதலாக நுகரப்படுகின்றன.

இலங்கை சுங்கப் புள்ளிவிபரங்களுக்கு அமைய Imperial தேயிலை 35%, Akbar Brothers 17% மற்றும் Union Commodities 4.5% அப்பால் 2012 ஆம் ஆண்டில் மொத்த ஏற்றுமதியில் 42% பங்களிப்புடன். JCEY தேயிலை முன்னணியில் உள்ளது.

### தஜிகிஸ்தான்



தஜிகிஸ்தான் சந்தையில் வருடாந்தம் 6,000 -7,000 மெற்றித் தொன் வரையான பரம்பல் காணப்படுவதாக கருதப்படுகின்றது. சந்தை மூலகங்களுக்கு அமைய கொள்வனவு சக்தி மிகப் பின்னடைந்த நிலையில் காணப்படுவதனால் இலாபரகமான தேயிலைக்கே கூடுதலான கேள்விகள் காணப்படுகின்றன. இலங்கை சுங்கப் புள்ளிவிபரங்களுக்கு 37.6 மற்றும் மெற்றித் தொன் 27.7 மெற்றத் தொன் என்பதுடன் இது சந்தைப் பங்களிப்பில் 3% ஆகும். அத்துடன், தொகைத் தேயிலை கப்பலேற்றல் 2012ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டதுடன், 2011ஆம் ஆண்டில் பக்கட் தேயிலை கப்பலேற்றல் 55% இனால் குறைவடைந்தது. 2012ஆம் ஆண்டில் கப்பலேற்றப்பட்டதன் மொத்த அளவு 32% என்பதுடன், 2011ஆம் ஆண்டின் அவ்வாண்டுக்கான மொத்த ஏற்றுமதி 52% ஆகும். இது பாரிய 26% பின்னடைவினைக் காண்பிக்கின்றது. இதற்கமைய, மறைவிருத்தி புள்ளிவிபரங்கள் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளன.

## 2.6.2 மத்திய கிழக்கு மற்றும் வலைகுடா வலயம்

வலயத்தில் அமைந்துள்ள டுபாய் இராச்சியத்தில் மீள்ஏற்றுமதி மற்றும் ஜாபில் அலி சுதந்திர வர்த்தக வலயம் (JAFZA) இல் கலப்புத் தேயிலை மற்றும் பொதியிடலுக்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளமையினால் ஐக்கிய அரபு எமீர் இராச்சியம் உட்பட பிரதான சந்தை தேயிலை இறக்குமதி செய்யும் நாடுகளாக மாற்றம் பெற்றுள்ளன. வலய சந்தையில் அரசியல் நிலையற்ற தன்மை மற்றும் வரி உட்பட வரியல்லாத பிரச்சினைகள் காரணமாக டுபாயில் மீள்ஏற்றுமதி வர்த்தகத்திற்கு பல ஆண்டுகளாக இலாபகரமான சூழல் உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஈரான், ஐக்கிய அரபு எமீர் இராச்சியத்தின் டுபாய் நாட்டில் இருந்து தேயிலை கொள்வனவு செய்யும் மிகப் பாரிய கொள்வனவாளர் என்பதுடன், சவூதிஅரேபியா, ரஷ்யா, ஈராக், சுயாதீன இராச்சியங்களின் பொதுச் சபைக்கு (CIS) இல் அடங்கும் நாடுகள் மற்றும் ஏனைய மத்திய கிழக்கு நாடுகளிலும் மீள்ஏற்றுமதி சந்தை குறிப்பிடத்தக்களவு பங்களிப்பு செய்துள்ளன.

02

கைத்தொழிலில் பக்கத் தோற்றம்

2.18. அட்டவணை : மத்திய கிழக்கு மற்றும் வலயகுடா நாடுகளின் இலங்கை தேயிலைக்கான சந்தைப் பங்குகள்

| இல. | நாடு | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| | | சந்தை பங்குகள் - % | | | |
| 1 | ஐக்கிய அரபு எமீர் இராச்சியம் | 42 | 34 | 29 | 18 |
| 2 | ஈரான் | 55 | 50 | 47 | 57 |
| 3 | சிரியா | 94 | 92 | N/A | N/A |
| 4 | ஈராக் | 22 | 33 | 55 | 60 |
| 5 | சவூதிஅரேபியா | 34 | 30 | 28 | 30 |
| 6 | ஜோர்தான் | N/A | N/A | N/A | N/A |
| 7 | துருக்கி | N/A | N/A | N/A | N/A |
| 8 | குவைட் | 97 | 91 | 89 | 86 |
| 9 | லெபனான் | N/A | 92 | N/A | 96 |

மூலம் : சர்வதேச தேயிலைக் குழு புள்ளிவிபரவியல் தகவல் வெளியீடுகள் 2013

## 2.6.2.1 ஐக்கிய அரபு எமீர் இராச்சியம்



டுபாய் சுங்கத் திணைக்கள அறிக்கைகளுக்கு அமைய 2008/2009 கால எல்லைக்குள் காணப்பட்ட நிதி நெருக்கடியின் அழுத்தங்கள் காரணமாக தேயிலை இறக்குமதி 2010ஆம் ஆண்டில் மீள விரிவான நிலையை அடைந்ததுடன் தேயிலை இறக்குமதி 84,804 மெற்றித் தொன்னாகக் காணப்பட்டது. இது எவ்வாறாக இருப்பினும் இந்த முன்னேற்றத்தினை எதிர்வரும் இரு ஆண்டுகளுக்காக தொடர்ந்தும் பேணுவதற்கு டுபாய் இராச்சியத்திற்கு முடியவில்லை என்பதுடன், 2011ஆம் ஆண்டில் இறக்குமதி அளவு 73,469 மெற்றித் தொன் வரையும் 2012ஆம் ஆண்டுக்காக இறக்குமதி அளவு 63,600 மெற்றித் தொன் வரையும் வீழ்ச்சி கண்டது. டுபாய் இராச்சியத்தில் தேயிலை மீளஏற்றுமதிப் பிரிவுக்கு வெளி அடைவு மட்டங்கள் காரணமாக அமைந்ததுடன், குறிப்பிடத்தக்களவு அழுத்தங்கள் கடந்த ஆண்டில் இடம்பெற்றதுடன், மொத்தத் தேயிலை இறக்குமதி அளவு தொடர்பில் பாதிப்புக்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை இந்நாட்டிற்கு ஏற்பட்டது. டுபாய் நாட்டின் தேயிலை ஏற்றுமதிகளில் வீழ்ச்சி மற்றும் இலங்கையில் ஐக்கிய அரவு எமீர் இராச்சியத்திற்கு தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டதுடன், பாரிய மற்றும் தொடர்புகளும் காணப்பட்டன. டுபாயில் இருந்து ஈரானிற்கு மேற்கொள்ளப்பட்ட மீள்ஏற்றுமதி வீழ்ச்சியடைந்தமையினால் 2011 மற்றும் 2012 ஆண்டுகளில் ஐக்கிய அரபு எமீர் இராச்சியத்திற்கு இலங்கையில் இருந்து தேயிலை ஏற்றுமதி செய்வது துரிதமாகக் குறைவடைந்தது. இலங்கையில் இருந்து டுபாயிக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை அளவு குறைவடைந்த சந்தர்ப்பங்களில் டுபாயின் மொத்த பொதித் தேயிலை அளவு குறைவடைந்தது. ஐக்கிய அரபு எமீர் இராச்சியத்திற்கு இறக்குமதி செய்யப்படும் இலங்கை தேயிலையில் கூடுதலாக மீள்ஏற்றுமதிக்காக பயன்படுத்தப்படுவதாக வலியுறுத்தப்பட்டுள்ளது. சுதந்திர வர்த்தக வலயத்திற்குள் தேயிலை ஏற்றுமதி செய்யப்படும் பிரதான இறக்குமதியாளராக மொத்தமாக 25,000 வருடாந்த கொள்ளளவு கொண்ட யூனிலீவர் தேயிலை பொதியிடல் தொழிற்சாலையாகும்.

ஐக்கிய அரபு எமீர் இராச்சியம் மற்றும் ஈரானிற்கு இடையில் இடம்பெற்ற மீள்ஏற்றுமதி சந்தை மற்றும் ஈரான் மீது விதிக்கப்பட்ட சர்வதேச தடைகள் காரணமாக 2012ஆம் ஆண்டு ஐக்கிய அரபு எமீர் இராச்சியத்திற்கு இலங்கையில் இருந்து தேயிலை ஏற்றுமதி தொடர்ந்தும் குறைவடைந்தது. 2012ஆம் ஆண்டு தேயிலை மீள்ஏற்றுமதி வர்த்தகம் வீழ்ச்சியடைந்தமைக்கு பிரதான காரணம் டுபாயில் வங்கி முறைமைக்கு அழுத்தங்கள் ஏற்படுத்தக் கூடிய வகையில் அமெரிக்க ஐக்கிய இராச்சியத்தினால் ஈரான் மீது பொருளாதாரத் தடை விதித்தமை மற்றும் ஈரானின் செலாவணி தொடர்ந்தும் தளம்பல் அடைந்தமையாகும்.

## 2.6.2.2 ஈரான்





பொருளாதார ரீதியில் பாரிய பின்னடைவுகள் ஏற்பட்டமையினாலும், செலாவணிப் பிரச்சினைகள் காரணமாகவும் பொருளாதார வீழ்ச்சியினை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஈரானிற்கு ஏற்பட்டது. இது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தினாலும் எதிர்வுகூறல்கள் தெரிவிக்கப்பட்டு இருந்தது. பணவீக்கம், மற்றும் வேலையில்லாப் பிரச்சினை 25% காணப்பட்டதுடன், உண்மையான நிலைமை இதனைவிட அதிகரித்துக் காணப்படக்கூடும். அமெரிக்க ஐக்கிய இராச்சியத்துடன் மோதல்களை ஏற்படுத்தும் அபாயம் இருந்தமையினால் இந்த நிலைமை ஏற்பட்டது. சர்வதேச தடைகள் அழுத்தங்கள் பாரியளவில் ஏற்பட்டதை இஸ்ரேல் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளது.

79 மில்லியன் சனத்தொகை ஈரானின் வருடாந்த தேயிலை நுகர்வு 110,000 மெற்றித் தொனைவிட அதிகரித்துள்ளமையினால் சுமார் 100,000 மெற்றித் தொன் ஈரான் இறக்குமதி செய்கின்றது. பொதியிடப்பட்ட தேயிலை இறக்குமதி மீது பொருளாதாரத் தடை விதித்துள்ளமையினால் மற்றும் தொகைத் தேயிலைக்கமைய 30% இற்கு இணைவாக அதிஉயரிய சுங்கவரி விகிதாசாரம் விதிக்கப்பட்டமையினால் 40,000 மெற்றித் தொன்னைவிட கூடுதலான அளவு ஈரானில் உத்தியோகபற்றற்ற முறையில் கிடைக்கப்பெறுகின்றன. சட்டரீதியாக இறக்குமதி செய்யப்படும் தேயிலை அளவு ஒரு வருடத்திற்கு 60,000 மெற்றித் தொன், 65,000 க்கு இடைப்பட்டதாகும். நேரடி மற்றும் மறைமுகமாக மேற்கொள்ளப்படும் இலங்கை ஈரான் தேயிலை சந்தையில் முன்னணியில் இருப்பதுடன், ஈரானிற்கு தேயிலை ஏற்றுமதி செய்யும் ஏனைய நாடுகள் இந்தியா, கென்யா மற்றும் சீனாவாகும்.

இலங்கை சுங்கப் புள்ளிவிபரங்களுக்கு அமைய 2012ஆம் ஆண்டில் 38,125 மெற்றித் தொன் தேயிலை இலங்கையில் இருந்து ஈரானிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. 2012ஆம் ஆண்டில் உரிய காலஎல்லையுடன் ஒப்பீடு செய்யும் போது 7,186 மெற்றித் தொன் அல்லது 23% அதிகரிப்பு இதன் மூலம் காண்பிக்கப்படுகின்றது. ஈரான் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் காரணமாக மீள்ஏற்றுமதி செயற்பாடுகளுக்காக இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை அளவு 50% இனால் குறைவடைந்தது. ஐக்கிய அரபு எமீர் இராச்சியத்திற்கு இலங்கை தேயிலை ஏற்றுமதிகளில் பாதகமான மட்டத்தை இலங்கையினால் ஈரானிக்கு கூடுதலான தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. ஐக்கிய அரபு எமீர் இராச்சியத்தின் பிரதிநி-திகள் ஊடாக தேயிலை கொள்வனவு செய்யும் கூடுதலான ஈரான தேயிலை இறக்குமதியாளர்கள் இலங்கையில் இருந்து நேர-டியாக தேயிலையை இறக்குமதி செய்யும் பணிகளை ஆரம்பித்தமை ஈரானிற்கான ஏற்றுமதி அளவில் விருத்திக்குப் பிரதான காரணமாகும்.

ஈரான் மத்திய வங்கிற்கு விதிக்கப்பட்ட சர்வதேச பொருளாதாரத் தடைகள் காரணமாக ஈரானின் சமன் வங்கியுடன் கடன் ஆவணப் பரிமாற்றங்களை இடைநிறுத்த இலங்கை வங்கி நடவடிக்கை எடுத்தமையினால் 2012ஆம் ஆண்டு ஜுன் மாதத்திற்குப் பின்னர் ஈரானிற்கு தேயிலை ஏற்றுமதி செய்யும் போது நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை இலங்கை தேயிலை சமூகத்திற்கு ஏற்பட்டது. ஈரான் செலாவணி விகிதாசாரங்களில் தொடர்ந்தும் ஏற்பட்ட தளம்பல்கள் காரணமாக பாரிய கட்டளைகளைப் பெற்றுக் கொள்ள கொள்வனவாளர்கள் விரும்பாமையினால் தேயிலை சந்தையில் பாரியளவில் பாதிக்கப்பட்டது. அத்தியவசிய பொருள் பட்டியல் இருந்து தேயிலையை நீக்க ஈரான் தீர்மானிததைத் தொடர்ந்து தேயிலை ஏற்றுமதிக்காக 12,260 ஈரான் றியாழ் விகிதாசாரம் அந்நியசெலாவணியைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் ஈரான் வர்த்தக சமூகத்திற்கு கிடைக்கவில்லை. புதிதாக எழுந்த இந்நிலைமை காரணமாக ஈரானில் தேயிலை கூடுதலான விலை கொண்ட சந்தைப் பொருளாக மாற்றம் பெற்றது. இலங்கை தேயிலை வர்த்தகத்தில் ஈடுபடும் அங்கத்தவர்களினால் அமுலிலுள்ள சந்தை விகிதாசாரங்களுக்கு அமைய கொடுப்பனவுகளை மேற்கொண்டு இலங்கையில் இருந்து தேயிலைகளை இறக்குமதி செய்யும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்றன.

02

கைத்தொழிலில் பக்கத் தோற்றம்

## 2.6.2.3 சிரியா



2011 மார்ச் மாதத்தில் ஒரு சில பிரதேசங்களில் இருந்து ஆரம்பமான அமைதியான எதிர்ப்பு செயற்பாடுகள் 2012ஆம் ஆண்டளவில் முழுமையாக உள்நாட்டுப் போராக மாற்றம் பெற்றது. சிரிய சந்தையில் 2/3 சந்தைப் பங்குகளைக் கொண்ட பிரபல்ய பானமாக தேயிலை மாற்றம் பெற்றதுடன், கோபி மற்றும் மாதே (மூலிகைப் பானம்) எஞ்சிய சந்தை பங்குகளைப் பெற்றுள்ளது. உள்நாட்டுப் பயன்பாட்டைப் போன்று வடபிரதேச எல்லையூடாக ஈராக் மற்றும் துருக்கிற்கு தேயிலை மீள் ஏற்றுமதிக்காக சிரியா தேயிலை இறக்குமதி செய்கின்றது.

இலங்கை சுங்கத் திணைக்களப் புள்ளிவிபரங்களுக்கு அமைய 2012ஆம் ஆண்டு 24,714மெற்றித் தொன் தேயிலை சிரியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்கு அமைய 2011ஆம் ஆண்டில் அக்கால எல்லைக்காக 28,759 மெற்றித் தொன் அளவுடன் ஒப்பீடு செய்யும் பொழுது 4,047 மெற்றித் தொன் அதாவது, 14% வீழ்ச்சி காண்பிக்கப்பட்டுள்ளது. இது எவ்வாறாக இருப்பினும், ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில் உள்நாட்டுப் போர் காரணமாக சுதந்திரமான தேயிலை விநியோகம் மற்றும் விநியோகிக்கப்படும் தேயிலைக்காகக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு வர்த்தகர்களுக்கு முடியாமை போன்று ஈரானுடன் எல்லைப் பிரதேசம் ஊடாக வர்த்தகச் செயற்பாடுகளை மேற்கொள்ள தடைகள் ஏற்பட்டமையினால் தேயிலை சந்தைக்கு பாரிய பாத அழுத்தங்கள் ஏற்பட்டன.

## 2.6.2.4 ஈராக்




இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தேயிலை ஏற்றுமதிக்காக அனுமதி வழங்கப்பட்டதுடன், இதற்கமைய நேரடியாக ஈராக்கில் இறக்குமதி செய்யப்பட்ட அளவு அதிகரித்தது. ஈராக்கில் தேயிலைத் தேவையில் ஒரு பகுதி ஜோர்தான் மற்றும் குவைட் மூலம் தொடர்ந்தும் இறக்குமதி செய்யப்பட்டது. ஈராக்கிற்கு அனுப்பும் நேரடி ஏற்றுமதியை அதிகரிக்க முடிந்தமையினால் 2011ஆம் ஆண்டில் ஈராக் தேயிலை சந்தையில் 50% மேற்பட்ட அளவினைப் பெற்றுக் கொண்டு அதனைப் பாதுகாக்க இலங்கைக்கு முடிந்தது. 2012ஆம் ஆண்டுக்காக ஈராக்கில் காணப்பட்ட இலங்கையின் சந்தைப் பங்களிப்பு 23,484 மெற்றித் தொன் அதாவது 60% வரை தொடர்ந்தும் அதிகரிக்க முடிந்தது.

அரச துறையினால் தேயிலை ஏற்றுமதி இடைநிறுத்தப்பட்டதன் பின்னர் இந்திய விநியோகஸ்தர்களுக்கு தமது சந்தைப் பங்களிப்புக்களைப் பேண முடியவில்லை. இந்தியாவினால் சிறந்த தூய்மையான தேயிலை-யை விநியோகிப்பதற்குப் பதிலாக பல்வேறுபட்ட இடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட கலக்கப்பட்ட தேயிலை விநியோகிக்கப்படுவதாக அநேகமாக தனியார் வர்த்தகர்களினால் இனங்காணப்பட்டதுடன், இந்தியாவில் இருந்து தேயிலைக் கொள்ளவினைக் குறைக்க இது காரணமாக அமைந்தது. வியட்நாம் தேயிலையுடன் ஒப்பீடு செய்யும் போது மிகக் குறைந்த விலை காணப்படுவதுடன் இலங்கை தேயிலையைப் போன்றதான நெருங்கிய சமமான தன்மைகள் காணப்படுவதனால் ஈராக் தேயிலை சந்தையில் இலங்கை தேயிலை சந்தையின் ஒரு பகுதிக்கு பாதிப்புக்கள் ஏற்பட்டன.

சந்தை வட்டாரங்களுக்கு அமைய ஈராக்கினால் இறக்குமதி செய்யப்பட்ட உணவு வகைகளைப் பரிசோதனை செய்வதற்கு நியமிக்கப்பட்ட SGS சர்வதே கம்பனிக்கு எதிராக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் காரணமாக அக்கம்பனியின் சேவைகளை முடிவுறுத்துமாறு அரசுக்கு அழுத்தங்கள் ஏற்பட்டன. கடந்த ஆண்டு தொடக்கம் ஈராக்கிற்கு ஏற்றமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் தொடர்பிலான தரத்தினைப் பரிசோதிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது வெரிட்டாஸ் பணியகத்தினால் மாத்திரம் என்பதுடன், தரக்குறைவான தேயிலை சந்தை காணப்பட்டமை தொடர்பான உண்மையான தேயிலை ஏற்றுமதியாளர்கள் பலரின் விசேட கவனத்திற்கு உட்படுத்தப்பட்டது. ஈராக்கிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை தொடர்பாக நோக்கும் போது இவற்றில் கூடுதலான அளவு பொதியிடப்பட்ட தேயிலை என்பதுடன் மொத்த அளவில் 5% விட குறைவான தொகைத் தேயிலை ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

### 2.6.2.5 சவுதிஅரேபியா



வலைகுடா இராச்சியத்தில் 6 ஆவது மிகப் பெரிய இராச்சியம் சவுதிஅ-ரேபியாவாகும். கணிசமான தேயிலை நுகர்ச்சி கொண்ட நாடாகவும் இது காணப்படுகிறது. அறிக்கைகளுக்கு அமைய வருடாந்தம் சுமார் 30,000 மெற்றித் தொன் தேயிலை சவுதிஅரேபியா இறக்குமதி செய்யவதுடன், இது 29,000 மெற்றித் தொன் தேயிலை உள்நாட்டு நுகர்ச்சிக்காகப் பயன்படுத்தப்படுவதுடன் 1000 மெற்றித் தொன் மீள்ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

இலங்கை சுங்கத் திணைக்கள புள்ளிவிபரங்களுக்கு அமைய 2012ஆம் ஆண்டில் இலங்கையினால் 4,470 மெற்றித் தொன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதுடன், 2011ஆம் ஆண்டில் கப்பலேற்றப்பட்ட 4,671 மெற்றித் தொன் அளவுக்கு இணைவாக நோக்கும் போது 4% அதாவது 201 மெற்றித் தொன் குறைவினைக் காண்பிக்கின்றது. சவுதிஅரேபியாவில் மொத்த தேயிலை இறக்குமதி அளவு வீழ்ச்சியடைந்தது. இந்நிலைமைக்கு அமைவாக இலங்கை சந்தைப் பங்கும் வீழ்ச்சி கண்டது. சவுதி சந்தைக்கு இலங்கை தேயிலையை விநியோகிக்கும் மிகப்பெரிய தனித்துவமான / தனிநபர் ஏற்றுமதியாளராக காணப்படுவது ராபீயா வர்த்தக இலச்சிணை தேயிலை உரிமையைக் கொண்ட பிஷன் தேயிலைக் கம்பனியாகும்.

### 2.6.2.6 ஜோர்தான்



2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் மத்தியகிழக்கு இராச்சியம் ஊடாக ஏற்பட்ட பதற்ற நிலைமை இதுவரையில் ஜோர்தானுக்கு அழுத்தங்களை ஏற்படுத்தவில்லை.

ஈராக்கிற்காக தேயிலை ஏற்றுமதி செய்யும் போது ஜோர்தான் இலங்கைக்கான தேயிலையைப் பரிமாற்றும் மத்திய நிலையமாகக் காணப்பட்ட போதிலும், ஈராக்கினால் நேரடி ஏற்றுமதி அதிகரித்ததைத் தொடர்ந்து இந்நிலமை கிரமமாகக் குறைவடைந்தது. இலங்கை சுங்கத் திணைக்களப் புள்ளிவிபரங்களுக்கு அமைய இலங்கையினால் 2011ஆம் ஆண்டில் ஜோர்தானுக்கு 9இ398 மெற்றித் தொன் ஏற்றுமதி செய்து 2,104 மெற்றித் தொன் அதாவது 29% 2011ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் கப்பலேற்றப்பட்ட 7,294 மெற்றித் தொன் அளவுக்கு இணைவாக அதிகரிப்பு காண்பிக்கப்பட்டுள்ளது. இலங்கை ஜோர்தானுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை அளவு அதிகரித்தமையினால், ஈராக் சந்தைக்கு கூடுதலாக மீள்ஏற்றுமதி அன்று உள்நாட்டு சந்தையில் ஏற்பட்ட ஏனைய எதுவித விசேட முன்னேற்றங்களும் இடம்பெறவில்லை. யுனிலீவர் கம்பனியினால் எகிப்திலுள்ள கைத்தொழில்சாலையினால் ஜோர்தானுக்கு லிப்டன் அடையாளம் கொண்ட தேயிலை விநியோகம் முக்கியமாக தேயிலைப் பொதிகளுக்காக இருந்த கூடுதலான கேள்வியினை நிவர்த்தி செய்யும் நோக்குடம் மேற்கொள்ளப்பட்டது.

### 2.6.2.7 துருக்கி

துருக்கி வலயத்தில் சம்பிரதாய தேயிலை உற்பத்தி செய்யும் பிர-தான நாடாகும். வர்த்தக மூலங்களுக்கு அமைய துருக்கிற்கு சட்டரீதியாக ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 8,000 மெற்றித் தொன்னினால் குறைவடைந்தது. ஈரான், ஈராக் மற்றும் சிரியாவுடன் உள்ள கிழக்கு மற்றும் தென் எல்லை ஊடாக துருக்கிற்கு சட்டமுரணான அடிப்படையில் தேயிலை உட்பாய்ச்சப்படுவதன் காரண-மாக இந்நிலமை ஏற்பட்டது. துருக்கிற்கு சட்டத்திற்கு புறம்பாக தேயிலை கொண்டுவரப்படுது தொடர்பாக சரியான புள்ளிவிபரங்கள் இன்மையினால் 30,000 மெற்றித் தொன் என்ற அளவு சட்டத்துக்குப் புறம்பாக கிடைப்பதாக யூரோ மெரின்டர் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



02

கைத்தொழிலில் பக்கத் தோற்றம்

முன்னைய ஆண்டுக்கு இணைவாக 2012 ஆம் ஆண்டில் துருக்கிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட இலங்கை தேயிலை அளவு 3,958 மெற்றித் தொன் எனும் 20.6% வளர்ச்சி காண்பிக்கப்பட்டுள்ளது. துருக்கிற்கு கடந்த ஆண்டில் இலங்கை தேயிலை ஏற்றுமதி 23,129 மெற்றித் தொன் ஒப்பீடு செய்யும் 2011 ஆம் ஆண்டில் 19,171 மெற்றித் தொன்னாகக் காணப்பட்டது. நாட்டின் கிழக்குப் பகுதியில் வாழும் துருக்கி மக்கள் இலங்கை தேயிலை தொடர்பில் கூடுதலாக விருப்பம் காண்பிக்கப்படுவதனால் சட்டத்திற்கு முரணான தேயிலை வர்த்தகங்களில் ஈடுபடுவதற்கான தூண்டுதல்கள் காணப்படுகின்றன.

### 2.6.2.8 குவைட்



ஒரு வருடத்திற்கு குவைட்டில் உள்நாட்டு தேயிலை நுகர்ச்சி 3,000 என மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும், ஈரான் மற்றும் ஈராக்கிற்கு தேயிலை விநியோகிப்பதற்காக தேவையான அளவு தேயிலை குவைட்டினால் இறக்குமதி செய்யப்படுகின்றது. நாட்டின் மொத்தத் தேயிலை இறக்குமதி அதிகரிக்கப் பிரதான காரணமாக அமைந்தது. ஈராக்கிற்கு தேயிலை செய்யும் பணிகளை குவைட் ஆரம்பிததினாலாகும், ஈரான் மற்றும் ஈராக்கில் இலங்கை தேயிலைக்காக கூடுதல் விருப்பம் காண்பிக்கப்படுவதனால் மீள்ஏற்றுமதிக்காக குவைட்டிற்கு தேயிலை ஏற்றுமதி செய்யும் பிரதான விநியோகஸ்தர் இலங்கை ஆகும்.

இலங்கையினால் 2012ஆம் ஆண்டில் குவைட்டிற்கு 7,278 மெற்றித் தொன் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டதுடன், இதன் அளவு 2011 ஆம் ஆண்டில் கப்பலேற்றப்பட்ட 9,088 மெற்றித் தொன்னுக்கு இணைவாக 20% குறைவினை காண்பிக்கின்றது. கடந்த ஆண்டில் குவைட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட இலங்கை தேயிலையின் அளவு வீழ்ச்சியடைந்தமைக்குப் பிரதான காரணம் ஈராக்கில் இடம்பெற்ற மீள்ஏற்றுமதி வர்த்தகம் விழ்ச்சியடைந்ததுடன், ஈராக் இலங்கையில் இருந்து கூடுதலான அளவு நேரடியாக இறக்குமதி செய்தமையாகும்.

### 2.6.2.9 லெபனான்



தேயிலைப் பொதி வகை விருத்தியின் ஊடாக லேபனான் சந்தை தமது பங்களிப்பினை அதிகரிக்க எகிப்திற்கு முடிந்தது. எகிப்து, எலெக்சென்றியா, யூனிலீவர் தேயிலை கம்பனியின் தேயிலை பொதியிடும் கைத்தொழிற்சாலையின் ஊடாக லிப்டன் வர்த்தக நாமத்தில் தேயிலை ஏற்றுமதி செய்தமையினால் லெபனான் தேயிலை சந்தையின் முக்கியமான வர்த்தகராக எகிப்து மாற்றம் பெற்றது. 2009ஆம் ஆண்டில் 254 மெற்றித் தொன் தொடக்கம் 2011 ஆம் ஆண்டு 422 மெற்றித் தொன் வரை லிப்டன் தேயிலை அதிகரித்துள்ளது. தேயிலைப் பொதி ஏற்றுமதி அதிகரித்தமை பாரிய முன்னேற்றமாகும். லெபனானில் குதிரை தலை இலட்சிணையைப் கொண்ட தேயிலை உற்பத்தி சந்தையில் வெற்றியளித்தது. இந்த வர்த்தக இலச்சிணை 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் சந்தையில் நிலைத்துக் காணப்பட்ட போதிலும், தேயிலைப் பை நுகர்ச்சி அதிகரித்ததைத் தொடர்ந்து லிப்டன் அடையாளத்திற்கு பாரிய சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

## 2.6.3 வடக்கு / கிழக்கு ஆபிரிக்க வலயத்திற்குரிய நாடுகள்.

2.19 . அட்டவணை : வடக்கு/ கிழக்கு ஆபிரிக்க வலயத்திற்குரிய நாடுகள் இலங்கை தேயிலைக்கான சந்தைப்பங்கு

| இலக்கம் | நாடு | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| | | சந்தைப் பங்கு-% | | | |
| 1 | டியூனிசியா | 40 | 10 | 24 | 0.45 |
| 2 | லிபியா | 84 | 88 | 83 | 83 |
| 3 | எகிப்து | 2 | 1 | 2 | 4 |

மூலம் : சர்வதேச தேயிலைக் குழு புள்ளிவிபரவியல் தகவல் வெளியீடுகள் 2013

### 2.6.3.1 டியூனேசியா



டியூனேசியா தேயிலை சந்தை ஆண்டுக்கு அன்னளவாக 10–11 மில்லியன் கிலோ கிராம் அதாவது 70% கறுந் தேயிலையும் எஞ்சிய 30% பச்சை தேயிலையும் கொள்வனவு செய்கின்றது. டியூனேசியாவின் தேயிலை இறக்குமதி அந்நாட்டின் அடிப்படை உணவு வகைகளை இறக்குமதி செய்து விநியோகிப்பதற்காக பொறுப்புக்களைக் கொண்டுள்ள அரச அமைப்பான டியூனேசியா வர்த்தக அலுவலகத்தில் (Office du Commerce Tunisia (OCT)), நிருவாகத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. தேயிலை, சீனி, பால்மா போன்ற அடிப்படை உணவு வகைகளின் விலைகளுக்கு அரசினால் நிவாரணங்கள் வழங்கப்படுவதினால் டியூனேசியா இறக்குமதிகள் தொடர்பில் பல முக்கிய பணிகளை நுகர்வுப் பொருட்களுக்காக மேற்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

2008 ஆம் ஆண்டு வரை டியூனேசியாவிற்கு கறுந்தேயிலை விநியோகிகும் பிரதான நாடாக இலங்கை காணப்பட்டதுடன், பச்சை தேயிலைக்காக சீனா முன்னணியில் இருந்தது. இது எவ்வாறாக இருப்பினும் 2009ஆம் ஆண்டில் கொழும்பு தேயிலை விலை மனுக்கள் அதிகரித்ததைத் தொடர்ந்து டியூனேசியா வர்த்தக அலுவலகத்தினால் இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யும் தேயிலை அளவைக் குறைத்து கறுந்தேயிலை விநியோகத்தை ஏனைய நாடுகளிடம் இருந்து எதிர்பார்த்தது. இதன் பெறுபேறாக 2009–2012 காலப்பகுதியில் இலங்கையினால் டியூனேசியா சந்தைக்கு வழங்கப்பட்ட அளவு 6,000 தொடக்கம் 2000 வரை குறைவடைந்துள்ளதுடன், 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் கோளமயத் தேயிலை விலை அதிகரிப்புக் காரணமாக டியூனேசியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் மொத்த அளவு குறைவடைந்தது.

### 2.6.3.2 லிபியா



பொதுவாக மக்களுக்கு பல்வேறுபட்ட பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளமையினால் நிவாரணம் வழங்கும் பொருள் ஊக்குவிப்பில் ஒரு சில உணவுப் பொருள் உற்பத்திகளுக்கு இடையே தேயிலை, சீனி மற்றும் கோதுமை மா அடங்குகின்றது. அரச மற்றும் தனியார் துறை இறக்குமதியில் ஈடுபடுவதுடன், இதற்கான சில்லறை விலையினை மேற்பார்வை செய்யும் பொறுப்பு அந்நாட்டு அரசாங்கத்திற்கு உள்ளது. நாட்டின் வருடாந்த தேயிலை நுகர்வு 9-10 மில்லியன் கிலோ கிராம் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. சந்தை வட்டாரங்களுக்கு அமைய லிபியா மக்களுக்கு சலுகை விலைக்கு வழங்கப்படும் தேயிலை அயல் நாடுகளுக்கு விற்பனை செய்யப்படுவதுடன், எல்லைப் பிரதேசம் ஊடாக விற்பனை செய்யப்படும் அளவுகள் தொடர்பில் தகவல்களைப் பெறமுடியாதுள்ளது. குறைந்த வருமானம் பெறும் லிபிய மக்களுக்கு மேலதிக வருமானத்தை வழங்கக்கூடிய உத்தியோகபூர்வமற்ற வர்த்தகமாக இது மாற்றம் பெற்றுள்ளது.

உள்நாட்டு போர் காரணமாக 2011ஆம் ஆண்டில் இலங்கை தேயிலை லிபியாவிற்கு ஏற்றுமதி செய்வது தொடர்பில் பாதிப்புக்கள் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. இலங்கையில் இருந்து லிபியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அதிஉயரிய தேயிலை அளவு அமைந்தது 2012ஆம் ஆண்டில் தேயிலைக் கைத்தொழிலில் புத்தெழிச்சி பெற்றிருந்த வேளையில், ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு 16,326 மெற்றித் தொன்னாகக் காணப்பட்டது. 2011ஆம் ஆண்டுடன் பதிவுசெய்யப்பட்ட அளவுடன் ஒப்பீடு செய்யும் போது லிபியாவிற்கு தேயிலை ஏற்றுமதி செய்வதன் மூலம் இலங்கை 100% முன்னேற்ற வேகத்தை எட்டியுள்ளதுடன், இறக்குமதி அளவினை அதிகரித்தமையினால் சந்தைப் பங்களிப்புக்கள் மாற்றமடையவில்லை.

02

கைத்தொழிலில் பக்கத் தோற்றம்

### 2.6.3.3. எகிப்து



இரண்டு வருடத்தை மேற்பட்ட காலம் அரசியல் ஸ்தீரமற்ற நிலைகள் காணப்பட்டதுடன், எகிப்தின் பொருளாதாாரம் தொடர்ந்தும் உயரிய மட்டத்தை எட்டும் அளவை அடைந்துள்ளது. அரபு உலகில் மிகப் பெரிய தேயிலை சந்தை எகிப்து ஆகும். தேயிலை அந்நாட்டில் பிரபல்ய பானமாக அமைந்துள்ளதுடன், ஆண்டொன்றுக்கு 90 – 95 கிலோ மில்லியன் வருடாந்த தேயிலை நுகர்ச்சி இந்நாட்டில் காணப்படுகின்றது. கடந்த மூன்று தசாப்தங்களுக்குள் சப்பிரதான தேயிலை தொடக்கம் CTC வரை தேயிலைக்காக நுகர்வோரின் விருப்பம் மாற்றமடைந்துள்ளது. இதற்கு இணைவாக விலைப் பயன்கள் மற்றும் சிவப்பு நிறம் கொண்ட தேனீருக்கு கூடுதலான விருப்பம், எகிப்து தேயிலை சந்தையில் சம்பிரதாய தேயிலை விநியோகஸ்தர்களுக்கு இணைவாக விசேட பயன்கள் CTC உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் புள்ளி விபரங்களுக்கு அமைய 3,649 மெற்றித் தொன் மொத்த அளவுடன் 2012ஆம் அண்டில் எகிப்து சந்தையில் தமது பங்களிப்பினை அதிகரிக்க இலங்கைக்கு முடிந்துள்ளது. இதன் மூலம் 2011ஆம் ஆண்டில் கப்பலில் ஏற்றப்பட்ட 2,382 மெற்றத் தொன் கொள்ளளவுக்கு இணைவாக 1,267 மெற்றித் தொன் அதிகரிப்பினைக் காண்பித்துள்ளது. இது எவ்வாறாக இருப்பினும், தனிப்பட்ட வகைகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்துவதன் மூலம் இவ்வதிகரிப்புத் தொகை – பாரிய தேயிலை பிரிவினால் பெறப்பட்ட அதிகரிப்பென்றும் 2011/2012 காலப்பகுதிக்குள் பெறுமதி சேர்க்கப்பட்ட பிரிவில் வீழ்ச்சி காணப்பட்டுள்ளதைக் காணமுடிந்துள்ளது. கொரிய தேயிலை விலைகள் அதிகரித்துள்ளமையினாலும், இவ்வறுவடை குறைவடைந்தமையினால் 2012ஆம் ஆண்டில் எகிப்து சந்தைக்கு இலங்கை தேயிலை ஏற்றுமதி அதிகரிக்க சந்தர்ப்பம் வழங்கக் கூடியதாக அமைந்தது.

## 2.6.4 ஐரோப்பிய சமுகத்திற்குரிய வலையங்கள்

2.20. அட்டவணை : ஐரோப்பிய சமுகத்திற்குரிய நாடுகள் - இலங்கை தேயிலைக்கான சந்தைப் பங்கு

| இலக்கம் | நாடு | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| | | பங்குச் சந்தை-% | | | |
| 1 | ஐரோப்பிய இராச்சியம் | 2 | 1 | 1 | 2 |
| 2 | போலாந்து | 9 | 8 | 7 | 8 |
| 3 | பிரான்ஸ் | 5 | 4 | 5 | 5 |
| 4 | ஜேர்மன் | 11 | 11 | 11 | 10 |
| 5 | நெதர்லாந்து | N/A | N/A | N/A | N/A |
| 6 | பெல்ஜியம் | N/A | N/A | N/A | N/A |

மூலம் : சர்வதேச தேயிலைக் குழு புள்ளிவிபரவியல் தகவல் வெளியீடுகள் 2013

### 2.6.4.1 ஐக்கிய இராச்சியம்



2012 ஆம் ஆண்டில் ஐக்கிய இராச்சியத்தில் தேயிலை இறக்குமதிகளில் மொத்தம் 144,575மெற்றித் தொன்னாக 2011 காணப்பட்டமையினால் 2013ஆம் ஆண்டில் இடம்பெற்ற 154,500 மெற்றித் தொன்னுக்கு 6.8% அளவு குறைவினைக் காண்பிக்கிறது. 2011ஆம் ஆண்டின் 1.1% மான 1,754 மெற்றித் தொனுக்கு இணைவாக 2012ஆம் ஆண்டில் இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அளவு 2,302 மெற்றித் தொன் வரை சிறிதளவு அதிகரிப்பினைக் காணப்பித்ததுடன் இது மொத்த அடிப்படையில் 2.2% பங்களிப்பாகும்.

ஐக்கிய இராச்சியத்தின் சிறந்த பானமாக சந்தையில் குறிப்பிடத்தக்களவு பங்குகளுக்கு விநியோகிக்கப்படுவதுடன் மொத்த சந்தையில் 40.2% அளவு பிரதானமாக 3 கொள்வனவாளர்களுக்கு இடையே நிர்வகிக்கப்படுகின்றன. ஐக்கிய இராச்சியத்தின் சிறந்த பானமாக சந்தையில் முன்னணியில் இருப்பது டாட்டா, குலேபல், பெவரேஜ் கம்பனியாகும் அதாவது 15.1% பங்கு காணப்படுவதுடன் ஏனைய தரப்பினராக யூனிலீவர் மற்றும் நெஸ்லே எஸ்.ஏ என்பன அடங்குகின்றன.

கடந்த 5 தசாப்தங்களுக்குள் ஐக்கிய இராச்சியத்திற்கு இலங்கையில் இருந்து தேயிலை ஏற்றுமதி வீழ்ச்சியடைவதற்கு அந்நாட்டின் சந்தை மற்றும் நுகர்வோருக்கு இடையிலான பழக்க வழக்கங்களில் மாற்றங்கள் ஏற்பட்டமை பிரதான காரணியாகும்.

மனையாளிகளின் ஊழியர் பங்களிப்பினை அதிஉயரிய மட்டத்தில் காணப்படுவதனால் உள்நாட்டு சமூக பொருளாதார அடைவ மட்டங்களுக்கு இணைவாக CTC தேயிலை வகைகளுக்கு ஐக்கிய இராச்சிய சந்தையில் மாற்றங்கள் ஏற்பட்டன. CTC அடிமைப்பட்டிருந்தமையினால் காணப்பட்ட கேள்வி குறைவடைந்தமையினால் சம்பிரதாய தேயிலை வகைக-ளை விட கென்யா மற்றும் கிழக்கு ஆபிரிக்கா நாடுகளில் இருந்து பெறப்படும் தேயிலை கூடுதலாக அதிகரித்ததைக் காணமுடிந்தது. தேயிலைப் பொதி, தேயிலைப் பக்கட், சுவையூட்டப்பட்ட தேயிலை ஐக்கிய இராச்சியத்தில் நாளாந்தம் பருகும் தேயிலை வகைகளில் 96% தேயிலைப் பொதி பக்கட்டுக்களுக்காக சந்தையில் கூடுதலான கேள்விகள் காணப்பட்டன.

### 2.6.4.2 போலாந்து.



"போலாந்து நடுத்தர அளவு தேயிலையை இறக்குமதி செய்யும் நாடாக இருந்த போதிலும் ஐரோப்பிய கூட்டு நாடுகளில் மொத்த தேயிலை இறக்குமதியில் 11% க்கு அண்மித்த பெறுமதிக்கு பங்களிப்பு செய்து இரண்டாம் இடத்தில் காணப்படுகின்றது. ஒரு வருடத்திற்கு போலாந்து இறக்குமதி செய்யும் தேயிலை அளவு 28,000 – 30,000 மெற்றித் தொன்னுக்கு இடைப்பட்ட அளவாகும். போலாந்து புள்ளிவிபரவியல் மூலங்களுக்கு அமைய அந்நாட்டினால் தறுவிக்கப்படும் தேயிலை வகைகளில் கூடுதலான அளவு உற்பத்தி செய்யும் நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது. தற்போது போலாந்து சந்தைக்கு தேயிலை விநியோகிகும் மிகப் பெரிய நாடு கென்யா என்பதுடன், இலங்கை ஏற்றுமதி செய்யும் சந்தைப் பங்கு 8% ஆகும். மோத்த தேயிலை சந்தையில் 60.0% கறுந் தேயிலையாகும். பச்சை தேயிலை சந்தைப் பங்கு அன்னளவாக 12% என்பதுடன், மூலிகை தேயிலை வகைகளில் ஏனையவை அடங்குகின்றது. ஒப்பீட்டு ரீதியில் நோக்கம் போது போலாந்தில் மீள்ஏற்றுமதி சிறியளவு காணப்படுகின்றது.

தொடர்ந்தும் அதிகரிக்கும் சுமார் , 65% மான போலாந்து சந்தையில் தேயிலை நுகர்வை நோக்கும் போது இதுவரையில் இலகுவான பொதியினைக் கொண்ட தேயிலை வகைகள் மீதே கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன் பயனாக கறுற் தேயிலை சந்தையில் விசேட பகுதி CTC வகையின் தேயிலைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

புள்ளிவிபரங்களுக்கு அமைய இலங்கையினால் உரிமைகோரும் தேயிலை வர்த்தக இலச்சிணையின் கீழ் பெறுமதி சேரர்க்கப்பட்ட அல்லது முன் பொதியிடப்பட்ட தேயிலை வகைகளுக்கு 40% ஒதுக்கப்பட்டதாக குறிப்பிடுவது மிக முக்கியமானதாகும். 2012ஆம் ஆண்டில் பதிவாகிய ரூபா 1644, மில்லியன் 2011ஆம் ஆண்டில் பதிவாகிய பெறுமதிக்கு இணைவாக 8% அதிகரிப்பினைக் காண்பிக்கின்றது.

02

கைத்தொழிலில் பக்கத் தோற்றம்

2.6.4.3. பிரான்ஸ்



ஐரோப்பிய சந்தையில் 6மூ பங்குகளின் அளவுடன் நான்காவது இடத்தில் உள்ள மிகப் பெரிய ஏற்றுமதியாளர் பிரான்ஸ் ஆகும். 2009 – 2012 ஆண்டு வரையான கால எல்லைக்குள் தேயிலை ஏற்றுமதி 19,300–17,800 மெற்றித் தொன்னுக்கு இடைப்பட்டதுடன், இது தளம்பலுக்கு உட்பட்டதுடன், இலங்கை 7.2% சந்தைப் பங்களிப்பைக் காண்பித்தள்ளது.

10,000 மெற்றித் தொன் கநற்தேயிலை ஏற்றுமதி மொத்த ஏற்றுமதி வகைகளில் 51% உற்பத்தி செய்யப்பட்டதுடன் எஞ்சிய பச்சைத் தேயிலை இறக்குமதி 8,000 மெற்றித் தொன் அளவு பெறுமதியினைக் காண்பிக்கின்றது. அத்துடன் பிரான்ஸ் ஒலேக் (ழுழுடழுபெ வநய) தேயிலை 500 மெற்றித் தொன் அளவு இறக்குமதி செய்யப்படுவதுடன் இது கறுந்தேயிலை எண்ணிக்கை புள்ளிவிபரங்கள் உள்ளடக்கி உள்ளன. பிரான்சுக்கு இறக்கமதி செய்யப்படும் தேயிலை வகைகள் 70% ஆகும். பொதியிடப்பட்ட தேயிலை வகைகள் இவற்றில் அடங்குவதுடன் எஞ்சிய 30% அளவு தொகை தேயிலை இறக்குமதி செய்யப்படுகனிறது. . 14% சந்தை பங்களிப்பினைக் கொண்ட இலங்கை கறுந்தேயிலை விநியோகஸ்தராக மாற்றம் அடைந்துள்ளது. “ இலங்கை தேயிலை “ குறிப்பித்தக்களவு பெல்ஜியம், ஐக்கிய இராச்சியம், ஜேர்மன் ஆகிய நாடுகளில் இருந்து வருகை தரும் தேயிலை வகைகளில் உள்ளடக்கம் என்பதனால் பிரான்ஸ் சந்தையில் இலங்கைப் பங்களிப்பு அதிரிக்க முடியும். மோத்த அடிப்படையில் பிரான்சுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை வகைகளில் 84% முன் பொதியிடப்பட்ட வகைகளாகும்.

2.6.4.4. ஜேர்மன்



ஜேர்மன் ஐரோப்பிய சந்தையில் இரண்டாவது மிகப் பெரிய தேயிலை இறக்குமதியாளராகும். இந்நாடு 50,000–55,000 மெற்றித் தேயிலையை ஒரு வருடத்திற்கு இறக்குமதி செய்கிறது. ஜேர்மன் ஐரோப்பாவின் மிக பெரிய தேயிலை மீள்ஏற்றுமதியாளராகக் காணப்படுவதுடன், உள்நாட்டு சந்தையின் 48% அளவினைச் சேமித்து மொத்த இறக்குமதியில் 52% காணப்படுகின்றது. அத்துடன் கடந்த ஆண்டின் இறக்குமதியுடன் ஒப்பீடு செய்யும் போது 2012ஆம் ஆண்டில் 3% அதிகரிப்பினைக் காணப்பிக்கின்றது.

இலங்கை 10% சந்தை பங்குகளைக் கொண்டிருப்பதுடன் மொத்த ஏற்றுமதியில் 72% கறுந் தேயிலை என்பதுடன் 28 % எஞ்சிய தேயிலை வகைகளாகும். ஜேர்மன் ஹெம்பேக் துறைமுகம் உலகில் மிகப் பெரிய தேயிலை கேந்திர நிலையங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

2.6.4.5 நெதர்லாந்து



2005-2012 கால எல்லைக்குள் நாட்டிற்கு தறுவிக்கப்பட்ட தேயிலை அளவு 25,000 – 30,000 மெற்றித் தொன் வரை என்பதுடன், இவ்வளவில் தளம்பல்கள் ஏற்பட்டுள்ளன. கறுந்தேயிலையில் மொத்த இறக்குமதி அளவில் சுமார் 93% பாரிய சந்தைப் பங்களிப்புக்களைக் கொண்டுள்ளது.

7.2% சந்தைப் பங்களிப்புக்களுடன் இலங்கை தேயிலை விநியோகஸ்தராக மாற்றம் பெற்றுள்ளது. சந்தையில் கறுந்தேயிலைப் பங்களிப்பு அன்னளவாக 85% என்பதுடன், எஞ்சிய வகைகளுக்காக பச்சைத் தேயிலை பங்களிப்பு செய்கின்றது. தேயிலைப் பொதிப் பிரிவு மிகப் பிரபல்யம் என்பதுடன், அது சில்லறை விற்பனைகளில் 90% விட மேற்பட்ட பெறுமதியினைக் காண்பிக்கின்றது. அநேகமானோர் சிறந்த தரத்திலான தேயிலையை எதிர்பார்ப்பதனால் விசேட வகையான தேயிலை விற்பனை நிலையங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

02

கைத்தொழிலில் பக்கத் தோற்றம்

### 2.6.4.6. பெல்ஜியம்



கோப்பி, மென் பானம் ஏனைய பான வகைகளுடன் ஒப்பீடு செய்யும் போது தேயிலை நுகர்வு குறைவடைந்துள்ளமையினால் பெல்ஜியம் தேயிலை சந்தை ஒப்பீட்டு ரீதியில் மிகச் சிறியதாகும். தனிநபர் தேயிலை நுகர்வு 0.3 கிலோ கிராம் என்பதாகும். இது ஐரோப்பிய சங்கத்தின் சந்தைப் பங்குகளின் 1% விட குறைந்த பெறுமதியினைக் காண்பிக்கின்றது. பெல்ஜியத்திற்கு தருவிக்கப்படும் மொத்தத் தேயிலை இறக்குமதி 50 மில்லியன் அமெரிக்க டொலருக்கு அண்மித்ததாகும்.

பெல்ஜியத்தில் பிரதான தேயிலை வகையாகக் காணப்படுவது லிப்டன், பிக்விக் மற்றும் டியூனீஸ் ஆகும். பெல்ஜியத்தில் தேயிலை விநியோகம் பிரதானமாக பல சரக்கு பாரிய வர்த்தக நிலையங்கள், விசேட விற்பனை நிலையங்கள் மற்றும் சில்லறை உணவு விற்பனை நிலைய வலையமைப்பின் ஊடாகும். பெல்ஜியத்தில் உள்ள மிகப் பெரிய வர்த்தக நிலையங்களை வகைப்படுத்தும் போது கறுந்தேயிலை அளவு 35% ஆகும்.

விசேடமாக பயன்களை பெறக்கூடிய தேயிலை உற்பத்தியான பச்சை தேயிலை, / உடலுக்கு சிறந்த உணர்வினை ஏற்படுத்தக் கூடிய தேயிலை மூலிகை – சம்பிரதான மூலிகை தேயிலை போன்ற தேயிலையில் காணப்படும் சுகாதார நலன் மற்றும் சிறந்த தரத்திற்கு அமைய கூடுதலான கேள்விகள் காணப்படுகின்றன. பச்சைத் தேயிலையைப் போன்று சுகாதார ரீதியில் பொறுத்தமற்றதாகக் கருதப்படும் கறுந்தேயிலை 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் விற்பனை அளவு வீழ்ச்சியடைந்துள்ளதாகப் பதிவாகி உள்ளது.

## 2.6.5 ஆசியா / ஓஷெனியா வலயம்

2.24 . அட்டவணைஆசிய ஓஷெனியா வலயத்திற்குட்பட்ட நாடுகளில் இலங்கைத் தேயிலைக்கான பங்குச்சந்தை

| எண்ணிக்கை | நாடு | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| | | பங்குச் சந்தை-% | | | |
| 1 | அவுஸ்திரேலியா | 22 | 23 | 23 | 23 |
| 2 | சீனா | 8 | 12 | 20 | 28 |
| 3 | ஜப்பான் | 22 | 27 | 28 | 26 |
| 4 | ஹொங்கொங் | 43 | 44 | 44 | 36 |
| 5 | தாய்வான் | 5 | 6 | 7 | 7 |
| 6 | இந்தியா | 5 | 1 | 1 | 2 |
| 7 | பாகிஸ்தான் | 2 | 1 | 1 | 4 |

மூலம் : சர்வதேச தேயிலைக் குழு புள்ளிவிபரவியல் தகவல் வெளியீடுகள் 2013

### 2.6. 5.1. அவுஸ்ரேலியா



தேயிலைப் நுகர்வு பிரதானமாக கறுந்தேயிலை காணப்பட்ட போதிலும் தொடர்ந்தும் மிகச் சிறிய அளவு (அன்னளவாக 3%) கொண்ட பச்சைத் தேயிலைப் பங்களிப்பு கிரமான அதிகரிப்பினைக் காணப்பித்துள்ளது. அவுஸ்திரேலியா இறக்குமதி செய்யும் மொத்த தேயிலை அளவில் இலங்கையின் 23% பங்களிப்புடன் 2012ஆம் ஆண்டில் 11,800 மெற்றித் தொன் காணப்படுகின்றது. கொள்ளவுக்கு அமைய கறுந்தேயிலை சந்தைப் பங்களிப்பு 90% காண்பிப்பதுடன், பழ வகைகள் / மூலிகைத் தேயிலை 4% உம் பச்சைத் தேயிலை 6% ஆகும்.

Dilmah (16%), Twinings (11%), Nerada (8%) மற்றும் Madura (4%) ஆகிய வகைகளுக்கு அப்பால் Lipton மற்றும் Bushells ஆகிய இரு வகைகளுடன் யூனிலிவர் தேயிலை 35% சந்தைப் பங்களிப்பைக் கொண்டுள்ளது. கறும் விசேட தேயிலை, பச்சைத் தேயிலை மற்றும் பழம் - மூலிகை தேயிலை தொடர்பான கேள்விகள் அதிகரித்துள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு ஏற்றுமதி செய்யும் இலங்கை தேயிலை அளவு 2012ஆம் ஆண்டில் 2,739 மெற்றித் தொன்னாகக் காணப்பட்டதுடன், இது 2011ஆம் ஆண்டில் இலங்கை தேயிலை அளவான 2,686 மெற்றித் தொன்னுக்கு இணைவாக ஓரளவு அதிகரிப்பினைக் காண்பிக்கின்றது. இவ்வதிகரிப்பு 2% ஆகும். அவுஸ்திரேலியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மொத்த " இலங்கை தேயிலை" அளவான 83% (தேயிலை பை 67% மற்றும் தேயிலை பொதி 16%) இற்காக பெறுமதி சேர்க்கப்பட்ட உள்ளீடுகள் பங்களிப்பு செய்யப்பட்டுள்ளன.

### 2.6.5.2. சீனா



சீனா தேயிலை உற்பத்தி மற்றும் உலக விநியோகத்திற்கு 39% பங்களிப்பை வழங்கும் மிகப் பெரிய தேயிலை உற்பத்தியாளராக 2012ஆம் ஆண்டில் 1790 கிலோ மில்லியனை எட்டியுள்ளது. மொத்த உற்பத்திக் கொள்ளவில் அன்னளவாக 77% பச்சைத் தேயிலையாகும்..

உள்நாட்டு நுகர்வான பிரதானமாக கநற்தேயிலை சீனாவுக்கு மேற்கொள்ளப்படும் நேரடித் தேயிலை ஏற்றுமதி உலக வர்த்தக அமைப்புக்கான பிரவேசத்திற்குப் பின்னர் மற்றும் இறக்குமதி வரி கிரமமாக குறைவடைந்ததன் பின்னர் கடந்த ஒரு சில ஆண்டுகளுக்குள் மிகப் பயன்மிக்கதாக சிறிய அடிப்படையிலான முன்னேற்றம் காண்பிக்கப்பட்டுள்ளது. சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மொத்த தேயிலை அளவு 12,200 - 11,000 இடைப்பட்ட அளவு தளம்பல் காணப்படுகின்றது. 2011ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட 2,461 இணைவாக 2012 ஆம் ஆண்டில் 3,084 மெற்றித் தொன் கொள்ளளவு சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மொத்த தேயிலை அளவு 25% பெறுமதி குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது.

### 2.6.5.3. ஜப்பான்



உலகில் அதி நவீன அபிவிருத்தியடைந்த தேயிலை சந்தையாக ஜப்பான் கருதப்படுகின்றது. அதிஉயரிய இடத்தை எட்டியுள்ள ஜப்பான் தேயிலை கைத்தொழிலுக்கு இறுதி இலக்காக அம்மூலத்தில் அடிப்படை மாற்றங்களைப் போன்று ஏனைய உற்பத்தி செய்யும் நாடுகள் மீதும் உரிய போட்டிகரமான எல்லை காணப்படுகின்றது.

உலகத் தேயிலைத் துறையில் ஜப்பான், சீனா, இந்தியா, ரஷ்யா, பாகிஸ்தான் மற்றும் டேக்கி ஆகிய நாடுகளுக்குப் பின்னர் 130,000 தொடக்கம் 135,000 தொன் வரை வருடாந்த நுகரும் பிரதான தேசமாகக் காணப்படுகின்றது. பச்சைத் தேயிலை நுகர்வு ஜப்பான் சந்தையில் 70% மாக்க காணப்படுகின்றது. அத்துடன் கநற்தேயிலைக்கான கேள்வி கிரமமாக அதிகரித்து நிலையாகக் காணப்படுகின்றது. Oo-long தேயிலை உள்ளீடு குறைவடைந்து செல்வதை சித்தரித்துக் காட்டுவதுடன், பச்சை, கறும் Oolong மற்றும் பர்லீ போன்ற ஏனைய வகைகளில் தேயிலையைத் தவிர ஜப்பானில் வருடாந்தம் துரிதமாக 1.5 தொடக்கம் 2.0 கிலோ கிராம் தேயிலையை அண்மித்த அளவு நுகர்ச்சி காணப்படும் அதிஉயரிய சந்தையாகும்.

இது எவ்வாறாக இருப்பினும் கறுந்தேயிலைக்காகக் காணப்படும் கேள்வி கடந்த இரு தசாப்தங்களுக்குள் துரிதமாக அதகிரித்துள்ளதுடன், இவ்வதிகரிப்பு கொள்ளவுக்கு அமைய 30% ஐ காண்பிக்கின்றது. இலங்கை 26% ஐ அண்மித்த பாரிய சந்தைப் பங்குகளைக் கொண்ட ஜப்பானில் கறுந்தேயிலை கூடுதலான கேள்விகள் தொடர்ச்சியாக் காணப்படுகின்றன. 2012 ஆம் ஆண்டில் இ 2011 ஆம் ஆண்டில் 11,587 மெற்றித் தொன்னுக்கு இணைவாக இலங்கை ஜப்பானுக்கு 9,545 மெற்றித் தொன் ஏற்றுமதி செய்துள்ளதுடன், இதனை அளவ-ியல் ரீதியில் நோக்கும் போது 18% குறைவினைக் காண்பிக்கின்றது.

### 2.6.5.4. கொங்கொங்



நீண்ட காலமாக பிரித்தானியாவுக்கு ஒத்தான மற்றும் சீனாவில் Green / Pierh தேயிலை சம்பிதாாயத்தை அடிப்படையாகக் கொண்டு அதிசிறந்த தேயிலைக் சம்பிரதாயத்தைக் காண்பிக்கின்றது. இது எவ்வாறாக இருப்பினும் சகல ஆண்டுகளிலும் ஹொங்கொங்கிற்காக சுற்றுலாப்பிரயாணிகள் 30 மில்லியன் வருகை தருவதனால் மனையாளர்களில் உண்மையான தேயிலை நுகர்வு குறைவாகக் காணப்படுகின்றது.

2012 ஆண்டில் 36% சந்தைப் பங்குகள் கொண்ட இலங்கை ஹொங்கொங் தேயிலை சந்தையில் முன்னணியினை தொடர்ந்தும் பேணுகின்றது. ஹொங்கொங்கிற்காக ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்தத் தேயிலையில் சிறிதளவு தளம்பல் காணப்பட்ட போதிலும் கடந்த தசாப்தத்திற்குள் 9,000 தொன் தொடக்கம் 12,000 வரை காணப்பட்டுள்ளது. இலங்கை 2011 ஆம் ஆண்டில் ஹொங்கொங்கிற்காக ஏற்றுமதிசெய்யப்பட்ட அளவு 5,145 மெற்றித் தொன்னுக்கு இணைவாக 2012 ஆம் ஆண்டில் 4,390 மெற்றித் தொன் ஏற்றுமதி செய்துள்ளது. ஹொங்கொங்கிற்கான இலங்கை தேயிலை ஏற்றுமதியில் பெறுமதி சேர்க்கப்பட்ட உள்ளீடு 21% ஆகும்.

### 2.6.5.5. தாய்வான்



தற்போது தாய்வானில் தேயிலை உற்பத்தி 17,000 மெற்றித் தொன்னுக்கு அண்மித்த எல்லையில் காணப்படுவதுடன் அது உலகில் சிறந்த தேயிலையாக மாற்றமடைந்துள்ள Oolong தேயிலையாக உயர் தரத்தைக் கொண்டுள்ளது.

தாய்வான் இறக்குமதி செய்யும் மொத்த தேயிலை அளவு ஆண்டுக்கு 25 -30 மெற்றித் தொன்னுக்கு அண்மித்ததாகக் காணப்படுகின்றது. . 2011 ஆம் ஆண்டின் புள்ளிவிபரங்களுக்கு அமைய தாய்வானின் சகல வகைகளும் கொண்டு பச்சைத் தேயிலை 3,640 மெற்றித் தொன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது சீனா மற்றும் இலங்கைக்குத் தொடராக 18% மற்றும் 7% பங்கினைக் கொண்டுள்ளது. தாய்வானுக்கு ஏற்றுமதி செய்யப்படும் இலங்கை தேயிலை 2011ஆம் ஆண்டில் 2,097 மெற்றித்தொன்னுக்கு இணைவாக 2012ஆம் ஆண்டில் 1,935 மெற்றித் தொன்னாகக் காண்பிக்கப்பட்டுள்ளது. இது 2011 ஆம் ஆண்டுக்கு இணைவாக 8% குறைவினைக் காண்பிக்கின்றது. தாய்வானில் மொத்த இறக்குமதி குறைவடைந்துள்ள போதிலும் சந்தைப் பங்களிப்பு மாற்றமின்றிக் காணப்படுகின்றது.

### 2.6.5.6. இந்தியா



இந்தியா திறந்த சந்தைப் பொருளாதாரத்தை விருத்தி செய்த போதிலும் இதன் கடந்த கால கொள்கைகள் தொடர்ந்தும் பின்பற்றப்படுகின்றன. தொழில்நுட்பக் கோவைகளின் குறைவு, அதிலிருந்து விலகல், அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளை தனியார் மயப்படுத்தல் மற்றும் வெளிநாட்டு வர்த்தகம், முதலீட்டின் மீது வரையறுக்கப்பட்ட நிருவாகம் உள்ளிட்ட பொருளாதாரத் தளர்வு 1990 க்கு முன்னர் இருந்து ஆரம்பமானது. 1997 ஆம் ஆண்டு தொடக்கம் ஆண்டொன்றுக்கு 7% பொருளாதார விருத்திக்கு இது உதவியாக அமைந்துள்ளது. சந்தை கட்டுப்பாடுகள் தளர்வுகளுக்கு அமைய இந்தியாவுக்கு தேயிலை ஏற்றுமதி செய்வதற்கான சந்தர்ப்பம் இலங்கைக்குக் கிடைத்திருந்த போதிலும், இந்தியா உலகின் மிகப் பெரிய தேயிலை உற்பத்தி செய்யும் நாடு என்பதனால், இலங்கை சந்தைப் பங்களிப்பு மிகப் பாரிய அளவில் அமையவில்லை.

02

கைத்தொழிலில் பக்கத் தோற்றம்



### 2.6.5.7. பாகிஸ்தான்

பாகிஸ்தான் உலகில் தேயிலை நுகரும் பிரதான நாடுகளில் ஒன்றாகும். தேயிலை சந்தை அளவு 190 – 200 மில்லியன் ஆகும். பாகிஸ்தானில் தேயிலை இறக்குமதி அளவு அதிகரித்துள்ளது. 2012 ஆம் ஆண்டில் மொத்த இறக்குமதி முன்னைய ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட 122,530 மெற்றித் தொன்னுக்கு இணை-வாக. 129,238 மெற்றித் தொன்னாகப் பதிவாகி உள்ளது. பாகிஸ்தானில் நுகர்வுக்கு அமைய சுமார் 80,000 மெற்றித் தொன் பல்வேறுபட்ட மார்க்கங்களின் ஊடாக பாகிஸ்தானுக்கு சட்டவிரோதமான முறையில் கொண்டு வரப்படுகின்றன.

பாகிஸ்தான் தறுவிக்கும் கறுந்தேயிலையின் சாதாரண விலை-லயின் அளவு அதன் வகைக்கமைய நாடு மற்றும் தரத்திற்கு அமைய மாற்றமடைந்துள்ளது. கறுந்தேயிலைக்கான மிகக் குறைந்தபட்ச விலை சீனாவிலேயே காணப்படுகின்றது. ஒரு கிலோ கிராமிற்கு 0.90 அமெரிக்க டொலர் பதிவாகியுள்ளதுடன், அதிஉயரிய சாதாரண விலை இலங்கையில் கிலோகிராமிற்கு 3.46 அமெரிக்க டொலர் பதிவாகியுள்ளது.

இலங்கையில் இருந்து பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை 2012ஆம் ஆண்டில் விசேட அதிகரிப்பினைக் காண்பிக்கின்றது. இது 2011ஆம் ஆண்டில் பதிவாகிய 1057.7 மெற்றித் தொன்னுடன் ஒப்பீடு செய்யும் போது 4,675 மெற்றித் தொன்னாக பதிவாகி உள்ளது. (300% அதிகரிப்பு). கென்யாவின் தேயிலை விலை அதிகரிப்பதன் பயன் மற்றும் பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கு அமைய காணப்படும் வரிச் சலுகை போன்றவற்றைக் கருத்திற் கொண்டு “இலங்கை தேயிலை“ பாகிஸ்தானில் ஊக்குவிக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

1970 மற்றும் 1980 ஆண்டுகளின் முதல் பகுதிகளில் இலங்கை பாகிஸ்தானின் தேயிலை சந்தையில் முன்னணியில் உள்ளது. கொழும்பு ஏலவிற்பனை அதிகரித்ததைத் தொடர்ந்து சந்தைப் பங்களிப்பு குறைவடைந்துள்ளதுடன், பாகிஸ்தான் இறக்குமதியாளர்களுக்கு இலாபகரமான விலைகளுக்காக கென்யாவில் CTC தேயிலைக்குப் பிரவேசித்துள்ளது.

## 2.6.6. அமெரிக்கா வலயம்

2.22 . அட்டவணை : அமெரிக்க வலயத்துக்குரிய நாடுகள் : இலங்கை தேயிலைக்கான சந்தைப் பங்களிப்பு

| எண்ணிக்கை | நாடு | 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|
| | | சந்தைப் பகுதி-% | | | |
| 1 | அமெரிக்க ஐக்கிய இராச்சியம் | 2 | 3 | 3 | 3 |
| 2 | கனடா | 4 | 5 | 4 | 3 |

மூலம் : சர்வதேச தேயிலைக் குழு புள்ளிவிபரவியல் தகவல் வெளியீடுகள் 2013

### 2.6.6.1. அமெரிக்க ஐக்கிய இராச்சியம்



ரஷ்யா மற்றும் பாகிஸ்தானுக்கு அமைய 2012ஆம் ஆண்டில் 125,500 மெற்றித் தொன் பதிவான ஏற்றுமதி கொள்ளவு அமெரிக்க ஐக்கிய இராச்சியம் உலகின் மூன்றாவது மிகப் பெரிய தேயிலை ஏற்றுமதி நாடாக மாற்றம் பெற்றுள்ளது. இதேவேளை, அமெரிக்க ஐக்கிய இராச்சியத்தின் சந்தைப் பிரதானமாக நான்கு பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதாவது சம்பிரதாயத் தேயிலை, (தேயிலைப் பொதி – தேயிலை இலை) RTD தேயிலை (டின் மற்றும் போத்தல்), சேவைக் கைத்தொழில் (ஹோட்டல் உணவகங்கள் போன்றன) மற்றும் விசேட தேயிலை (தேயிலை சலூன்) gourmet. தேயிலை வர்த்தக நிலையம் போன்றன) இதன் சகல வகைகளும் கடந்த சில ஆண்டுகளுக்குள் அதிகரித்துள்ளன. RTD வகை விசேடத் தேயிலை வகைகளுக்கு அப்பால் அதிஉயரிய விருத்தியை பதிவாக்கியுள்ளது.

அமெரிக்க ஐக்கிய இராச்சியத்திற்கு இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை அளவு வருடத்திற்கு 2,500 – 3500 மெற்றித் தொன்னாகும். 2012 ஆம் ஆண்டுக்குள் இலங்கை சந்தைப் பங்களிப்பு 3% ஆகும். 3,277 மெற்றித் தொன் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

### 2.6.6.2. கனடா



2010 ஆம் ஆண்டுக்குள் கனடிய தேயிலை சந்தைக் கொள்ளவு அதிகரித்துள்ளது. அத்துடன் பெறுமதி சேர்க்கப்பட்ட தரத்தில் உயர் உற்பத்திக்காக மேலதிக கொடுப்பனவுகளை மேற்கொள்ள கனேடிய நுகர்வோரின் சுவையினை உறுதிப்படுத்தும் வகையில் பெறுமதிக்கு அமைய விருத்தியடைந்துள்ளது. கனடாவுக்கு இறக்குமதி செய்யப்பட்ட தேயிலை அளவு கடந்த சில ஆண்டுகளுக்குள் 17,000 மெற்றித் தொன்கள் தொடக்கம் 19,000 வரை வருடாந்தம் அன்னளவாக அதிகரித்துள்ளது.

‘இலங்கையின் 3% சந்தைப் பங்களிப்புக்களைக் கொண்ட தேயிலை விநியோகஸ்தராக மாற்றம் பெற்றுள்ளது. இலங்கையில் இருந்து கனடாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் தேயிலையின் அளவு கடந்த காலத்தில் 1,000 மெற்றித் தொன்னால் அதிகரித்தது. 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை தேயிலைக்கு காணப்பட்ட கூடுதலான விலைகள் காரணமாக (loose) தேயிலை வகையில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி காரணமாக இலங்கையின் ஏற்றுமதியின் அளவு குறைவடைந்துள்ளது. பச்சை தேயிலை வகைகளில் காணப்படும் சுகாதார நலன்கள் காரணமாக பச்சை தேயிலை நுகர்வு கனடாவில் துரிதமாக அதிகரித்துள்ளது. பொதுவாக தனிநபர் தேயிலை நுகர்வு 70 லீற்றராக காணப்படுகின்றது. இது கடந்த 5 வருடங்களுக்குள் விசேட அதிகரிப்பினைக் காண்பிக்கின்றது.

சந்தைப் பங்களிப்பு 7% ஐ கொண்டுள்ள இலங்கை பிரதான கறுந்தேயிலை விநியோக நாடாக தொடர்ந்தும் நிலைத்துள்ளது. “Tata Global Beverages” நிறுவனத்தில் காணப்படும் அதிஉயரிய மட்டத்திலான பயன்பாடுகள் காரணமாக இந்தியாவின் விநியோகங்களில் துரித அதிகரிப்பினால் கடந்த சில ஆண்டுகளுக்குள் சந்தையில் இலங்கை மற்றும் கென்யாவின் நிலை வீழ்ச்சியடைந்துள்ளது.

# தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்



*Seminars conducted for tea factory owners*



*Up-country tea factory*



*Sorting of green leaves*




*Green tea leaf count*



*Roll breaking*



*Shifting room*

# 3.தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

03

தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

## 3.1 தேயிலை ஆணையாளர் பிரிவின் செயற்சாதனைகள்.

1976 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் தேயிலை ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்ட தேயிலை கைத்தொழில் அபிவிருத்தி உற்பத்தி, விநியோகம், மேற்பார்வை தொடர்பில் உரிய 1975 இலக்கம் 14 கொண்ட இலங்கை தேயிலை சபை பிரமானக் குறிப்பு மற்றும் 1957 இலக்கம் 51 தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கு அமைய தேயிலை ஆணையாளர் பிரிவினால் மேற்பார்வைப் பணிகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட சகல செயற்பாடுகளும் நிறுவகிக்கப்படுகின்றன.

தேயிலை ஆணையாளர் பிரிவின் பணிகள், காலி, மாத்தறை, இரத்தினபுரி, கம்பொல, ஹட்டன், பட்டாரவளை மற்றும் மதுகம ஆகிய பிரதேசங்களில் 7 பிராந்திய அலுவலகங்களுக்கு பன்முகப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கை தேயிலை சபையின் ஆணையாளர் பிரிவினால் தேயிலைக் கைத்தொழில் முன்னேற்றதிற்காக கீழ் குறிப்பிடப்பட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

- தேயிலை உற்பத்திக்கான உரியதான புள்ளிவிபரங்களைச் சேகரித்தல்.
- தேயிலை உற்பத்தி மற்றும் கைத்தொழிற்சாலைகளைப் பதிவு செய்தலும் பதிவினைப் புதுப்பித்தலும்.
- பச்சைத் தேயிலைக் கொழுந்தின் தரத்தினை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள்.
- கைத்தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல் மற்றும் மீள்பயிர் செய்கைகளுக்கான மானிய உதவிகளை வழங்குதல். (மாற்றுச் செய்கைள் மற்றும் புதிய செய்கைகள் உட்பட)
- கைத்தொழிற்சாலைகள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கான நியாய விலைகள் .
- சிறந்த உற்பத்திகள் தொடர்பான விசேட ஆய்வு (GMP)
- பச்சைத் தேயிலை விநியோகஸ்தர்களை பதிவு செய்தலும், மேற்பார்வை செய்தலும்.
- கழிவுத் தேயிரல சுத்திகரிப்பு மத்திய நிலையம் மற்றும் விநியோகஸ்தர்களைப் பதிவு செய்தலும், மேற்பார்வையும்.
- இலங்கை தேயிலை சபை / இலங்கை தர நிறுவகங்களைப் பதிவு செய்யப்பட்டள்ள பண்புசார் தரத்தினைஉறுதிப்படுத்தும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல்.

1975 இலக்கம் 14 கொண்ட இலங்கை தேயிலை சபைச் சட்டத்தின் 25ஆவது பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட மற்றும் தேயிலை ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்ட கோவைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

(அ) இலங்கை தேயிலை சபை (முடிவுத் தேயிலைக்கான தயாரிப்புக்கள் மற்றும் சுத்திகரிப்பு தரம் (கோவை - 1986)
(ஆ) இலங்கை தேயிலை சபை (மீள்செய்கை மற்றும் கைத்தொழிற்சாலை நவீனமயப்படுத்தும் மானிய உதவி வேலைத்திட்டங்கள்).

### 3.1.1 பிரதான வெற்றிகள்

கடந்த ஆண்டு எண்ணிக்கையுடன் ஒப்பீடு செய்யும் போது 2012ஆம் ஆண்டுக்குள் இப்பிரிவினால் பல்வேறு வெற்றிகள் பெறப்பட்டன.

03

தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

வரி செலுத்துவதில் இருந்து தவிர்ந்திருப்போர் மற்றும் பிரிவி-னால் தண்டப்பணம் நிதி யோசனைத் திட்டம் மறுசீரமைப்பினை அறிமுகப்படுத்தியமை போன்றனவற்றைப் பிரதான வெற்றிகளாகக் கரு-தமுடியும். 2012ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மற்றுமொரு பிரதான அபிவிருத்திப் பணியாக அமைவது “B Leaf 60 program” வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டமையாகும். 2012ஆம் ஆண்டில் விலைகளை அறிந்து கொள்வதற்காக குறுஞ்செய்தி முறையினைத் தாபித்தலும், உள்நாட்டுச் சந்தைக்காகப் புதிய தர அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டன.

## 3.1.2 உற்பத்தியாளர்கள் மற்றும் கைத்தொழிற்சாலைகளை பதிவு செய்தல்.

1957 இலக்கம் 51 கொண்ட தேயிலை நிருவாகச் சட்டத்தின் கீழ், தேயிலை உற்பத்தியாளர்கள் தொடர்பிலான உற்பத்தியாளர்களின் ஆவணம், தேயிலை ஆணையாளர் பிரிவினால் பேணப்படுவதுடன், அவ்வாறான உற்பத்தியாளர்கள் பதிவு செய்ய வேண்டிய தேயிலை கைத்தொழிற்சாலைகளுக்குரியதான விடயங்கள் பரிந்துறை செய்யப்பட்டுள்ளன. இச்சட்டத்தின் நோக்கத்திற்காக எவரேனும் ஒரு நபர், உற்பத்தியாளராக பதிவு செய்ய வேண்டுமா இல்லையா என்பது தொடர்பாக தீர்மானம் எடுக்கும் அதிகாரம் இப்பிரிவுக்கு உரியதாகும். ஏலவிற்பனை மத்திய நிலையங்களின் ஊடாக தேயிலை விற்பனை மற்றும் தேயிலை உற்பத்திக்காக சகல தேயிலை உற்பத்தியாளர்களும் தேயிலை சபையில் பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

கட்டிடம், உபகரணம் மற்றும் சிறந்த தரமிக்க தேயிலை உற்பத்திக்கு கைத்தொழிற்சாலையின் செயற்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படக் கூடிய முறைகள் காரணியாக, கைத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை வகைகளின் பண்புசார் தரத்தை மேற்பார்வை செய்வதற்காக உதவுவதற்கு, கழிவுத் தேயிலை வெளியேற்றத்தை நிருவகிப்பதற்கு இயலுமையை வழங்குதல் மற்றும் நியாய விலை உள்ளீட்டினை அமுல்படுத்த உறுதிப்படுத்தும் வகையில் முடிவுத்தேயிலை உற்பத்தி செய்யப்படும் சகல கைத்தொழிற்சாலைகளும் தேயிலை சபையில் பதிவு செய்வது அத்தியவசியமாகும்.

வகைகளுக்கு அமைய மேற்கொள்ளப்படும் செயற்பாட்டுப் பணிகளை வகைப்படுத்தலும், தேயிலை உற்பத்தியின் விலைகள் 3.1 அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.1 அட்டவணை : செயற்பாடுகளுக்கு அமைய தேயிலை கைத்தொழிற்சாலைகளை வகைப்படுத்தல்.

| தரம் | உயர் | மத்திய | தாழ் | மூலதனம் |
|---|---|---|---|---|
| 1. தேயிலை கொழுந்துகளுக்கு வரையறுக்கப்பட்ட | 69 | 15 | 6 | 90 |
| 2. தேயிலைக் கொழுந்து மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட தேயிலைக் கொழுந்து:-<br>a) மொத்த உற்பத்தியில் 50மூ ஐவிட குறைந்த தேயிலைக் கொழுந்து | 21 | 38 | 157 | 216 |
| b) மொத்த உற்பத்தியில் 50மூ ஐவிட மேற்பட்ட தேயிலைக் கொழுந்து | 72 | 30 | 15 | 117 |
| 3. கொள்வனவு செய்யப்பட்ட தேயிலைக் கொழுந்து | 7 | 25 | 247 | 279 |
| 4. பதிவு செய்யப்பட்ட போதிலும், செயற்பாடுகளை மேற்கொள்ளாத தேயிலை கைத்தொழிற்சாலைகள். | 35 | 81 | 81 | 197 |
| 5. பதிவு செய்யப்பட்ட மொத்த கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை | 204 | 181 | 506 | 891 |
| 6. செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட மொத்தப் பதிவு செய்யப்பட்ட கைத்தொழிற்சாகைலளின் எண்ணிக்கை | 169 | 108 | 425 | 702 |

## 3.1.3 தேயிலை கொழுந்தினை கொள்வனவு செய்வதற்காக செலுத்த வேண்டிய நியாய விலைகள்.



தேயிலை நிருவாக சட்டத்தின் ஒழுங்கு விதிகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட தேயிலைக் கொழுந்து உற்பத்தியில் ஈடுபடும் கைத்தொழிற்சாலைகள், அக்கைத்தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் முடிவுத் தேயிலையின் மூலம் உழைக்கக் கூடிய வருமானம் மற்றும் விலைகள் தொடர்பாக கவனம் செலுத்தி தேயிலை ஆணையாளரின் பரிந்துறை செய்யப்பட்ட விலைகளை அடிப்படையாகக் கொண்டு கொள்வனவு செய்யப்பட்ட தேயிலைக்காக நியாய விலைகளைச் செலுத்துவது அவசியமாகும். பச்சைத ˙தேயிலை கொழுந்து விநியோகஸ்தர்களுக்கு கைத்தொழிற்சாலைகளில் இருந்து செலுத்த வேண்டிய நியாய விலைகளைத் தீர்மானிக்கப்பட்டிருப்பது அவ்வாறான கைத்தொழிற்சாலைகளின் மாதாந்த தேயிலை விற்பனை சாதாரண விலையின் அடிப்படையிலாகும். முடிவுத் தேயிலை விற்பனைகள் மூலம் பெறப்படும் நிதி, தேயிலை கொழுந்து விநியோகஸ்தர்கள் மற்றும் கைத்தொழிலாளர்களுக்கு இடையே 68:32 விகிதாசாரத்திற்கு பகிரப்பட வேண்டும். கைத்தொழிற்சாலைகளில் விற்பனை சாதாரண மாதாந்தம் அதிகரித்துச் செல்வதாயின் வருமானம் 50:50 விகிதாசாரத்திற்கு பங்குகளாகப் பிரிக்கப்படுகின்றன. பச்சைத் தேயிலையில் இருந்து முடிவுத் தேயிலை வரை உற்பத்தி செய்யப்பட்ட அளவு விகிதாசாரம் 21.5% சூத்திரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

### 3.1.3.1 செலுத்தப்படாத கொடுப்பனவுகள்.

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் பச்சை தேயிலை விநியோகஸ்தர்களுக்கு செலுத்தப்படாத மொத்தக் கொடுப்பனவு அளவு 2012. டிசெம்பர் 31ஆம் திகதி அன்று . 83.4 மில்லியன் ருபாவாகக் குறிப்பிடப்பட்டள்ளது. அத்துடன் 2012ஆம் ஆண்டில் ரூபா 94.23 மில்லியன் எம்மால் அறவிடப்பட்டது. மேலும் செலுத்தாதுள்ள பச்சை தேயிலைக் கொடுப்பனவுகளின் மொத்தம் அவர்களது பதிவுகளை இடைநிறுத்தப்பட்டமையினால் தடைகள் ஏற்பட்டன. அவ்வாறான கைத்தொழில்சாலைகளை மீளப்பதிவு செய்தல் தொடர்பாகக் கருத்திற் கொள்ளப்படுவது அக்கைத்தொழிற்சாலைகளினால் செலுத்தாதுள்ள நிதியினை மீள தீர்க்கப்பட்டதன் பின்னராகும். இதன்பயனாக செலுத்தாதுள்ள கொடுப்பனவுகளின் பெறுமதி 22.6% இனால் குறைவடைந்தது,

3.1.2 அட்டவணை - செலுத்தாதுள்ள பச்சைத் தேயிலைக் கொடுப்பனவுகள்.

| வலயம் | 2012.1.1 திகதிக்கு நிதி | 2012 ஆம் ஆண்டில் சேரிக்கப்பட்ட நிதி | அறவிடப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட நிதி | 2012.12.31 ஆம் திகதியன்று சிறுதேயிலை தோட்ட உரிமையாளருக்கு செலுத்த வேண்டிய நிதி | மூடப்பட்டிருந்த கைத்தொழிற்சாலைகளினால் அறவிட வேண்டிய நிதி | செயற்பாட்டுப் பணி-களை மேற்கொண்டுள்ள கைத்தொழிற்சாலைகளினால் அறவிட வேண்டிய நிதி |
|---|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி | 50,092,153.86 | 16,502,078.90 | 32,629,413.75 | 33,964,819.07 | 16,368,758.24 | 17,596,060.77 |
| மாத்தறை | 4,063,243.93 | - | 1,409,470.38 | 2,653,773.55 | 2,639,004.69 | 14768.86 |
| கம்பொல | 14,868,452.26 | | 367,230.30 | 14,501,221.96 | 10,900,641.81 | 3,600,580.00 |
| காலி | 15,002,386.38 | 645,358.11 | 1,198,095.59 | 14,449,648.90 | 10,559,979.15 | 3,889,669.74 |
| மதுகம | 23,014,567.76 | 6,584,587.45 | 21,101,349.00 | 8,497,807.02 | 6,754,435.21 | 1,743,371.00 |
| ஹட்டன் | 1,413,022.12 | 29,299.54 | 189,187.90 | 1,253,133.76 | 308,737.06 | 944,396.70 |
| பண்டாரவெல | 8,055,009.59 | 37,363,498.91 | 37,335,604.62 | 8,082,903.88 | 847,287.30 | 7235616.58 |
| மொத்தம் | 116,508,835.90 | 61,124,822.91 | 94,230,351.54 | 83,403,308.14 | 48,378,843.46 | 35,024,463.65 |

## 3.1.4 பச்சை தேயிலை கொழுந்தின் பண்புசார் தரத்தைக் கட்டுப்படுத்தல்.

முடிவுத் தேயிலை வகைகளின் பண்புசார் தரத்தை பேணுவதற்காக கட்டிடம், உபகரணங்கள், இயந்திர உபகரணங்கள் மற்றும் செயற்பாடுகளின் பொருத்தமான தன்மைகள் இருப்பது கட்டாயமானதாகும். எனவே பண்புசார் தரம் கொண்ட முடிவுத் தேயிலை உற்பத்திகளுக்காக மேற்கூறப்பட்ட நிபந்தனைகள் பயன்படாதிருப்பின் தேயிலை நிருவாகச் சட்டத்தின் கீழ், அவ்வாறான கைத்தொழிற்சாலைகளின் பதிவினை ரத்துச் செய்யும் அதிகாரம் தேயிலை ஆணையாளருக்கு உரியதாகும்.

கொள்வனவு செய்யப்பட்ட தேயிலை கொழுந்துகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தி செயற்பாடுகளுக்காக பச்சை தேயிலைக் கொழுந்தின் தர நிருவாகம் மிக முக்கியமாகக் கருதப்படுகின்றது. பண்புசார் தரம் மிக்க அதிஉயரிய பச்சைத்தேயிலைக் கொழுந்து உற்பத்தி செயற்பாட்டின் போது பயன்படுத்தப்படுவதாயின், முடிவுத் தேயிலை வகைகளின் பண்புசார் தரம் இதன் மூலம் அதிகரிக்கின்றன. அத்துடன், இது பச்சை தேயிலைக் கொழுந்து வர்த்தகத்தைப் போன்று தேயிலை உற்பத்திச் செயற்பாட்டின் போதும் மிகுந்த பயன்கள் கிடைக்கின்றன. எதேனும் கைத்தொழிற்சாலைகளில் கொடுப்பனவு செலுத்துவதில் இருந்து தவிர்ந்து கொள்வது பச்சைத் தேயிலை கைத்தொழில்சாலைகயாக இனங்காணப்படும் பட்சத்தில் கைத்தொழிற்சாலையினை பதிவினை இடைநிறுத்த அல்லது ரத்துச் செய்யக் காரணமாக அமையும் என எச்சரிக்கை விடுகக்கப்படும்.

பச்சை தேயிலைக் கொழுந்தின் தரத்திற்காக இலங்கை தேயிலை சபையினால் 2010 டிசெம்பர் மாதம் 14ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலில் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. தேயிலை நிருவாகச் சட்டத்தின் கீழ், தேயிலை உற்பத்தியின் பண்புசார் தரத்தை மேற்பார்வை செய்வதற்கு விருத்தி செய்வதற்கு தேயிலை ஆணையாளர் பிரிவுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், தேயிலை உற்பத்தியின் பண்புசார் தரத்தை விருத்தி செய்வதற்காக கீழ் குறிப்பிடப்பட்ட செயற்றிட்டங்கள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளன.

1. இலங்கை தர நிருவகம் / இலங்கை தேயிலை சபையின் தரச் சான்றிதம்ழ.
2. தேயிலைக் கொழுந்தின் தரத்தை மேம்படுத்துவதற்காக B Leaf 60 வியூக முறைகள்.
3. புண்டிகைக் காலத்தின் துரித அறுவடை முகாமைத்துவ வேலைத்திட்டங்கள்.
4. குறைந்த மட்டத்திலான NSA வியூக முறைகள்.
5. துர செயற்பாட்டு முறைமை, (பணியாளர் குழு செயற்பாடுகள் (Task Team Operation- TTO)
6. கைத்தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல் மானிய உதவி வேலைத்திட்டங்கள்.
7. தேயிலை மீள் செய்கை மானிய உதவி வேலைத்திட்டங்கள்.

8. கைத்தொழிற்சாலைகளை அடிப்படையாகக் கொண்ட தேயிலை அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்.
9. தேயிலைக் கைத்தொழிற்சாலைகளில் சிறந்த உற்பத்திச் செயற்பாடுகளைத் தாபித்தல்.
10. பச்சை தேயிலை விநியோகஸ்தர்களுக்கு பயிற்சி அளிக்கும் வேலைத்திட்டங்கள். (NIPM)



### 3.1.4.1 இலங்கை தர நிருவாகம்- இலங்கை தேயிலை சபையின் தரச்சான்றிதழ்

உற்பத்திச் செயற்பாடுகள் மற்றும் இறுதி உற்பத்தி அதாவது கறுந்தேயிலை, உறுதிப்படுத்துவதற்காக உற்பத்தி சான்றிதழ் வேலைத்திட்டம் இலங்கை தர நிருவகத்தின் உதவியுடன் இலங்கை தேயிலைச் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வேலைத்திட்டம் செயற்பாட்டு நிருவாகத்தில் மேலதிக தேவைகளுடன் இணைந்து தர முகாமைத்துவ முறைமையில் அத்தியவசிய அடிப்படை அம்சங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், சட்ட ரீதியிலான தேவைகளுடன் உரிய தரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள உற்பத்திப் பரிசோதனைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இலங்கை தர நிருவகம் - இலங்கை தேயிலை சபை தேயிலைச் சான்றிதழை உறுதிப்படுத்தும் வேலைத்திட்டம், இறுதி நுகர்வோருக்கு பண்புசார் தரமிக்க உயரிய கறுந்தேயிலை விநியோகத்திற்காக மூன்றாவது தரப்பினரின் சான்றிதழை வழங்குவதற்கு பக்கசார்பற்ற மாற்றங்கள் இடம்பெறாத வகையில் நெகிழ்வுத் தன்மையுடன் செயல்படுத்தப்படுகின்றன.

### 3.1.4.2 தேயிலைக் கொழுந்தின் தரத்தை மேம்படுத்துவதற்றாக B Leaf 60 வியூக முறைகள்

அறுவடைக்குப் பின்னர் வீணாக்கப்படுவதை கட்டுப்படுத்தல் மற்றும் தேயிலைக் கொழுந்தின் தரத்தை விருத்தி செய்வதன் மூலம் தேயிலைக் கொழுந்துகளின் பண்புசார் தரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் இவ்வேலைதிட்டங்கள அமுல்படுத்தப்பட்டன. தற்போது காணப்படும் தேயிலைக் கொழுந்து தரமாக அமைதல் : சிறந்த தேயிலைக் கொழுந்து 33% உம் சிறந்த தரத்திற்கு ஓரளவு அதிகமாகவுள்ளது 32% உம் குறைந்தபட்ச தரம் 35% உம் காணப்படுகின்றது. குறுகிய காலத்திற்குள் பச்சைத் தேயிலைக் கொழுந்தை குறைந்தபட்சம் 60% உம் (சிறந்த தேயிலைக் கொழுந்தின் தரம்) பேணுவதனை இலக்காகக் கொண்டு இவ் "பீலிப் 60" வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டது இவ்விலக்கினை எட்டுவதற்காக கீழ் குறிப்பிடப்பட்ட வியூகங்கள் ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டன..



1. உரிய தரப்பினருக்கான அறிவுறுத்தல வேலைத்திட்டங்கள்.
2. தேயிலைக் கொழுந்து செயற்பாடுகள் தொடர்பிலான கோவைகளை விதித்தல்.
3. அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்பத்தை விருத்தி செய்வதற்காக நிதி ஒத்துழைப்புக்களை வழங்குதல்.

# 03

தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்






*Awareness programs for stakeholders*

03

தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

3.1.4.3 பண்டிகைக் காலத்தில் துரிதகதியில் அறுவடை முகாமைத்துவ வேலைத்திட்டங்கள்.

பண்டிகைக் காலத்தில் தேயிலைக் கைத்தொழிற்சாலை நீண்ட காலம் மூடிவிடப்படுவதனால் அறுவடை நட்டத்தினைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் இச்செயற்றிட்டம் அமுல்படுத்தப்படுகிறது. இச்செயற்றிட்டம் 2005ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்டதுடன், அது தொடக்கம் பல்வேறுபட்ட பணிகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் முழுமையான அறுவடை நட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு தேயிலை ஆணையாளர் பிரிவுக்கு இயலு-மைகள் கிடைக்கப் பெற்றுள்ளன. பண்டிகைக் காலத்தில் தேயிலைக் கைத்தொழிற்சாலைகள் மூடப்படுவது 2012 ஏப்ரல் மாதம் 11 தொடக்கம் 16ஆம் திகதி வரை மாத்திரம் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

3.1.4.4 குறைந்த மட்டத்திலான **NSA** வியூகத் திட்டங்கள்.

NSA செயற்பாட்டில் குறைந்த மட்டத்திலுள்ள தேயிலைக் கைத்தொழிற்சாலைகளுக்காக இச்செயற்றிட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இச்செயற்றிட்டத்தின் நோக்கமாக அமைவது பச்சைத் தேயிலை வகைக-ளைப் போன்று தேயிலை உற்பத்தியும், தேயிலைத் தரத்தின் உற்பத்தித் தரத்தை மேம்படுத்துவதன் மூலம் இக்கைத்தொழிற்சாலைகளின் NSA தரத்தை உயரிய மட்டத்திற்குப் பேணுவதாகும்.

3.1.4.5 தர செயற்பாட்டு முறைமை (செயற் குழுப் பணிகள் **- TTO)**

2012 ஆம் ஆண்டின் தேயிலை ஆணையாளர் பிரிவினால் 36 திடீர் பரிசோதனைகள் தேயிலை கைத்தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்பட்டன.

3.3 அட்டவணை : செயற்பாட்டுக் குழுப் பணிகள்

| பிரதேசம் | மேற்கொள்ளப்பட்ட பரிசோதகைளின்எணிணக்கை |
|---|---|
| பண்டாரவளை | 0 |
| கம்பொல | 6 |
| இரத்தினபுரி | 16 |
| மாத்தறை | 7 |
| காலி | 1 |
| மதுகம | 6 |

மூலம் : சா்வதேச தேயிலை கவுன்சலின் புள்ளி விபரம் தொடா்பான வருடாந்த அறிக்கை 2013

3.1.4.6 கைத்தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல் மற்றும் மீள்பயிர்ச் செய்கை மானிய உதவி வேலைத்திட்டம்.

இலங்கைத் தேயிலை சபையின் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் தேயிலை அபிவிருத்திப் பணிகளுக்காக திறைசேரியினால் உள்நாட்டு நிதியத்தின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதியம், கைத்தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல் மற்றும் தேயிலை செய்கைக்கான மானிய உதவி வேலைத்திட்டங்களுக்காக ஆண்டுக்குள் பயன்படுத்தப்படுகின்றன.

தேயிலை மீள் பயிர்ச் செய்கை மற்றும் கைத்தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துவதற்காக கூட்டுத்தாபனத்தைப் போன்று தனியார் பிரிவுக்காகவும் 2012ஆம் ஆண்டில் நிதி காணப்பட்டது. இந்நிதி மூலம் தனியார் துறை உரிமையுடன் தேயிலைக் கைத்தொழிற்சாலைகளை விருத்தி செய்வதற்காக 45% உம் எஞ்சியது கூட்டுத்தாபனத்தின் தேயிலை-லக் கைத்தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்த மற்றும் மீள்செய்கைக்காக ஒதுக்கப்பட்டன.

3.1.4.7 கைத்தொழிற்சாலைகளை அடிப்படையாகக் கொண்ட தேயிலை அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் . **(FBTDP)**

கைத்தொழிற்சாலைகளை அடிப்படையாகக் கொண்டு தேயிலை அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் இலங்கை தேயிலை சபை, தேயிலை ஆராய்ச்சி நிறுவகம் மற்றும் சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் உதவியுடன் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் மற்றும் தேயிலைக் கைத்தொழிற்சாலையின் உற்பத்தித் திறனை மேம்படுத்தும் நோக்குடன் வகுக்கப்பட்டுள்ளது.



இலங்கை தேயிலை கொழுந்து பறிப்போர்

03

தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்தல் மற்றும் பச்சைத் தேயிலைக் கொழுந்தினை நிருவகிக்கும் நோக்குடன் இவ்வேலைத்திட்டங்களின் மூலம் பரவலாக்கல் உத்தியோகத்தர் (துறைசார் இணைப்பாளர்) களை நியமிப்பதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளன. இவ்வேலைத்திட்டம் 2012ஆம் ஆண்டுக்காக சகல தேயிலைப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் பிரதேசங்களில் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளன.

3.1.4.8 தேயிலைக் கைத்தொழிற்சாலைகளின் சிறந்த உற்பத்தி உள்ளீடுகளைத் தாபித்தல்.

இச்செயற்றிட்டத்தின் கீழ் சகல கைத்தொழிற்சாலைகளினதும் மதிப்பீடு செய்யப்படுவதுடன், உற்பத்திச் செயற்பாடுகளின் தரத்தை மேம்பாடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

3.4 அட்டவணை : சிறந்த உற்பத்தி உள்ளீடுகளுக்காக பிரதேச ரீதியிலான மதிப்பீடுகள்.

| வலயம் | சிறந்த உற்பத்தி செயற்பாட்டு மதிப்பீடு |
|---|---|
| பண்டாரவளை | |
| கம்பொல | 65 |
| ஹற்டன் | 26 |
| இரத்தினபுரி | |
| மாத்தறை | 45 |
| காலி | 26 |
| மதுகம | 28 |
| மொத்தம் | 211 |

மூலம் : சர்வதேச தேயிலை கவுன்சலின் புள்ளி விபரம் தொடர்பான வருடாந்த அறிக்கை 2013

## 3.1.5 பச்சை தேயிலை கொழுந்து விநியோகஸ்தர்களுக்காக அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.

தேயிலை நிருவாகச் சட்டத்திற்கு அமைய சகல பச்சைத் தேயிலை கொழுந்து விநியோகஸ்தர்கள், தேயிலை ஆணையாளர் பிரிவினால் வருடாந்த அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள அவசியப்படுகின்றது.

## 3.1.6 கழிவுத் தேயிலை செயற்பாடுகள்.

கழிவுத் தேயிலை செயற்பாடுகள், பயன்பாட்டிற்குப் பொருத்தமற்ற கழிவுத் தேயிலை வகைகளை பயன்பாட்டுக்கு உகந்ததாக கழிவுத் தேயிலையாக ஒதுக்குவதற்காக மேற்கொள்ளப்படும் செயற்பாடாகும். கழிவுத்தேயிலை சுத்திகரிப்பு மத்திய நிலையங்களுக்காக அனுமதிப்பத்திரங்களை வழங்கும் வேலைத்திட்டம் 2009ஆம் அண்டு தொடக்கம் தாபிக்கப்பட்டுள்ளது. 3.7 அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருப்பது 2012ஆம் அண்டுக்குள் பிராந்திய ரீதியில் வெளியிடப்பட்ட மொத்த அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கையாகும்.

3.1.6: அட்டவணை : 2012ஆம் ஆண்டு கழிவுத் தேயிலை சுத்திகரிப்பு மத்திய நிலையங்களுக்காக

| வலயம் | 2012.01.01 ஆம் திகதி பதிவு செய்யப்பட்ட செயற்பாட்டாளர்கள் | ஆண்டுக்குள் புதுப்பித்தல். | ஆண்டுக்குகள் புதிய வெளியீடுகள் | 2012.12.31 ஆம் திகதியன்று மொத்தம் | 2012.12.31 ஆம் திகதியன்று அமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| பண்டாரவளை | 2 | 1 | 0 | 1 | 283 |
| ஹற்டன் | 3 | 238 | 49 | 287 | 1058 |
| கம்பொல | 235 | | | 0 | |
| மாத்தறை | 10 | 10 | 3 | 13 | 572 |
| காலி | 31 | 31 | 14 | 45 | 442 |
| இரத்தினபுரி | 4 | 4 | 3 | 7 | 895 |
| மதுகம | 2 | 2 | 4 | 6 | 249 |
| மொத்தம் | 287 | 286 | 73 | 359 | 3499 |


Sri Lanka Ports Authority
Sri Lanka Ports Authority
Sri Lanka Ports Authority
CMA CGM
EMIRATES PEARL
MONROVIA

# கொழும்புத் துறைமுகம்

03

தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

## 3.2 தேயிலை ஏற்றுமதிப் பிரிவு

1959 இலக்கம் 16 கொண்ட தேயிலை சட்டத்தின் (ஏற்றுமதி விலை வரி மற்றும் நிருவாகம்) அதிகாரங்கள் மற்றும் செயற்பாட்டுப் பணிகளைப் போன்று 1975 இலக்கம் 14 கொண்ட தேயிலை சபைச் சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்ட கோவை தேயிலை ஏற்றுமதிப் பிரிவினால் செயற்படுத்தப்படுகின்றது. தேயிலை ஏற்றுமதியாளர்கள் தேயிலை பொதியிடளார்கள், தேயிலைக் களஞ்சியப்படுத்தல், இறக்குமதியாளர்கள் மற்றும் பொதியிடும் வகைகளைப் பதிவு செய்தல், தேயிலை தொடர்பான தகவல்களைப் பெறல், தேயிலை வகைகளின் பண்புசார் தரத்தை மேற்பார்வை செய்தல், தேயிலை ஏற்றுமதிக்காக அதிகாரங்களை வழங்குதல், தேயிலை ஏற்றுமதி தொடர்பான புள்ளிவிபரங்களைச் சேகரித்தல் மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை மேற்பார்வை செய்தல் (இலங்கை இந்தியா / பாகிஸ்தான் - இலங்கை) இற்காக உரியதான பணிகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.2.1 பிரதான வெற்றிகள்

2012 ஆம் ஆண்டில் முத்திரை பதிக்கப்பட்ட மாதிரிப் பொதிகளைப் போன்று குழுச் சுற்றுலாக்கள் கொண்ட தர மேற்பார்வை மற்றும் மாதிரித் திட்டங்களுக்கான புதிய முறைகளை அறிமுகப்படுத்துவதற்கு ஏற்றுமதிப் பிரிவுக்கு முடிந்துள்ளது.

### 3.2.2 பதிவுகள்

இப்பிரிவின் பிரதான பணிகளில் ஒரு பணியாக அமைவது ஏற்றுமதியாளர்கள், பொதியிடுனர்கள், களஞ்சியம் மற்றும ஏற்றுமதியாளர்களைப் பதிவு செய்தலும், பதிவுகளைப் புதுப்பித்தலும் அடங்குகின்றன. 2012ஆம்ஆண்டில் அவ்வவ் பிரிவுகளின் கீழ், பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டள்ளது.

நிறுவனத்தின் (சட்டரீதியிலான நிலைப்பாடுகள்) ஊக்குவிப்பு, களஞ்சிசாலை வசதி (தேயிலைக் களஞ்சியாலை, கலக்கும் மற்றும் பொதியிடுவதற்காக) சபையினால் மிக நெருக்கமான முறையில் மேற்கொள்ளப்படும் தேயிலை பரிசோதனைகளின் போது வினைத்திறன் மிக்க ஏற்றுமதியாளர்கள் தேயிலை ஏற்றுமதியாளர்களாக பதிவு செய்ய தகைமை பெறுகின்றனர்.

1986 ஜனவரி 28 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 386/13 அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 1986 (தேயிலைப் பொதியிடுனர்களைப் பதிவு செய்தல்) இலங்கை தேயிலை சபையின் கோவைகளுக்கு அமைய உள்நாட்டு நுகர்வோருக்காக தேயிலை இலைகள் பொலித்தீன் உறைகளில் இட்டு வர்த்தகத்தில் ஈடுபடும் எந்தவொரு நபருக்கும் இயலுமைகள் காணப்படுவதில்லை என்பதுடன், இலங்கை தேயிலை சபையில் பதிவு செய்வதற்கு வேறு வகையிலான பொதியிடல் வகைகள் அவசியமாகும். பதிவுகள் ஒரு வருடத்திற்கு செல்லுபடியாவதுடன், வருடாந்தம் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

1959 இலக்கம் 16 கொண்ட தேயிலைச் சட்டம் (இறக்குமதி வரி மற்றும் நிருவாகம்) இற்கு தேயிலை ஏற்றுமதியாளராகப் பதிவு செய்துள்ள எந்தவொரு நபர் / நிறுவனம் தேயிலை இறக்குமதியாளர்களாகப் பதிவு செய்வதற்கு தகைமை பெறுகின்றனர்.

03

தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

3.2.1 அட்டவணை : ஏற்றுமதியாளர்கள், பொதியிடுனர்கள், களஞ்சிய மற்றும் இறக்குமதியாளர்களைப் பதிவு செய்தல்.

| பதிவு செய்தல் | 2012.01.01 ஆம் திகதியன்று | 2012 வருடத்திற்குள் புதிய பதிவுகள் | மொத்தம் 2012.12.31 திகயதியன்று |
|---|---|---|---|
| ஏற்றுதியாளர்கள் | 363 | 20 | 383 |
| பொதியிடுனர்கள் | 392 | 20 | 412 |
| களஞ்சியசாலை | 404 | 42 | 446 |
| இறக்குதியாளர்கள் | 184 | 7 | 192 |

1984 டிசெம்பர் ஆம் திகதி இலக்கம் 326/17 அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 1984 இலங்கை தேயிலை சபைச் சட்டக் கோவை (தேயிலை தொகை களஞ்சியப்படுத்தல்) 1986 செம்படம்பர் 10 ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் 410/11 மறுசீரமைக்கக் கூடியவாறு மற்றும் 2003 மார்ச் 20 ஆம் திகதி வெளியிடப்பட்ட 1280/8 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பகிரங்கப்படுத்தப்பட்ட கோவைகளினால் தொடர்ந்தும் மறுசீரமைக்கப்பட்டுள்ளவாறு ஏதேனும் ஒரு சந்தர்பத்தில் 1,000 கிலோ கிராமைவிட மேற்பட்ட ஏதேனும் அளவு தேயிலையைக் களஞ்சியப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படும் மற்றும் இலங்கை தேயிலை சபையினால் தேயிலை தொகையினை களஞ்சியப்படுத்துவதற்காக கருத்திற் கொள்ளும் போது திருப்தியடையக் கூடிய தொகை களஞ்சியசாலையில் அக்கோவைக்கு அமைய இலங்கை தேயிலை சபையில் பதிவு செய்ய வேண்டும் (3.2.1 அட்டவணை)

இலங்கை தேயிலையுடன் வேறு இடங்களில் உற்பத்தி செய்யப்படும் தேயிலையைக் கலந்து சில்லறைக் கொள்கலன்கள் ஏற்றுமதி செய்யப்பட வேண்டியது 1981 இலங்கை தேயிலை சபைச் சட்டத்தில் (ஏற்றுமதி மற்றும் இறக்குமதி) இற்கு அமைவாகும். அவ்வாறான கொள்கலன்கள் - பக்கட்டுக்களில் குறிப்பிட வேண்டிய பிரதானமாக அமைவது “ இலங்கை தேயிலை மற்றும் வேறு இடங்களில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை கலக்கப்பட்டது. “ அல்லது “வேறு இடங்களில் உற்பத்தி செய்யப்பட்டு இலங்கையில் பொதியிடப்பட்ட தேயிலை “ என்பதாகும். பொதியிடல்களைப் பதிவு செய்வதற்காக 2012ஆம் ஆண்டு இலங்கை தேயிலை சபைக்கு 360 விண்ணப்பபடிவங்கள் கிடைக்கப்பெற்றன.

சகல பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதியாளர்களினாலும் கொழும்புத் துறைமுகத்திற்கு கப்பல் சரக்குப் பொருட்களை கொண்டு செல்வதற்கு முன்னர் இலங்கை தேயிலை சபையின் தேயிலை ஏற்றுமதிப் பிரிவுக்கு சுங்க வெளிப்பாடுகள் (CUSDES’s) சமர்ப்பிக்க வேண்டியதுடன் ,தேயிலை சபைக்கு சகல நிலையியற் சபை வெளியிப்பாடுகளையும் வழங்கி அதிகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டும் 2012.12.31 ஆம் திகதியன்று அதிகாரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த CUSDES’s எண்ணிக்கை 36616 ஆகும். ஆத்துடன், மீள் ஏற்றுமதி மேற்கொள்வது தொடர்பில் எதிர்பார்ப்புடன் உள்ள இறக்குமதியாளரிகளினாலும் சுங்கப்பொருள் வெளிப்பாடுகள் நிறுவனத்திற்கு (CUSDES’s) சமர்ப்பிக்க வேண்டும். 2012 ஆம் ஆண்டின் இறுதியில் மீள் ஏற்றுமதியாளர்களுக்காக சுங்கப் பொருட்களைக் கொண்டு செல்வதற்காக மொத்த எண்ணிக்கை 5108 ஆகும்.

## 3.2.3 தேயிலை இறக்குதி செய்தல்.

2012 ஆம் ஆண்டில் தேயிலை சபையினால் தேயிலை ஏற்றுமதி 6,799,026.74 இற்காக அனுமதி வழங்கப்பட்டதுடன் இறக்குமதி அங்கீகாரம் 609 வழங்கப்பட்டுள்ளன. உரிய கால எல்லைக்குகள் மொத்த இறக்குமதி அளவு 6,232,422 என்பதுடன், மீள் ஏற்றுமதி அளவுக்கான அங்கீகாரங்கள் 1508 வழங்கப்பட்டுள்ளன.

03

தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

3.2.2 அட்டவணை : உண்மையான இறக்குமதி – ஜனவரி – டிசெம்பர் 2012

| நாடு | வகை | இறக்குமதி அளவு (Kgs) | CIF பெறுமதி (ஃ) | பெறுமதி ரூபா. |
|---|---|---|---|---|
| சீனா | பச்சை தேயிலை | 2,663,762 | 331.36 | 882,673,199 |
| | விசேட தேயிலை | 221,570 | 592.14 | 131,201,521 |
| | வெள்ளை தேயிலை | 8,485 | 797.42 | 6,766,106 |
| | கெபேன் நீக்கப்பட்ட தேயிலை | 2,000 | 733.00 | 1,466,000 |
| | உபமொத்தம் | 2,895,817 | 352.96 | 1,022,106,826 |
| இந்தியா | சிடிசி | 1,423,975 | 282.38 | 402,105,021 |
| | விசேட (கறுந்தேயிலை) | 491,544 | 551.32 | 270,996,073 |
| | பச்சை தேயிலை | 5,740 | 1,368.36 | 7,854,414 |
| | ஞநஉயககநளெ-யவநன வநய | 28,185 | 615.97 | 17,360,999 |
| | வெள்ளை தேயிலை | 40 | 7,386.00 | 295,440 |
| | பொதியிடப்பட்ட கறுற்தேயிலை/ சிடிசி | 5,936 | 471.50 | 2,798,824 |
| | உபமொத்தம் | 1,955,420 | 358.70 | 701,410,771 |
| கென்யா | சிடிச | 1,230,624 | 348.61 | 429,012,323 |
| | புசநநெ வநய / ஊவுஊ | 3,540 | 494.00 | 1,748,760 |
| | கெபேன் நீக்கப்பட்ட தேயிலை | 3,540 | 9,191.10 | 32,536,494 |
| | உபமொத்தம் | 1,237,704 | 374.32 | 463,297,577 |
| இந்தோனேசியா | சிடிச | 27,800 | 328.12 | 9,121,728 |
| | உபமொத்தம் | 27,800 | 328.12 | 9,121,728 |
| ஜப்பான் | பச்சை தேயிலை | 220 | 7,252.23 | 1,595,491 |
| | உபமொத்தம் | 220 | 7,252.23 | 1,595,491 |
| நேபாளம் | விசேட தேயிலை | 1,500 | 841.86 | 1,262,790 |
| | உபமொத்தம் | 1,500 | 841.86 | 1,262,790 |
| வியட்நாம் | பச்சை தேயிலை | 104,036 | 203.76 | 21,198,599 |
| | உபமொத்தம் | 104,036 | 203.76 | 21,198,599 |
| ஜேர்மன் | விசேட தேயிலை | 1,775 | 1,321.03 | 2,344,823 |
| | உபமொத்தம் | 1,775 | 1,321.03 | 2,344,823 |
| ஆஜர்டீனா | கெபேன் நீக்கப்பட்ட தேயிலை | 8,000 | 814.00 | 6,512,000 |
| | உபமொத்தம் | 8,000 | 814.00 | 6,512,000 |
| தாய்வான் | விசேட | 150 | 9,945.00 | 1,491,750 |
| | உபமொத்தம் | 150 | 9,945.00 | 1,491,750 |
| முழு மொத்தம் | | 6,232,422 | 357.86 | 2,230,342,354 |

03

தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

## 3.2.4 குறைந்தபட்ச தரச் சான்றிதழ் ISO 3720 பேணல்

சகல தேயிலை (ISO 3720 ) அங்கீகரிக்கப்பட்ட பிரிவுகளுக்குரியதா என்பது தொடர்பில் உறுதிப்படுத்தும் வகையில் சகல வழங்கப்பட்ட தேயிலை மாதிரிகள் மற்றும் தேயிலைக் கைத்தொழிற்சாலைகளினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மாதரி, இறக்குமதியின் பின்னர் பெற்றுக் கொண்ட தேயிலை வகை மற்றும் கப்பலேற்றுவதற்கு முன்னரான மாதிரி, திடீரென ஏற்றுமதியின் போது பரிசோதனைக்கு உட்படுத்தல், கலக்கப்பட்டதன் பின்னர் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் செயற்பாடுகளுக்குப் பொருத்தமானதா என்பது குறித்து கண்டறிவது தொடர்பில் எதுவித பாதிப்புக்களும் இல்லை என்பதை உறுதிப்படுத்தும் வகையிலும் இலங்கை தேயிலை சபையினால் நியமிக்கப்பட்ட சுவை பார்ப்போரின் நிபுணத்துவ சபையினால் இது முன்னெடுக்கப்படுகிறது.

3.2.3 அட்டவணை : அவ்வவ் மாதிரிகளில் வெளிவந்த குறைபாட்டுச் சந்தர்ப்பங்களில் எண்ணிக்கை

| மாதிரிகள் சமர்ப்பிக்கப்பட்ட முறைகள் | நீக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை | ஐஎஸ்ஓ மட்டத்தைவிட கீழ் மட்டத்திலுள்ள சந்தர்ப்பங்கள் மற்றும் நுண்ணுயிரியல் கொண்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஏலவிற்பனைக்கு முன்னர் | 614 | 68 |
| ஏலவிற்பனைக்கு முன்னர் | - | - |
| கப்பலேற்றுவதற்கு முன்னர் | 4915 | 15 |

## 3.2.5 தேயிலையின் தன்மையில் மாற்றங்கள் காணப்படுவதனால் பயன்பாட்டிற்குப் பொருத்தமற்ற நிலைமை

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் ஏலவிற்பனைக்கு முன்னர் தேயிலை கிலோ கிராம் 15525 உம் கப்பலேற்றுவதற்கு முன்னர் 19300 உம் ஏனைய மட்டங்களில் 33827 கிலோ கிராமும் பயன்பாட்டிற்குப் பொருத்தமற்றது என்பதனால் அத்தேயிலை வகைகளின் தன்மையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

## 3.2.6 சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பான செயற்சாதனைகள் (இந்திய - இலங்கை / பாகிஸ்தான் - இலங்கை )

இலங்கை இந்திய வர்த்தக உடன்படிக்கையின் கீழ் 15,000,000 கிலோ கிராமிற்காக அங்கீகாரம் வழங்ககப்பட்டதுடன் 2012ஆம் அண்டில் அதன் அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டது 231,435.80 கிலோ கிராம் ஆகும்.

பாகிஸ்தான் - இலங்கை வர்த்தக உடன்படிக்கையின் கீழ் தேயிலை கிலோ கிராம். 10,000,000 இற்காக அனுமதி வழங்கப்பட்டதுடன், 2012ஆம் ஆண்டில் இதன் அளவில் ஏற்றுமதி செய்யப்பட்ட 45,816.00 கிலோ கிராமாகும்.

| சுதந்திர வர்த்தக உடன்படிக்கை | வருடத்திற்கு கோட்டா கிலோ கிராம். | மோத்த ஏற்றுமதி கிலோ கிராம். |
|---|---|---|
| இந்திய - இலங்கை | 15,000,000 | 231,435.84 |
| பாகிஸ்தான்- இலங்கை | 10,000,000 | 45,816.00 |

## 3.2.7 தேயிலையை மீளப் பெற்றுக் கொள்ளல்.

வெளிநாட்டுக் கொள்வனவாளர்களினால் பொறுப்பேற்காத தேயிலை தொகை இருப்பின், அத்தேயிலைத் தொகை இலங்கை தேயிலை சபையின் அங்கீகாரத்தின் கீழ் உள்நாட்டு ஏற்றுமதியாளர்களினால் மீளப் பெற்றுக் கொள்ளவேண்டும். 2012ஆம் ஆண்டில் இலங்கை தேயிலை சபை தேயிலை கிலோ கிராம் 307,931.74 அளவு மீளப் பெற்றுக் கொள்வதற்காக அதிகாரம் வழங்கப்பட்டது.




*Seminar session in parallel to XIAMEN- China*



*Hong Kong International Tea Fair*

# 3.3 தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு

03

## 3.3.1 பிரிவின் பிரதான நோக்கம் / செயற்பாடுகள்.

தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

கீழே கூறப்பட்டுள்ள விரிவான பிரிவின் கீழ் இலங்கை தேயிலை சபையினால் உள்நாட்டைப் போன்று வெளிநாட்டு சந்தையில் இலங்கை தேயிலை ஊக்குவிப்பு வேலைத் திட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பில் தேயிலை ஊக்குவிப்புப் பிரிவுக்குப் பொறுப்புக்கள் காணப்படுகின்றன.

1. சர்வதேச உணவு மற்றும் பான வகைகள் தொடர்பான வர்த்தக விற்பனை கூடங்கள் மற்றும் கண்காட்சியில் பங்கேற்றல்.
2. இலங்கை தேயிலை தொடர்பாக உள்நாட்டு ஊக்குவிப்புப் பணிகளை மேற்கொள்ளல்.
3. வகைப்படுத்தப்பட்ட தேயிலை ஊக்குவிப்புப் பணி களை மேற்கொள்ளல்.
4. தேயிலை ஊக்குவிப்புப் பிரிவுக்காக கொள்கைகளை வகுப்பது தொடர்பில் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுக்கு உதவுதல்.
5. தேயிலை நுகரும் சகல நாடுகள் தொடர்பிலும் வியூக சந்தைகளில் பக்கத்தோற்றங்களை வகுத்தலும், அவற்றை விரிவுபடுத்தலும்.
6. தேயிலை சந்தைக்காக ஏனைய போட்டியாளர்களின் செயற்பாடுகள் தொடர்பில் பகுப்பாய்வுகளை மேற்கொள்ளல்.
7. சுங்க இலச்சிணையைப் பதிவு செய்தல் மற்றும் அதனை மேற்பார்வை செய்தல்.
8. இலங்கை தேயிலை மற்றும் ஏனைய தேயிலை செய்கைகளின் வலய, பெயர் இலச்சிணை கோளமய அறிமுகமாகக் கருதி பாதுகாத்தல்.
9. ஓசோன் படலத்திற்குப் பொருத்தமானவாறு சுத்தமான இலங்கைத் தேயிலைப் பதிவு செய்தல் மற்றும் தனியார் பிரிவின் பொதியிடலாளர்களுக்கு அதனைப் பயன்படுத்துவதற்காக அதிகாரத்தை வழங்குதல்.
10. உள்நாட்டு தேயிலை ஊக்குவிப்பு

03

தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

## 3.3.2 பிரதான வெற்றி

2012 ஆம் ஆண்டில் வர்த்தக கருமபீடங்களைத் தாபித்தல், புதிய இணையத்தளத்தை மீளத் தாபித்தல், தேயிலை மத்திய நிலையத்திற்கான யோசனைகளைப் பூரணப்படுத்தல், இரு வருட வியூக வர்த்தகத் திட்டமிடலைப் பூர்த்தி செய்தல் மற்றும் தேயிலை ஊக்குவிப்புச் செயற்பாடுகளுக்காக அதன் உயரிய இலக்கு கொண்ட 25 சந்தைகளை இனங்காண்பது விசேட வெற்றிகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஊக்குவிப்புப் பிரிவுக்கு முடிந்துள்ளது. மேலும் ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக நிலையத்தின் ஊடாக புதிய துறைகளுக்காக மூன்றாண்டு கால வருடாந்த விளக்கமான வரவு செலவுத் திட்டத்தின் மூலமும் நிதி ஒதுக்கப்பட்டது. இலங்கை தேயிலை சபையினால் கொழும்பில் நடத்தப்பட்ட சர்வதேச தேயிலை உற்பத்தியாளர்களின் கூட்டமைப்பினால் அமுல்படுத்தப்பட்ட ஜனவரி 30 ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி 01ஆம் திகதி வரை கொழும்பில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் உணவு விவசாய அமைப்பின் (FAO) தேயிலை தொடர்பான சர்வதேச இராச்சியக் குழுவின் (IGG) இற்காக அனுசரணைகள் வழங்கப்பட்டன.

## 3.3.3 வெளிநாட்டு தேயிலை ஊக்குவிப்பு அலுவலகம் மற்றும் சந்தை தழுவல்கள்.

ஐக்கிய அரபு எமீர் இரதாச்சியம் மற்றும் ரஷ்யாவின் இலங்கை இராஜதந்திர தூதுக் குழு சபையுடன் இணைந்த வெளிநாட்டு தேயிலை ஊக்குவிப்பு தொடர்பான வலயத்தின் இரு பிரிவுகள் இலங்கை தேயிலை சபையினால் தற்போது முன்னெடுக்கப்படுகின்றது. ஐக்கிய அரபு எமீர் இராச்சியத்தில் தாபிக்கப்பட்டுள்ள அலுவலகம் மத்திய கிழக்கு /வளைகுடா/ வட ஆபிரிக்கா வலயத்தில் தேயிலை ஊக்குவிப்புப் பணிகள் தொடர்பாக பொறுப்புக்கள் காணப்படுவதுடன், ரஷ்யாவில் அமைந்துள்ள அலுவலகம் ரஷ்ய கூட்டரசு சுதந்திர இராச்சியங்களின் அமைப்புடன் இணைந்து தேயிலை ஊக்குவிப்புப் பணிகள் தொடர்பாக பொறுப்புக்கள் காணப்படுகின்றன. மேலும், உரிய வர்த்தக உத்தியோகத்தர்கள், இலங்கை இராஜதந்திர தூதுக் குழுவின் ஒத்துழைப்புடன் ஏனைய சந்தைகளில் தேயிலை ஊக்குவிப்புப் பணிகளை மேற்கொள்வது தொடர்பிலும் கொழும்பு தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு பொறுப்பாகவுள்ளது.

## 3.3.4 ஊக்குவிப்பு மற்றும் விற்பனைக் குழு (PMC)

கைத்தொழில் மற்றும் வர்த்தகத்தின் முன்னிலை மற்றும் எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்றவாறு ஊக்குவிப்பபு மற்றும் விற்பனைக் குழுவினை மீளத் தாபிக்கும் பணிகள் கௌரவ பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்டது. எதிர்வரும் மூன்றாண்டுகளுக்குள் சகல ஏற்றுமதிகள் மீதும் ஒரு கிலோ கிராமிற்காக ரூபா 3.50 உம் புதிய ஊக்குவிப்பு மற்றும் விற்பனை வரியினை அறவிடுவதன் மூலம் இல்நகை தேயிலையினை கோளமயப் பிரச்சாரத்திற்காக ரூபா 6.2 பில்லியன் (50 மில்லியன் அமெரிக்க டொலர்) நிதி உழைக்க எதிர்பார்க்கப்படுகின்றது. 2013 ஆம் ஆண்டில் இறுதிப் பகுதியில் இலங்கை தேயிலை சபையின் தேயிலை ஊக்குவிப்புப் பிரிவின் மேற்பார்வையின் கீழ் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள வியூக விற்பனைத் திட்டங்களை வகுப்பது தொடர்பிலான பொறுப்புக்கள் புதிய ஊக்குவிப்பு மற்றும் விற்பனைக் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

## 3.3.5 வர்த்தக கண்காட்சிக்கான பங்கேற்பு

தூய இலங்கைத் தேயிலை வர்த்தக நாமத்தினை ஊக்குவிப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதான தேயிலை இறக்குமதி செய்யும் நாடுகளில் நடாத்தப்படும் சர்வதேச உணவு மற்றும் பான வகைகள் தொடர்பிலான கண்காட்சிகளில் பங்கேற்பதற்காக தேயிலை ஏற்றுமதி செய்யப்படும் கம்பனிகளுக்கு இலங்கை தேயிலை சபையினால் உதவிகள் வழங்கப்படுகின்றன. 2012ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கண்காட்சிகளில் இலங்கை தேயிலை சபை பங்கேற்றதன் மூலம் சுத்தமான இலங்கை தேயிலை வகைகளை ஏற்றுமதி செகவய்யும் அளவு மற்றும் பெறுமதியினை அதிகரிக்க தேயிலை கம்பனிகளுக்கு முடிந்தன.

1. புரெஸ்பே – ரஷ்யா
2. 'கல் பூட் - 2012 – ஐக்கிய அரபு எமீர் இராச்சியம்
3. ஏஸ்ஏ.சீசி – குன்மீன் - சீனா
4. கியமென் சர்வதேச தேயிலை விற்பனைக் கூடம் - சீனா
5. எப்எச்சி, ஷென்ஹைய் - சீனா
6. சர்வதேச தேயிலை பெயார் - ஹொங்கொங்
7. பயின் புட் - அவுஸ்திரேலியா
8. புரொக்ஸ் - ஜப்பான்
9. கோரேகா 2012 - லெபனான்
10. சியல் சீனா – சீனா
11. புட் தாய்ப்பே – தாய்வான்
12. சிபஸ் - இத்தாலி
13. சியெல் மொன்றியல் - கனடா
14. வர்ல்ட் டி எக்ஸ்போட் - ஐக்கிய அரபு எமீர் இராச்சியம்
15. சியேல் பிரேசிலய – பிரேசில்
16. ரிகா புட் - லெட்டியா
17. சியெல் - ஜப்பான்






*SLTB booth at the XIAMEN- China*




*SLTB booth at the SIAL- France*

03

தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

## 3.3.6 இலங்கை தேயிலையை ஓரேயொரு உள்நாட்டு தேயிலை வகையாக உலகெங்கும் ஊக்குவித்தல்.

இலங்கைத் தேயிலையை ஓரேயொரு உள்நாட்டு தேயிலை வகையாக உலகெங்கும் ஊக்குவிக்கும் வகையில் ஏனைய வகைகளைக் கொண்ட தேயிலைக்கு இணைவாக இலங்கை தேயிலையை உலகெங்கும் பிரச்சாரம் செய்யக்கூடிய வர்த்தகமாகும். வெளிநாட்டு தேயிலை ஊக்குவிப்புப் பிரிவின் மூலம் வெளிநாடுகளில் இலங்கை தூது சபைகளில் வர்த்தகப் பிரிவுகளின் ஊடாக இலங்கை தேயிலை சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை தேயிலையினை உலகெங்கும் ஊக்குவிக்கும் வர்த்தகம் வெளிநாட்டுச் சந்தையில் பிரதானமாக அமுல்படுத்தப்பட்டுள்ளது. ஊடகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் பிரச்சாரங்கள், வெளி வர்த்தகப் பிரசாரம், தேநீர் சேவைகள், தேயிலை செயலமர்வு, கருத்தரங்கு மற்றும் ஏனைய பொது இணைப்புப் பணிகள் இலங்கை தேயிலையினை ஓரேயொரு உள்நாட்டு தேயிலை வகையாக உலகெங்கும் ஊக்குவிப்பது தொடர்பில் இலங்கை தேயிலை சபையினால் முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் இதன் முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாகும். 2012ஆம் ஆண்டில் இலங்கை தேயிலையினை ஓரேயொரு உள்நாட்டு தேயிலை வகையாக உலகெங்கும் ஊக்குவிக்க மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பிலான சுருக்கம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. இச்செயற்பாடுகள் பிரதானமாக எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தைவிட குறைவாக மேற்கொள்ளப்படும் தேயிலை சந்தை ஊக்குவிப்புப் பணிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

I. பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சங்கம் / யூ.பி.ஏ.எஸ்.ஐ. இஸ்போட் பெஸ்டிவர் - இந்தியா
II. எக்ஸ்போ 2012 கண்காட்சியின் இலங்கை தினத்தில் மேற்கொள்ளப்பட்ட தேயிலை ஊக்குவிப்பு – சென் மொனிகா, கலிபோனியா, ஐக்கிய அரபு எமீர் இராச்சியம்
III. ஆர்ட் ஒப் வெல் பீன் (சிறந்த வாழ்க்கை நடைமுறைகள்) கண்காட்சியில் தேயிலை ஊக்குவிப்பு ஒடாவா – கனடா – 2012 ஆகஸ்ட் 22ஆம் திகதி
IV. ஒடாவா டி பெஸ்டிவர் - கனடா – டிசெம்பர் 1ஆம் திகதி

## 3.3.7 ஏனைய பான வகைகளுக்கு இணைவாக தேயிலை ஊக்குவிப்புக்களை மேற்கொள்ளல்.

ஏனைய பான வகைகளுக்கு இணைவாக “இலங்கை தேயிலை” உலகெங்கும் ஊக்குவிக்கும் நோக்குடன் இல்ஙகை தேயிலை சபையினால் பல்வேறுபட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இலங்கை தேயிலை சபை எப்.ஏ.ஓ அமைப்பின் தேயிலை தொடர்பான சர்வதேச குழு, ஐக்கிய இராச்சியத்தின் தேயிலை கவுன்சில், ஐக்கிய அரபு எமீர் இராச்சியத்தின் தேயிலை சங்கம், ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச தேயிலை குழு மற்றும் ஜப்பான் தேயிலை சங்கமும் அங்கத்துவம் பெற்றுள்ளது. இவ்வமைப்பினால் ஏனைய பான வகைகளுக்கு இணைவாக தேயிலை ஊக்குவிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. நுகர்வோருக்கு தேயிலை தொடர்பிலான அறிவினை வழங்கும் நோக்குடன் பொதுமக்கள் இணைப்பு பணிகள் மூலமும் தேயிலை சுகாதாரத்திற்கு பொருத்தமானது என்பது தொடர்பில் பிரதானமாக விளக்கமூட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2012ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளில் ஏனைய பான வகைகளுக்கு இணைவாக தேயிலை ஊக்குவிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவது தேயிலை பிரச்சாரத்திற்காக இலங்கை தேயிலை சபையினால் தேயிலை சங்கங்களுக்கு மற்றும் தேயிலை கவுன்சில்களுக்கு தேவையான நிதியுதவிகளை வழங்குகின்றது.

## 3.3.8. சந்தை நாமத்தைப் பாதுகாத்தல்.

சிங்க இலச்சிணை வர்த்தக நாமத்தைப் பதிவு செய்தல்.

இலங்கை தேயிலை சிங்க இலச்சிணையின் உரிமை இலங்கை தேயிலை சபைக்குரியது. தேயிலை ஊக்குவிப்புப் பிரிவினால் இலங்கையில் மற்றும் வெளிநாடுகளில் இலங்கை தேயிலை சிங்க இலச்சிணையைப் பதிவு செய்தல்/ புதுப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2012ஆம் அண்டு இறுதியில் இலங்கை தேயிலை சிங்க இலச்சிணை 98 நாடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன 100% இலங்கை தேயிலையில் அடங்குவதாக உயரிய மட்டத் தரத்திலான இலங்கையில் பொதியிடப்பட்ட ஐஎஸ்ஓ 3720 தரத்திற்கு அமைவான வர்த்தக நாம இடப்பட்டுள்ளதைப் போன்று பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை உற்பத்தி (தேயிலைப் பொதி மற்றும் தேயிலை பக்கட் ) இற்காக மாத்திரம் சிங்க இலச்சிணையைப் பயன்படுத்துவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு மற்றும் வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூது சபைகளின் உதவியுடன் தேயிலை ஊக்குவிப்புப் பிரிவினால் சிங்க இலச்சிணையைப் பயன்படுத்தும் அதிகாரத்தை வழங்கும் யோசனைத் திட்டம் மேற்பார்வை செய்யப்படுகின்றது. இலங்கை தேயிலை இலச்சிணையை போலியாகப் பயன்படுத்துதல் மற்றும் புதிய சட்டக்கோவைகளை மீறுவதைப் போன்று ஏமாற்றல்களைத் தடுக்கும் நோக்கும் இலங்கை தேயிலை சபையினால் இலங்கை, ஐக்கிய அரலபு எமீர் இராச்சியம், ஜோர்தான், சிரியா, ஈரான், ஈராக் மற்றும் துருக்கி ஆகிய நாடுகளிலுள்ள உள்நாட்டுப் பத்திரிகைகளில் சிங்க இலச்சிணையைப் பயன்படுத்துவது தொடர்பிலான எச்சரிக்கை அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## 3.3.9. இலங்கை தேயிலைப் பதிவு செய்தல், பிராந்திய பெயர் மற்றும் இலச்சிணை

உலக வரத்தக அமைப்பின் “ரிப்ஸ்” உடன்படிக்கை அமைப்புகளுக்கு அமைய “இலங்கை தேயிலை” மற்றும் ஏனைய விவசாய 7 கால நிலைய வலயங்களில் தேயிலை (நுவரெலியா, ஊவா, தம்புள்ள, உடபுஸ்சலாவ, கண்டி, ருஹுனு மற்றும் சப்ரகமுவ) கோளமய அறிமுகத்தைப் பாதுகாப்பதற்காக தேவையான சட்டங்கள் மற்றும் கோவைகள் இலங்கை தேயிலை சபையினால் வகுக்கப்பட்டன. பிரதானமாக வெளிநாட்டு ஒப்பந்தம் பெற்ற பொதியிடலாளர்களினால் “இலங்கை தேயிலை “ மற்றும் ஏனைய வலயங்களில் தேயிலை செய்கை நாமங்களை போலி அடிப்படையில் பயன்படுத்துவது தடுக்கவும் இது உதவியாக அமைகின்றது. “இலங்கை தேயிலை” வலய பிராந்திய நாமத்தைப் போன்று இலச்சிணையினை உறுதிப்படுத்தும் அடையாளமாகவும் உள்நாட்டு ரீதியில் பதிவு செய்யும் பணிகள் இவ்வாண்டு பூரணப்படுத்தப்பட்டது.

கோளமய அறிமுகத்தைப் போன்று உறுதிப்படுத்தும் அடையாளமாக “இலங்கை தேயிலை” மற்றும் ஏனைய விவசாய – 7 காலநிலை வலயங்களில் சர்வதேச ரீதியில் பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்கும் பணிகள் 2012ஆம் ஆண்டில் குறிப்பிடப்பட்ட நாடுகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கை தேயிலை : ஜோர்தான் மற்றும் லெபனான்
வலய தேயிலை நாமம / இலச்சிணை : ஐக்கிய எமீர் .இராச்சியம் மற்றும் ஜப்பான்

## 3.3.10. ஓசோனுக்குப் பொருத்தமான சுத்தமான இலங்கை தேயிலையினை பதிவு செய்தல்.

இலங்கையில் ஓசோனுக்குப் பொருத்தமான தேயிலைனை ஊக்குவிக்கும் நோக்குடன் உறுதிப்படுத்தும் அடையாளமாக சுத்தமான ஓசோனுக்குப் பொருத்தமான இலங்கை தேயிலை இலச்சிணை இலங்கை தேயிலை சபையினால் பதிவு செய்யப்படுகின்றது. மென்றில் சாசனத்தின் கீழ் ஏற்றுமதி செயற்பாடுகளின் போது மற்றும் கப்பலேற்றுவதற்கு முன்னர் மிதைன் புரோமைட் இடப்படுவதை தடுப்பதற்காக இரு செயற்றிட்டங்கள் இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுள்ளன. மிதைல் புரோமைட் பயன்பாடுகளின்றி சூழலுக்கு உகந்த தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் இலங்கை தேயிலை செய்கையினை மேற்கொள்வதற்காக தேயிலை கைத்தொழில் பிரிவின் செயற்றிட்டங்கள் 2002ஆம் ஆண்டில் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டதுடன், மொன்றியல் சாசனம் அமுல்படுத்தப்படுவது விருதினை வெற்றெடுப்பதற்கு 2007ஆம் ஆண்டு இலங்கைக்கு முடிந்தது. இதற்கமைய, உலக தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளில் ஓசோனுக்குப் பொருத்தமான தேயிலை உற்பத்தி செய்யும் முதலாவது தேசம் இலங்கையாக மாற்றம் பெற்றுள்ளது. மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டுகளில் இலங்கை தேயிலை சபையினால் வர்த்தக நாமங்கள் 21ஆக இலச்சிணைகளைப் பயன்படுத்துவதற்கு 18 தேயிலை ஏற்றுமதியாளர்களுக்கு அதிகாரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. அத்துடன் சிங்க இலச்சிணை கொண்ட சகல தேயிலை பொதிகளுக்கும் சுத்தமான ஓசோனுக்குப் பொருத்தமான இலஙகை தேயிலை இலச்சிணைகளை இடுவதற்கு இலங்கை தேயிலை சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

ஓசோனுக்கு உகந்த சுத்தமான இலங்கை தேயிலை இலச்சிணை சர்வதேச ரீதியில் பதிவதற்காக விண்ணப்பிக்கும்செயற்பாடுகள் 2011ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், இது தொடர்பில் 30 நாடுகளை இனங்காண்பதற்கு இலங்கைக்கு முடிந்தது. முதலாவது கட்டத்தின் கீழ் ஐரோப்பிய சமூகம், ஜப்பான். ஜோர்தான் ஆகிய நாடுகள் பதிவு செய்வதனைப் பூர்த்தி செய்ததுடன், ஏனைய 18 நாடுகளில் பதிவு செய்யும் பணிகள் 2012ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன.

## 3.3.11. அமைச்சு மட்டத்தில் மேற்கொள்ளப்படும் இரு தரப்பு பேச்சுவார்த்தைகள்.

2012 மே மாதத்தில் கௌர அமைச்சர் மகிந்த சமசிங்க அவர்களின் தலைமையில் தேயிலை தொடர்பிலான தூதுக் குழுவினர் அவுஸ்திரேலியா (சிட்னி மற்றும் மெல்பேன் நகரங்கள்) சுற்றுலா மேற்கொண்டனர்.

## 3.3.12. சர்வதேச அமைப்புகளில் பங்கேற்றல்.

1. உணவு மற்றும் விவசாய அமைப்பின் தேயிலை தொடர்பான சர்வதேச இராச்சியக் குழுவின் (IGG) 20 ஆவது அமர்வு – ஜனவரி 30ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி 01வரை கொழும்பில் நடத்தப்பட்டது,
2. கொழும்பு சர்வதேச தேயிலை மாநாடு 2012 பெப்ரவரி 1 ஆம் திகதி தொடக்கம் 03ஆம் திகதி வரை நடத்தப்பட்டது.
3. தேயிலை தொடர்பான FAO/ IGG சர்வதேச கருத்தரங்கு மாநாடு 2012 செப்டம்பர் மாதம் 17 – 18ஆம் திகதிகளில் அமெரிக்க ஐக்கிய இராச்சியத்தில் இடம்பெற்றது.
4. தேயிலை சுகாதார நலன் தொடர்பான 5ஆவது சர்வதேச சம்மேளனம் 2012 செப்டம்பர் மாதம் 19ஆம் திகதி அமெரிக்க ஐக்கிய இராச்சியத்தில் இடம்பெற்றது.

## 3.3.13. விசேட தேயிலை வளங்கள்

இத்தாலியில் நிலநடுக்கத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்களுக்காக 2012 ஜூன் மாதத்தில் விசேட தேயிலை விநியோகங்கள் மேற்கொள்ளப்பட்டன. தேயிலை ஏற்றுமதி மூலம் மேற்கொள்ளப்படும் நன்கொடையாக பக்கட் மற்றும் பொதிகளைக் கொண்ட 1158 கிலோ கிராம் இலங்கை தேயிலை சபையினால் அவர்களுக்காக வழங்கப்பட்டது.

# 03

தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்







*Inauguration of the 20th session of the IGG on tea*

03

தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்




*Inauguration of the 20th session of the IGG on tea*



*Inauguration of the 20th session of the IGG on tea*

## 3.3.14. வெளிநாட்டு தூதுக் குழு

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் இல்ஙகை தேயிலை சபையினால் கீழ் குறிப்பிடப்பட்ட தூதுக் குழுவினர்களுக்கு அனுசரணை மற்றும் வசதிகள் வழங்கப்பட்டதுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர பிரதிலாபங்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் வர்த்தகத் தொடர்புகளை கட்டியெழுப்புதல், கருத்துக்களைப் பரிமாறுதல், அறிவினைப் பகிர்ந்து கொள்ளல் ஆகிய நோக்கங்களை அமுல்படுத்துவதற்காக இலங்கை தேயிலைக் கைத்தொழில்களுடன் தொடர்புபட்ட தரப்பினர்களுடன் வர்த்தக ரீதியிலான கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்படுகின்றன.

I. கூ.என் சான், நென்ஜிட் மற்றும் குவென் டொக் பிரதேசங்களில் இருந்து வருகை தந்த 21 அங்கத்தவர்களைக் கொண்ட சீன தூதுக் குழுவினர் 2012 ஏப்ரல் மாதத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர்.

II. தாய்லாந்து ஹொங்கொக் வர்த்தக அபிவிருத்தி கவுன்சிலின் இரண்டு அங்கத்தவர்களைக் கொண்ட தூதுக் குழுவினர் 2012 மார்ச் மாதத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர்.

III. டொசிகிகோரி அவர்களின் தலைமையில் 12 அங்கத்தவர்களைக் கொண்ட ஜப்பான் தூதுக் குழுவினர் 2012ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுனர்.

IV. 7 அங்கத்தவர்களை கொண்ட ஜப்பான் ஒட்டோவோ கொப்ரோஷன் தூதுக் குழுவினர் 2012 மே மாதத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர்.

V. 3 அங்கத்தவர்களைக் கொண்ட எகிப்து கைரோ நகரில் வர்த்தக தூ துக் குழுவினர் 2012 மார்ச் 27 – 30ஆம் திகதி வரை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

## 3.3.15. ஊக்குவிப்பு / தகவல்களை வழங்குவதற்கான வெளிப்பாடுகள்

கீழ் குறிப்பிடப்பட்ட ஊக்குவிப்பு – தகவல்களை வழங்குவதற்கான வெளிப்பாடுகள் ஆண்டுக்குள் வழங்கப்படுகின்றன.

i. இரு மாத தகவல் ஆவணம் (06).

ii. காலாண்டுக்காக வழங்கப்படும் தேயிலை சந்தை மீளாய்வு -2012 (04).

iii. இலங்கை தேயிலை திரைப்படம் - தேயிலை ஊக்குவிப்பு பணி களைப் போன்று விற்பனை பணிகளிலும் பயன்படுத்துவதினை நோக்காகக் கொண்டு “செரண்டிப;” என இலங்கை தேயிலை மற்றும் CTTA மூலம் தயாரிக்கப்பட்ட தேயிலை திரைப்படத்தின் 1000 பிரதிகளை பிரதியிடுவதை தடை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இறுவெட்டுக்களுக்கு பிரதியிடப்பட்டன. இந்த இறுவெட்டுக்கள் சகல வெளிநாடுகளிலும் உள்ள இலங்கை தூதுக் குழுவினருக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.



*SLTB quarterly tea market review*

## 3.3.16. உள்நாட்டு தேயிலை ஊக்குவிப்பு

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள உள்நாட்டு வர்த்தக கண்காட்சிகளில் இலங்கை தேயிலை சபை பங்கேற்றது. தேநீர் சேவை, இலங்கை தேயிலை சபையின் பொதியிடப்பட்ட அளவின் விற்பனை, ஊக்குவிப்புப் பொருட்களை விநியோகிக்கும் பணிகள் இலங்கை தேயிலை சபையின் கண்காட்சிக் கூடங்களில் காட்சிக்கு உட்படுத்தப்பட்டன.

- இலங்கை எக்ஸ்போ 2012 – பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்ற கண்காட்சி மற்றும் வர்த்தக விற்பனைக் கூடங்கள் (2012 மார்ச் 28 ஆம் தகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை )
- தேசத்திற்கு மகுடம் 2012 ஓயாமடுவ அனுராதபுரம் (பெப்ரவரி 4ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை)
- தென்னிலங்கை விவசாய எழுச்சி- காலி, (2012 செப்டம்பர் 12ஆம் திகதி – 19ஆம் திகதி வரை )
- ஐ.ஏ.டீ.எஸ். குளோபல் ஏவியோஷன் கியூமென் கொபிடல் சமிட் 2012 (2012 நவம்பர் 13 – 14 வரை )



*Ceylon tea film*






*Opening ceramony of the Sri Lanka Tea Board / Re-furbished Sales Centre*

## 3.3.17. தேயிலை விற்பனை மத்திய நிலையம்

இலங்கை தேயிலை சபையினால் மீள்கட்டமைக்கப்பட்ட விற்பனை மத்திய நிலையம் 2012 ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதி பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் கௌரவ மகிந்த சமரசிங்க அவர்களினால் வைபவ ரீதியாகத் திறக்கப்பட்டதுடன், விற்பனைக்காக முழுமையாக 17 வர்த்தக இலச்சிணையின் கீழ் தேயிலை வகைப்படுத்தப்பட்டிருந்தன. இலங்கை தேயிலை சபையினால் முகாமைத்துவத்திற்கு உட்படுத்தப்படும் இவ்விற்பனை மத்திய நிலையத்தின் ஊடாக நுகர்வோருக்கு ஒரே இடத்தில் விரிவான பரம்பலுக்குள் விரிவடைந்துள்ள உயர் “இலங்கை தேயிலை” வகைகளை தேர்ந்தெடுக்கும் சந்தரப்பம் மாத்திரமன்றி தற்போது கொள்வனவு செய்யக் கூடிய தேயிலை வகைகளின் பல்வகைத் தன்மை மற்றும் வகைகளை இனங்காண்பதற்கான விசேட சந்தர்ப்பங்களும் கிடைக்கின்றன.

இலங்கை தேயிலை சபை வளாகத்தில் அமைந்துள்ள தேயிலை விற்பனை மத்திய நிலையத்தினால் சிங்க இலச்சிணை கொண்ட இல்஡கை தேயிலை சபை பொதியிடல் பரம்பலுக்குரிய தேயிலை உற்பத்தியைப் போன்று தனியார் துறையின் 17 தேயிலைக் கம்பனிகளைத் தேர்ந்தெடுத்து தேயிலை உற்பத்திகள் விற்பனை செய்யப்படுகின்றன. 2012ஆம் ஆண்டில் முன்னைய ஆண்டுக்கு இணைவாக 1% அதிகரிப்பினைக் காண்பித்து மத்திய நிலையத்தின் தேயிலை விற்பனை மூலம் 30.8 மில்லியன் ருபா வருமானம் பெறப்பட்டது. இலங்கை தேயிலை சபையின் தேயிலை பொதியிட்டு விற்பனை செய்வதன் மூலம் 12.1மில்லியன் ருபா வருமானம் கிடைக்கப் பெற்றதுடன், தனியார் துறையில் தேயிலை வர்த்தகப் பொருள் விற்பனை மூலம் 18.7 ரூபா உழைக்க முடிந்துள்ளது.

## 3.3.18. மிகைத் தேயிலை விநியோகம்

“இலங்கை தேயிலை” ஊக்குவிப்பதனை நோக்காகக் கொண்டு தேயிலை சபை 3 மில்லியன் ருபா பெறுமதியான தேயிலை கீழே குறிப்பிடப்பட்டவாறு மிகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

1. வெளிநாடுகளில் உள்ள இலங்கையின் 40 தூதுக் குழுவினருக்காக மிகைத் தேயிலை
2. தேயிலை பான சேவை மற்றும் அவற்றை சர்வதேச சந்தை விற்பனைக்காக விநியோகித்தல்.
3. பிரபுக்களுக்கு மற்றும் அதிஉயரிய உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிக்கும் நோக்குடன் தேயிலை வழங்குதல்.



*Interior of the Sri Lanka Tea Board Sales centre*

03

தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்











# 3.4. தேயிலை சுவை பரிசிப்பு அலகு

03

தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

## 3.4.1. பிரதான பணிகள் /நோக்கம்

ஐஎஸ்ஓ 3720 மற்றும் ஐஎஸ்ஓ 11287 குறைந்தபட்ச தேயிலை தரம் கொண்ட தேயிலை விற்பனை செய்யும் ஏதேனும் இடத்தில் அல்லது நடாத்தும் இடத்தை மேற்பார்வை செய்தல், வர்த்தக நாமத்தையிட்டு வாடிக்கையாளர்களுக்கு பொதியிடுவதற்காக சிங்க இலச்சிணையினை வழங்க தனியார் மற்றும் நேரடி விற்பனைப் பணிகளின் மேற்பார்வை உட்பட அவற்றை செல்லுபடியான நிலைமைக்கு மாற்றுதல்.

## 3.4.2 பிரதான வெற்றிகள்

2012 ஆம் ஆண்டுகாக 600 மேற்பட்ட சிங்க இலச்சிணை கொண்ட விண்ணப்பபடிவங்கள் வழங்கப்பட்டன.

## 3.4.3. தேயிலை சுவை பரிசிப்பாளர்களின் நிபுணத்துவ சபை

இச்சுயாதீன சபையில் இரு அங்கத்தவர்கள் அடங்குகின்றன. அவ்வாறாயின்

**திரு.சி.என்.பீ. த சில்வா**
(40 வருடங்களுக்கு மேற்பட்ட தேயிலை சுவை பரீட்சிப்பு அனுபவம் )

**திரு.டி.ஏ.ஏ.பெரேரா**
(30 வருடங்களுக்கு மேற்பட்ட தேயிலை சுவை பரீட்சிப்பு அனுபவம் )

உரிய தரப்பினர்களை பிரதிநிதித்துவப்படுத்தி கீழ் குறிப்பிடப்பட்ட சங்கங்களினால் ஒரு பிரதிநிதிகள் வீதம் சபையில் அங்கத்துவத்தை வகிக்கின்றன: –

**CTTA, CBA, CPA, SLFTSHDS, TEA, PTFOA.**

## 3.4.4. உரிய பிரிவின் மூலம் பின்பற்றப்படும் தேயிலை சுவை பரிசீப்பு முறைகள்.

ஊடல் உணர்வு ரீதியிலான பரிசோதனைகளின் போது பயன்படுத்தப்படும் பதார்த்தங்கள் தேயிலை வகைக-ளைத் தயாரிப்பதற்காக ஐஎஸ்ஓ3102 முறை இலங்கை தேயிலை சபையினால் பின்பற்றப்படுகின்றது. கறுந்தேயிலைக்காக பயன்படுத்தப்படும் சொற்றொடர்களுக்காக ஐஎஸ்ஓ 6078 சுவை பரீட்சிப்பு விபரக்கொத்து / இலங்கையின் தேயிலை உற்பத்தி தொடர்பான மொனோகிரப் - இலக்கம் 4 - இலங்கை தேயிலை உற்பத்தி

03

தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

## 3.4.5 தேயிலை சுவை பரீட்சிப்பு நிபுணத்துவ அமர்வினை நடாத்துதல்.

கீழ் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான சுயாதீன மேற்பார்வைகளை மேற்கொள்வதற்காக பிரதான திங்கள் மற்றும் வியாழன் ஆகிய தினங்களில் அதாவது வாரத்திற்கு இரு தடவை நிபுணத்துவ சபையின் சந்திப்புக்கள் இடம்பெற்றன.

- ஏலவிற்பனைக்கு முன்னர் தேயிலை
- விசேட பகுப்பாய்வுகள் மேற்கொள்ள வேண்டிய தேயிலை
- இறக்குமதிக்கு முன்னர் மாதிரி
- நேரடி விற்பனை
- புதிய ஏற்றுமதிக் கம்பனிக்காக சுவை பரிட்சிப்பு மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.

நிபுணத்துவ சபையின் தீர்மானங்களுக்குரியதான உரிய பிரிவுகளுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. (தேயிலை ஆணையாளர் பிரிவு மற்றும் பிரதி தேயிலை ஆணையாளர் (ஏற்றுமதி) பிரிவு )

## 3.4.6 சிங்க இலச்சிணை பொதியிடப்பட்ட பதிவுகள்.

தமது வர்த்தக நாமத்தையிட்ட நுகர்வோர் பொதிகளுக்கு அமைய பண்புசார் தரத்தினை குறித்துக் காட்டும் வகையில் இலங்கை தேயிலை சபைக்கு முழுமையான உரிமை கொண்டுள்ள தேயிலை இலச்சிணையினைப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் ஏற்றுமதியாளர்கள் ஏற்றுமதி செய்யும் நாடு மற்றும் சந்தைக்கமைய அவற்றை மதிப்பீடு செய்வதற்காக தமது விண்ணப்பபடிவங்களுடன் வர்த்தக நாமம் இடப்பட்ட உற்பத்திகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

சிங்க இலச்சிணை பயன்படுத்தும் உரிமையினை வழங்குவதற்காக ஒரு வகைக்காக ரூபா ,5000+(வற் வரி + தேசத்தை கட்டியெழுப்பும் வரி) மற்றும் பதிவுக் கட்டணத்தை அறவிட்டு ஒரு வருடத்திற்காக செல்லுபடியாகும் சான்றிதழ் இலங்கை தேயிலை சபையினால் வழங்கப்படுகின்றது.

சில்லறைப் பொதிகளில் சிங்க இலச்சிணைகளைப் பயன்படுத்தும் உரிமையினை வழங்குவதற்காக 2012ஆம் ஆண்டுக்காக புதிய வர்த்தகப் பொருள் - புதுப்பித்தல் மற்றும் மேலதிக பொதியிடல்கள் தொடர்பில் 601 விண்ணப்பபடிவங்கள் குறித்து கருத்திற் கொள்ளப்பட்டன.

## 3.4.7. சிங்க இலச்சிணை இடப்பட்ட பொதிகள் (உள்நாடு/ வெளிநாடு/தேயிலைசபையின் பொதி) தொடர்பான பண்புசார் தரத்தினை மேற்பார்வை செய்தல்.

கொழும்பு சொகுசு வரத்த்தக நிலையங்கள் மற்றும் சில்லறை வர்த்தக நிலையங்களில் இருந்து திடீரென பெற்றுக் கொள்ளும் மாதிரிகள் விசேடமாக சிங்க இலச்சிணை பயன்படுத்தப்படும் பொருள் வகைகள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுகின்றன. சிறந்த கீர்த்தியினைக் கொண்ட இலங்கை தேயிலை சபையுடன் நீண்ட காலமாகப் பதிவு செய்து கொண்டுள்ள குறிப்பிடத்தக்களவு வர்த்தகப் பங்குகளைக் கொண்ட பொதியிடலாளர்களுக்கு சிங்க இலச்சிணையைப் பயன்படுத்த அனு-மதி வழங்கப்பட்டுள்ளதுடன், அவர்கள் இதற்கமைய மேற்பார்வைக்கு உட்படுத்தப்படுகின்றன.

வெளிநாட:டு மேற்பார்வை முறையின் கீழ் சிங்க இலச்சிணை கொண்ட கப்பலேற்றப்படும் தேயிலை கூடுதலான அளவு (80%) கப்பலேற்றவதற்கு முன்னர் மேற்பார்வை செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் பிரதி தேயிலை ஆணையாளர் (ஏற்றுமதி) மூலம் மாதிரியாகக் கொள்ளப்படுவதுடன் கப்பலேற்றுவதற்கு முன்னர் மேற்கொள்ளப்படும் மேற்பார்வைப் பணிகளுக்காக இம்மாதிரித் தேயிலை சுவை பரீட்சிப்புப் பிரிவுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது. அத்துடன், தேயிலை சபையின் வெளிநாட்டு அலுவலகங்களின் மூலம் மற்றும் இலங்கை தூதரக அலுவலகங்களில் சிரேஷ்ட வர்த்தக உத்தியோகத்தர்களினால் மதிப்பீடுகள் மற்றும் அறிக்கைப்படுத்தல்களுக்காக வெளிநாட்டு சந்தையில் சிங்க இலச்சிணையைப் பயன்படுத்தி விற்பனை செய்யப்படும் பொதிகள் நாளாந்தம் சமர்ப்பிக்கப்படுகின்றன.

சிங்க இலச்சினை கொண்ட இலங்கை தேயிலை சபையின் பொதியிடல் பிரதானமாக எமது சந்தையில் விற்பனை செய்யப்படுவதுடன், வெளிநாட்டு தூதரக அலுவலகங்கள், தேயிலை சபையின் வெளிநாட்டு அலுவலகங்கள் மற்றும் வர்த்தகக் கண்காட்சிகளுக்கு அவை அனுப்பப்படுகின்றன. தேயிலை உத்தியோகபூர்வ பொதியிடலாளர்களினால் தேயிலை சுவை பரிசீப்புப் பிரிவின் அங்கீகாரத்துடன் ஏலவிற்பனை மூலம் தனியார் விற்பனை முறையின் ஊடாக இலங்கை தேயிலை சபைக்காக தேயிலை தேர்ந்தெடுப்பு மற்றும் கொள்வனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தேயிலை சுவை பரீசிப்புப் பிரிவினால் இறுதியாகப் பொதியிடுவதற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட தேயிலை மாதிரி , கலப்பு மேற்கொள்ளப்பட்ட தேயிலை உற்பத்திகளின் சுபை பரீசிப்பு மற்றும் அங்கீகாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

03

தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

எப்எப்சிடி (500 கிராம்),
பிளேன்டென்ஸ் பன்சி (100 கிராம் மற்றும் 250 கிராம்),
மிஸ்ட் கில்ஸ் (200 கிராம்),
ரோயல் சிலோன் (உலோக கோன் கிராம் - 200),
பெம்லி பெக் (500 கிராம் மற்றும் 250 கிராம்),
பொலி பெக் (250 கிராம்),
பச்சை தேயிலை (100 கிராம்),
டி பிளாக்கர் (250 கிராம் மற்றும் 100 கிராம்),
லக்சரி பிரேன் (125 கிராம்),
லக்சரி பிரேன் கடதாசிப் பெட்டி பொதியிடல் (125 கிராம்)
கெனைசியர் (250 கிராம், 200 கிராம், 125 கிராம் மற்றும் 100 கிராம்)

## 3.4.8. முன்னர் - ஏலவிற்பனை தேயிலை, முன்னர் - கப்பலேற்றப்பட்ட தேயிலை முன்னர் - ஏற்றுமதி தேயிலை வகைகளின் நிருவாகத்திற்கான தேயிலை சுவை பரிசீப்பு மற்றும் விசேட பகுப்பாய்வுகள்.

விற்பனைகளுக்கு இரு வாரங்களுக்கு முன்னர் மதிப்பீட்டுச் செயற்பாடுகளுக்காக எட்டு தரகர்களினால் தமது முன்னைய ஏலவிற்பனை தேயிலை மாதிரிகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. ஒரு அலகினால் முதலில் தரத்திற்குப் புறம்பாக, துகல் மேலதிகமாக மற்றும் BOP1A மாதிரிகள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுகின்றன. அதனைத் தொடர்ந்து காபன் மதிப்பீடு செய்யப்படுகின்றன. அதனைத் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரிகள் சபைக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் 4ட்டுத் தீர்மானங்களை பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பித்து அவ்வாறு அமையாத பட்சத்தில் எதிர்காலத்தில் நடைபெறும் ஏலவிற்பனைக்காக பிரதி தேயிலை ஆணையாளர் (DTC) (ஏற்றுமதி) இற்கு தீர்மானம் வழங்கப்பட மாட்டாது.

குழு /சபையினால் நிராகரிக்கப்பட்ட ஆரம்ப – ஏலவிற்பனை செய்யப்பட்ட தேயிலை மாதரிகளின் எண்ணிக்கை

| | |
|---|---|
| போதைபொருள் தொடர்பான அனுமானிப்புகளுக்காக | 180 |
| சிலுசியஸ் அளவின் உள்ளடக்கம் | 93 |
| கழிவு நார் | 243 |

திடீரென (BSL/ESL) தொடர்பாக DTC (செயற்றிட்டம்) மூலம் சமர்ப்பிக்க முன்னர் - ஏலவிற்பனை தேயிலை மாதிரி பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட வகைகளின்

| | |
|---|---|
| எண்ணிக்கை | 7,004 |
| சந்தேகத்திற்கு இடமான எண்ணிக்கை | 267 |



கொழும்பு தேயிலை ஏல விற்பனை

மேற்கூறுப்பட்ட செயற்பாட்டு முறையின் மாதிரி பிரதி தேயிலை ஆணையாளர் (ஏற்றுமதி) இனால் சிங்க இலச்சினை பயன்பாடு தொடர்பான மதிப்பீட்டுக்காக ISO 3720 அளவு அல்லது கப்பலேற்றலுக்கு முன்னர் ஏனைய பதார்த்தங்கள் உள்ளதா என்பது தொடர்பான மதிப்பீடுகளுக்காகச் சமர்ப்பிக்கப்படும். ஆரம்ப – கப்பலேற்றும் செயற்பாடுகளுக்கான யோசனைத் திட்டத்தின் கீழ் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை மொத்தம் 4,915 பிரதி தேயிலை ஆணையாளர் (ஏற்றுமதி) உடன் இறக்குமதிக்காகப் பொருத்தமான மதிப்பீட்டு மாதிரிப் படிவம் இறக்குமதிக்கு முன்னரான மாதிரிக்காகச் சமர்ப்பிக்கப்படும் சகல விண்ணப்பபடிவங்களுடனும் பிறப்பு, தரம், போன்றவை தொடர்பான மாதிரி விபரங்கள் அடையாளம் இடப்பட்டுள்ளன. சுவை பரிசீப்பாளர்களினால் இலங்கை தேயிலை சபையின் சுற்றறிக்கை இலக்கம் : OR/1/65 மற்றும் மறுசீரமைக்கப்பட்ட ஆலோசனைத் தொடர்களுக்கு அமைய தேயிலை வகைகள் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

TTU பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட மாதரிகளின் எண்ணிக்கை- 1,907

இறக்குமதி செய்யப்பட்ட தேயிலை பொறுப்பேற்கப்பட்ட மாதிரிகளைப் பெற்று தேயிலை ஏற்றுமதிப் பிரிவினால் இப்பிரிவுக்கு அங்கீகாரத்திற்காக பெறப்பட்ட தொகைகள் சகலதும் மாதிரிப் பிரிவுக்கு அனுப்பப்படும். வழங்கப்பட்ட மாதிரிகளுக்கு இணைவாக மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுவதுடன், மாதிரிகள் வழங்கப்படும் சந்தர்ப்பங்களில் அவை தேயிலை சுவை பரீட்சிப்புப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்) இனால் அவை தேயிலை சுவைப் பரீட்சிப்புப் பிரிவுக்கு அனுப்படும் வேளையில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும்.

TTU இனால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை - 1,299

தரத்திற்குரியதானஇ ISO அல்லது ஏனைய விசேட தர மதிப்பீட்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட உப ஆவணம் தொடர்பாக வியாழக்கிழமை குழு ஊடாக ஆணையாளர் அல்லது பிரதி ஆணையாளர் (ஏற்றுமதியாளரினால்) மாதிரிகள் சமர்ப்பிக்கப்படும்.

## 3.4.9. தனியார் விற்பனை குழுவின் மதிப்பீடு, தரச் சான்றிதழ் மற்றும் நேரடி விற்பனையினை உறுதிப்படுத்தல்.

சுயாதீனத் தரகர்களின் அங்கீகாரத்துடன் விற்பனைகள் மேற்கொள்ளப்படும் தரகர்களினால் இப்பிரிவுக்கு குழுவுடன் தொடர்புபட்ட மாதிரிகள் சமர்ப்பிக்கப்பட்ட வேளையில் தனியார் விற்பனை சான்றிதழ்கள் உறுதிப்பத்தப்படுகின்றன. மேற்குறிப்பிடப்பட்ட சேவைகளுக்காக ரூபா 500/-+ (வற் (VAT) + தேசிய தரகர் வரி (NBT)) மற்றும் உறுதிப்படுத்தும் கட்டணம் அறவிடப்படும்.

தற்போது மேற்கூறப்பட்ட யோசனைத் திட்டங்கள், பச்சைத் தேயிலை, விசேட தேயிலை வகைகள் மற்றும் கொழும்பு தேயிலை ஏலவிற்பனை ஊடாக விற்பனை செய்யப்படாத துண்டுத் தேயிலைகளுக்காக மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது.

தேயிலை சுவை பரீட்சிப்புப் பிரிவினால் பரிசோதனை மேற்கொண்டு உறுதிப்படுத்தப்பட்ட தனியார் விற்பனை பொருட்களின் எண்ணிக்கை மொத்தம்.- 6,632

மேற்கூறப்பட்ட யோசனைத் திட்டத்தின் மூலம் உற்பத்தி ஏற்றுமதியாளர்களுக்கு தமது உற்பத்தியை வெளிநாட்டு கொள்வனவாளர்களுக்கு நேரடியாக விற்பனை செய்ய சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் உள்நாட்டு தேயிலை கொள்வனவாளர்களுக்கு பச்சை, விசேட தேயிலை வகைகளை விற்பனை செய்ய முடியும். நேடிய விற்பனையினை உறுதிப்படுத்தும் வகையில் வியாழக்கிழமை குழுவினால் உறுதிப்படுத்தப்படுகின்றது.

உரிய அலகினால் உறுதிப்படுத்தப்பட்ட நேரடி விற்பனையின் மொத்தம்.- 1,768



*Micro biological analysis*



*Chemical analysis*



*Coli form analysis in microbiological lab*



*Pesticide residue analysis*

# 3.5 பகுப்பாய்வு இரசாயன கூடம்

03

தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டான 2012ஆம் ஆண்டில் பகுப்பாய்வு ஆய்வு கூடத்தினால் இரசாயன நுண்ணுயிரியல் விஞ்ஞான மற்றும் கிருமிநாசினி தாக்கத்திற்கு உட்பட்ட தேயிலை மாதிரிகள் காணப்படுகின்றதா என்பதனை பரிசீலனை செய்யும் வகையில் 5042 மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. பரிசோதனைக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட தேயிலை மாதிரி இரு பிரிவுகளின் ஊடாக கிடைக்கப் பெற்றன. உள்ளக செயற்பாட்டுச் சேவை (IMS) மற்றும் வெளி உறுதிப்படுத்தும் சேவை (ECS) தாபிக்கும் ஒப்பளவுகளுக்கு அமைய ஏலவிற்பனைக்கு முன்னர் மற்றும் கப்பலேற்றுவதற்கு முன்னர் தேயிலை சபையினால் பரிசோதனை குழுவிற்கு விரிவாகவுள்ள தேயிலை மாதிரிகளில் திடீரெனப் பெறப்படுவதைப் போன்று தேயிலை சபைக்கும் அனுப்பப்படுகின்றது. IMS யோசனைத் திட்டத்தினால் தேயிலையினை அகற்றும் சகல இடங்களும் தழுவப்படுகின்றன. தேயிலை உற்பத்தியாளர்கள், தேயிலைத் தரகர்களின் களஞ்சியம், குதம், தேயிலைக் கலப்பு மற்றும் பொதியிடல் உட்பட தேயிரலை ஏற்றுமதியாளர்களின் களஞ்சியம், குதம் என்பன அடங்குகின்றன. அத்துடன் ECS தேயிலை ஏற்றுமதியாளர்களை உறுதிப்படுத்தும் தேவை அவர்களது கொள்வனவாளர்களின் தேவைகளுக்கு அமைய தழுவப்படுகின்றன. 2012ஆம் ஆண்டில் முழுமையாக மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு இடையே IMS இன் கீழ் பெறப்பட்ட மாதிரிகளின் அடிப்படையாகக் கொண்டு 2445 பரிசோதனைகள் (சுமார் 49% ) மேற்கொள்ளப்பட்டதுடன், ECS கீழ் மேற்கொள்ளப்பட்ட மொத்த பரிசோதனைகளின் எண்ணிக்கை 2571 (சுமார் 51%) ஆகும். இவற்றில் 3950 பரிசோதனைகள் இரசாயனப் பகுப்பாய்வுப் பிரிவினாலும் (சுமார் 78.5மூ 1066 பரிசோதனைகள் (சுமார் 21% ) நுண்ணுயிரியல் பகுப்பாய்வு அதாவது 26 பரிசோதனைகள் (0.5% ) கிருமிநாசினி பகுப்பாய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

தேயிலை வகைகளின் அதிஉயரிய தரத்துடன் தேயிலை மாதிரிகளை இனங்காண்பதைத் தவிர பரிசோதனை சேவைகளை வழங்குவதற்காக பகுப்பாய்வு இரசாயன கூடத்தினால் கட்டணங்கள் அறவிடப்படுகின்றன. 2012ஆம் ஆண்டில் இரசாயன கூடத்தினால் ஈட்டப்பட்ட மொத்த வருமானம் ரூபா. 4,858,000.00 ஆகும். ஏற்றுமதியாளர்களின் பங்களிப்பு ரூபா 2,815,000.00 (58%) என்பதுடன் உள்ளகப் பிரிவின் வருமானப் பங்களிப்பு ரூபா 2, 043,000.00 (42%) ஆகும்.

# 03

தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

3.5.1 அட்டவணை 2011/2012 ஆண்டுகளில் செயற்சாதனை பரிசோதனைகளின் சுருக்கம்.

| இரசாயன கூடப் பகுப்பாய்வுப் பிரிவு | பரிசோதனைகளின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | 2011 | 2012 |
| **பரிசோதனைகளின் பெயர்** | | |
| 1. தேயிலையில் உள்ள ஈரலிப்பினைத் தீர்மானித்தல் | 184 | 538 |
| 02. தேயிலையில் உள்ள முழுமையான சாம்பல் அளவைத் தீர்மானித்தல் | 691 | 198 |
| 03. தேயிலையில் உள்ள நீரில் கரையும் சாம்பல் அளவைத் தீர்மானித்தல். | 482 | 188 |
| 04. தேயிலையில் உள்ள நீரல்லாத அமில சாம்பல் அளவினைத் தீர்மானித்தல். | 651 | 188 |
| 05. தேயிலையில் உள்ள நீரின் பங்கினைத் தீர்மானித்தல் | 511 | 188 |
| 06. தேயிலையில் உள்ள நீரின் கரையும் சாம்பல் அளவில் ஆவியாகுவதனைத் தீர்மானித்தல் | 522 | 190 |
| 07. தேயிலையில் உள்ள கழிவுநார் அளவைத் தீர்மானித்தல். | 642 | 347 |
| 08. தேயிலையில் உள்ள பீளச் பெறுமானத்தைத் தீர்மானித்தல | 35 | 2 |
| 09. தேயிலையில் உள்ள சயனேட் தொடர்பான தரப்பகுப்பாய்வு | 711 | 623 |
| 10. தேயிலையில் உள்ள ஆயனிக் திரவம் தொடர்பான தரப்பகுப்பாய்வு | 720 | 622 |
| 11. அடிப்படை கதிர்வீச்சினைத் தீர்மானிக்கும் பரிசோதனை | 1035 | 727 |
| 12. ஏனைய பரிசோதனைகள் (நிறம், சீனி, ஜெல், கோதை, சுவையூட்டல், போன்றவற்றை சேர்ப்பது தொடர்பான இரசாயன ஆய்வு, பைக்காபனேற், ஏனைய சேர்வைகள். | 163 | 2 |
| 13. தரத்தை இனங்காணும் பரிசோதனை / பகுப்பாய்வு | - | 16 |
| 14. தேயிலையில் அடங்கும் பொரஸ் / இரும்புச் சக்தி அளவினை தீர்மானித்தல். | 175 | - |
| **நுண்ணுயிரியல் விஞ்ஞானப் பகுப்பாய்வுப் பிரிவு** | | |
| 01. முழுமையான பதார்த்த அளவினை | 543 | 352 |
| 02. ஈஸ்ட் மற்றும் திரவ அளவினைத் தீர்மானித்தல். | 561 | 370 |
| 03. . இறந்த அல்லது கிருமி மற்றும் ஏனைய வகையான வெளித்தாக்கங்களுக்கு உட்பட்டமை தொடர்பிலான பரிசோதனைகள் | 08 | 12 |
| 04. தேயிலையிலுள்ள (GMO) | 117 | 121 |
| 05. பிக்கல் கொலிபோம் மற்றும் எஸ்கரிகியா கோலை பருமனை இனங்காணல் மற்றும் கணிப்பீடு செய்தல். (E.coli) | 92 | 163 |
| 06. மொத்த கொலிபோம் அளவினை இனங்காணல் மற்றும் கணிப்பீடு செய்தல். | 90 | 169 |
| **எஞ்சும் கிருமிநாசினி பகுப்பாய்வுப் பிரிவு** | | |
| 01. முறைமையின் செல்லுபடியாகும் நிலைமை மற்றும் ஆராட்ச்சி உட்பட அபிவிருத்திப் பணிகள் | - | 26 |
| | | |
| மொத்தம் | 7933 | 5042 |

## 3.5.1. பரிசோதனைச் சான்றிதழ்

2012 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்தச் சான்றிதழின் அளவு ஆகும். இது எவ்வாறாக இருப்பினும், 2011ஆம் ஆண்டில் கடந்த ஆண்டுடன் (2028 மொத்தப் பெறுமதி) ஒப்பீடு செய்யும் போது 2012ஆம் ஆண்டில் பரிசோதனைப் பொருள் செயற்சாதனைகள் மேற்கொள்ளாமையினால் வழங்கப்பட்ட சான்றிதழ்களின் அளவு சிறியளவு குறைவினைக் காணமுடிகின்றது.

### வழங்கப்பட்ட சான்றிதழ்களின் வகைகள்

1. தேயிலையிலுள்ள ஈரலிப்பு தொடர்பான பரிசோதனை அறிக்கை
2. ISO 3720 குறைந்தபட்ச தரம் கொண்ட தேயிலை வகைகளின் தரத்தினை உறுதிப்படுத்தல்.
3. இரசாயனப் பொருள் தொடர்பிலான அளவீடுகள், (இரசாயன கலப்புக்களை மேற்கொள்ளல்) இற்காக தேயிலை உறுதிப்படுத்தல்.
4. தேயிலையில் காணப்படும் சிலிசியஸ் (சிலிக்கன்) பங்கு, தேயிலையிலுள்ள துகல்களின் பகுப்பாய்வு மற்றும் தேயிலை உலையில் வடித்தெடுப்பது தொடர்பான பகுப்பாய்வுகள் குறித்து சான்றிதழ்கள்.
5. தேயிலை வகைகளின் மேலதிகப் பொருட்கள் / இறந்த / கிருமித் தாக்கம், தேவையற்ற பொருட்கள் மற்றும் கழிவுப் பொருட்களுடன் தொடர்புபட்ட நுண்ணுயிரியல் ஆய்வுப் பரிசோதனைகளை மேற்கொள்வது தொடர்பிலான சான்றிதழ்கள்.
6. பக்றீரியா மற்றும் தேயிலையினைத் தாக்கக் கூடிய நோய், ஈகோலை, கொலிபோம் மற்றும் சல்மெனல்லா ஆகிய நுண்ணுயிரியல் பதார்த்தங்கள் விசேடமாகத் தேயிலையில் உள்ளடங்கியுள்ளதாக என்பது குறித்து உறுதிப்படுத்தல்.
7. மரபு மாற்றங்கள் தொடர்பான விசேட (GMO) தேயிலையில் அடங்குவதனை உறுதிப்படுத்தல்.

## 3.5.2. பகுப்பாய்வு இரசாயன கூடத்தின் பரிசோதனை சேவைகள் ஊடாக வருமானத்தைச் சேகரித்தல்.

சேவை பெறுநர்களிடம் இருந்து கிடைக்கப்பெறும் கோரிக்கைகளுக்கு அமைய மேற்கொள்ளப்படும் பரிசோதனை சேவைகளுக்காக பகுப்பாய்வு இரசாயனகூட கட்டணம் 2010.08.06 ஆம் திகதி இலக்கம். OR/1/87 தேயிலை சபையின் சுற்றறிக்கைக்கு அமைய அறிவிடப்படுகின்றது. இரசாயனகூடத்தின் மொத்த வருமானத்திற்கு ஏற்றுமதியாளர்களிடம் இருந்து நேரடியாக பெறப்பட்ட பரிசோதனைக் கட்டணம் (58%) மற்றும் பகுப்பாய்வு இரசாயன கூடத்தினால் உறுதிப்படுத்தப்பட்டவாறான தரத்தைவிடக் குறைந்த தேயிலை வகைகளில் அடங்கும் தேயிலை ஆணையாளர் பிரிவு மற்றும் தேயிலை ஏற்றமதிப் பிரிவினால் உழைத்த நிதி (அதாவது 42% ) ஐ சேர்ப்பதன் மூலம்.

03

தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

3.5.2. அட்டவணை : மொத்த ஏற்றுமதியில் பங்கு : உள்ளக செயற்பாடுகளுக்கு இணைவாக வெளி சான்றிதழ்கள்

| | 2011ஆண்டு (ரூ) | % | 2012 ஆண்டு (ரூ) | % |
|---|---|---|---|---|
| உள்ளக செயற்பாட்டு சேவைகள் (IMS) | 2,665,600 | 43.91 | 2,043,000 | 42.05 |
| வெளி உறுதிப்படுத்தல் சேவைகள் (Ecs) | 3,405,600 | 56.09 | 2,815,000 | 57.95 |
| முழு மொத்தம் (ரூபா) | 6,071,200 | | 4,858,000 | |

இரசாயனகூட பகுப்பாய்வு சேவையில் இனங்காணல்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறுபட்ட இரசாயனப் பொருட்கள் தொடர்பிலான தரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் தேயிலை தொகைகளுக்கு எதிராக தேயிலை ஆணையாளர் மற்றும் பிரதி ஆணையாளர் (ஏற்றுமதி) இனால் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதற்கமைய 556 தொகைத் தேயிலை உரிய தரத்தைவிடக் குறைவானது என கருத்திற் கொள்ளப்பட்டு மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டான 2012ஆம் ஆண்டில் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

3.5.3: 2011 ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2012ஆம ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசெம்பர் வரையான காலத்திற்குள் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது.

| | 2012 ஆண்டு (ரூபா) | 2011 ஆண்டு (ரூபா) |
|---|---|---|
| மொத்த வருமானம் | 4,858,000.00 | 6,071,200.00 |

## 3.5.3. பகுப்பாய்வு இரசாயன கூடத்தின் அவ்வவப் பிரிவுகளின் செயற்சாதனைகள்

### 3.5.3.1 தரப் பரிசோதனை மற்றும் மாதிரிகள் பிரிவு :

சர்வதேச தரச் சான்றிதழ்களுக்காக செயற்பாடுகளை மேற்கொள்ளும் எந்தவொரு பரி-சோதனை இரசாயன கூடத்திற்கான ஆவன நிருவாக கோவைகளை முன்னெடுப்பது கட்டாயமானதாகும். எனவே, தரப்பரிசோதனைப் பிரிவின் பிரதான செயற்பாடுகளாக அமைவ ISO 17025 தரங்களுக்கு அமைய இரசாயன கூடத்தின் உறுதிப்படுத்தல்களுக்காக சர்வதேச தரங்களுக்கு அமைய இரசாயன கூடத்தின் ஆவணக் கோவைகள் பேணப்பட்டுள்ளன. இதற்கமைய, மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டான 2012ஆம் ஆண்டில் இரசாயன, நுண்ணுயிரியல் விஞ்ஞானம் மற்றும் கிருமிநாசினிப் பகுப்பாய்வுப் பிரிவுகளில் உள்ளக ஆவன நிருவாகக் கோவைகள் தாபிக்கப்பட்டு, பேணப்பட்டன. மேற்கூறப்பட்ட விடயங்களுக்கு மேலதிகமாக இப்பங்களிப்பின் மூலம் இரசாயனகூடத்தின் மாதிரி பகுதிகளைப் பெறல் மற்றும் வெளியிடும் பகுதிகளை அறிக்கைப்படுத்தப்படுகின்றன. கல்வித் தகைமைகள் கொண்ட புதிய தர முகாமை உத்தியோகத்தர்களுக்கு (QMO) நியமித்தல் மற்றும் தரப்பரிசோதனை உட்பட மாதிரிப் பிரிவுக்கு ஒரு இடத்தை வழங்குவது, பகுப்பாய்வு இரசாயன கூடத்தினால் 2012ஆம் ஆண்டில் பிரதானமாக எட்டப்பட்ட பணிகளாகக் கருதப்படுகின்றன. பயன்பாட்டிற்கு உதவாக பொருத்தமற்றவைகள் எனக் கருதப்படும் தேவை வகைக-ளை வெளியேற்றுவதற்கு முன்னர் தேவையான தேயிலை ஏற்றுமதியாளர்களின் களஞ்சியசாலை, குதங்களின் மாதிரிகளாக வகைப்படுத்துவதற்கு உதவிப் பணிப்பாளர் (இரசாயனகூடம்) தரமுகாமைத்துவம் (QMO) தொடர்புபட்டுள்ளது. 2012ஆம் அண்டுக்கான தலைவரின் மற்றும் பணிப்பாளார் நாயகத்தின் ஆலோசனைகளுக்கு அமைய (உதவிப் பணிப்பாளர்) (இரசாயன கூடத்தினால்) விசேட நிகழ்வாகக் கருதி 4 மாதிரித் துறைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

### 3.5.3.2. இரசாயனப் பகுப்பாய்வுப் பிரிவு.

தொழில்நுட்பத் திறமைகளைக் கொண்ட பகுப்பாய்வாளர்களைத் சேர்த்துக் கொள்ளுதல், 2012ஆம் ஆண்டின் பகுப்பாய்வுப் பிரிவி-னால் எட்டப்பட்ட வெற்றியாகும். உதவிப் பணிப்பாளர் (இரசாயனகூடம்) மேற்பார்வையின் கீழ், பகுப்பாய்வு (இரசாயனகூடம்) இனால் கீழ் குறிப்பிடப்பட்ட பணிகள் அவரது குழுவுடன் இணைந்து செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

1. ஏலவிற்பனை மற்றும் கப்பலேற்றுவதற்கு முன்னர் தரக் குறைவாக உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை தொடர்பாக இரசாயன மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.
2. தாபிக்கப்பட்டுள்ள ISO 3720 தரச் சான்றிதழ்களுக்கு இணைவாக இரசாயன மதிப்பீடுகளை மேற்கொள்ளல் (அதற்குரிய ஒப்பளவகா அமைவது) முழுமையான சாம்பல், நீரில் கரையும் சாம்பல், ஆவியாதல், அமிலத்தில் கரையாத சாம்பல், நீரின் ஒரு பகுதி, ஈரலிப்பு மற்றும் கழிவுப் பொருள் நார்பகுதிகள்)
3. உழையின் பகுப்பாய்வு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தேயிலை மற்றும் மா உள்ளடக்கங்கள் தொடர்பான மதிப்பீடுகள்.
4. தேயிலை வகைகளின் உள்ளடக்கம் (சிலிசியஸ்) பொருள் பகுதிகள் தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.

ஏனைய முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பங்கள் / பணிகளுக்கு இடையே இரசாயன இயலுமைகளை பரிசோதனை செய்யும் வேலைத் திட்டங்களில் பங்கேற்பதனையும் விசேடமாகக் குறிப்பிட முடியும். இவ்வேலைத்திட்டத்தின் மூலம் இரசாயனப் பகுப்பாய்வுப் பிரிவின் பணியாளர்களின் திறமை-களை விருத்தி செய்ய சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

இரசாயனப் பகுப்பாய்வுப் பிரிவின் பணியா-ளர் சபையின் உள்ளடக்கமாக அமைவது நிலையத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தராக ஒரு பகுப்பாய்வாளர் (இரசானயகூடம) தொழில்நுட்பம் சார்ந்த இரு உத்தியோகத்தர்கள் (ஒப்பந்த அடிப்படையில்) மற்றும் உதவிப் பணிப்பாளர் (இரசாயன கூடம்) இன் மதிப்பீட்டின் கீழ் ஒரு இரசாயனகூட உதவியாளர் என்ற அடிப்படையில் அமைகின்றது.

### 3.5.3.3. நுண்ணுயிரியல் விஞ்ஞானப் பகுப்பாய்வுப் பிரிவு

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட 2012ஆம் ஆண்டுக்குள் ஏனைய பொதுவான ஒரே வகையான சுவைப் பரீட்சார்த்தலுடன் ஒப்பீடு செய்யும் போது நுண்ணுயிரியல் விஞ்ஞான ஆராய்ச்சி மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைவது தேயிலை வகைகளின் கொலிபோம், ஈ-கோலை மற்றும் முழுமையான கொலிபோம் நிலை தொடர்பிலாக பரிசோதனை செய்தலும், கணிப்பீடு செய்தலுமாகும். மேலும் முழுமையான மட்டங்களில் எண்ணிக்கை (முழுமையான பற்றீரியா அளவு ) ஈஸ்ட் மற்றும் திரவ அளவு பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றது.

நுண்ணுயிரியல் விஞ்ஞானப் பகுப்பாய்வுப் பிரிவின் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தராக ஒரு பகுப்பாய்வாளரும், ஒரு தொழில்நுட்ப உதவியாளர் (ஒப்பந்தம்) அடிப்படையில் மற்றும் இரசாயன கூட உதவியாளராக உதவிப் பணிப்பாளர் (இரசாயனகூடம்) ஆகியோர் அடங்கியுள்ளனர்.

### 3.5.3.4 கிருமிநாசினிப் பகுப்பாய்வுப் பிரிவு :

தேயிலை பரிசோதனை நிறுவனத்தின் பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் வெளி இரு விஞ்ஞானிகளினால் கிருமிநாசினி பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது. தொழில்நுட்ப அறிவுப் பரிமாற்றல், இலங்கை தேயிலை சபை மற்றும் தேயிலை ஆராய்ச்சிப் பிரிவுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வுக்கு அமைய அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கமைய, 5 கிருமிநாசினிகளுக்காக ஏற்றுமதிப் பரிசோதனை சான்றிதழ்களுக்காக தேவையான பயிற்சிப் பகுப்பாய்வுகள் தொடர்ந்தும் முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டன. அதாவது எல்பா – எக்டோஸ் சல்பன், பீட்டா – என்டோ சல்பன், பிபன் திரின் 2,4-D, மற்றும் MCPA என்பனவாகும். இப்பயிற்சி வேலைத்திட்டங்களின் கீழ் காணப்படும் முறைமையினை விரிவான அடிப்படையில் பயன்படுத்தும் ஜேர்மன் முறைகளுக்கு அமைய மேம்படுத்தப்பட்டதுடன், ஆராய்ச்சி ரீதியிலான பயிற்சிகள் QuEChERS' என்ற புதிய முறையான ISO சான்றிதழ் முறைகள் அமுல்படுத்தப்பட்டன.

கிருதி நாசினிப் பகுப்பாய்வுப் பிரிவு அமைந்திருப்பது செயற்பாட்டு உத்தியோகத்தராக ஒரு பகுப்பாய்வாளர் (இரசாயனகூடம்ஃ கிருமி-நாசினி) தொழில்நட்ப உதவியாளர் (ஒப்பந்த அடிப்படையில்) மற்றும் இரசாயன உதவியாளர் ஆகிய உத்தியொகத்தர்கள் அடங்குகின்றன. 2012 டிசெம்பர் மாதத்தின் பகுப்பாய்வு (இரசாயனகூடம் - கிருமிநாசினி) இனால் இராஜினாமாக் கடிதம் கையளிக்கப்பட்டதுடன், அதற்குப் பின்னர் உதவிப் பணிப்பாளர் (இரசாயனகூடம்) இன் மேற்பார்வையின் கீழ் கிருமிநாசினி பகுப்பாய்வுப் பிரிவின் பகுப்பாய்வாளருக்குப் பதிலாக பதில் கடமைக்காக தர முகாமைத்துவ உத்தியோகத்தர் இணைப்பு செய்யப்பட்டார்.



*The New Board Room*






*Interior of Sri Lanka Tea Board's re-furbished main secretariat building*

# 3.6. நிருவாகப் பிரிவு

03

தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

## 3.6.1 பிரதான வெற்றிகள்

2012 ஆம் ஆண்டில் இலங்சைக தேயிலை சபைக்கு விசேட ஆண்டாக அமைந்தது. 30 வருட கால வரலாற்றினைக் கொண்டுள்ள இலங்கை தேயிலை சபையின் பிரதான செயலகக் கட்டத் தொகுதி அக்காலத்திற்குப் பின்னர் 2012ஆம் ஆண்டில் புனரமைக்கப்பட்டது. நவீனமயப்படுத்தப்பட்ட கட்டடத் தொகுதி தேயிலை சபை வெளித்தோற்றத்திற்கு கூடுதலான பெறுமதி சேர்க்கப்பட்டதுடன் இதனைத் திறந்து வைக்கும் வைபவத்தில் கௌரவ அமைச்சர் மகிந்த சமரசிங்க மற்றும் பிரதி அமைச்சர் ஏர்ல் குணசேகர ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கை தேயிலை சபைக்கு புதிதாக ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதைத் தடுக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கும் வகையில் இலங்கை தேயிலை சபையில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கான இயலுமைகள் கிடைக்கப்பெற்றமை இவ்வாண்டில் பெற்ற மிக முக்கிய செயற்சாதனையாகக் கருதமுடியும். இதன் மூலம் கடந்த ஆண்டுகளில் பல பிரச்சினைகளுக்கு தீர்வுகள் கிடைக்கப்பெற்றன. ஊழியர் பற்றாக்குறைகள் காரணமாக ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் கூடுதலான ஊழியர்கள் 2010ஆம் ஆண்டில் இலங்கை தேயிலை சபைக்கு சேர்த்துக் கொள்ள முடிந்தமை விசேட அம்சமாகும்.



*The new look of the secretariat reception*



*Pirith Ceremony on the opening of the Sri Lanka Tea Board's re-furbished main secretariat building*







| குறுகியகால முதலீடு | 2,804,609,593 | 1,467,848,421 | 352,572,978 |
| | 2,804,609,593 | 1,467,848,421 | 352,572,978 |

| 12. ஊழியர் பிரதிஇலாபம் | 2012.12.31 திகதியன்று ரூபா | 2011.12.31 திகதியன்று ரூபா | 2010.12.31 திகதியன்று ரூபா |
|---|---|---|---|
| பணிக்கொடை ஆரம்ப நிலுவை | 45,640,715 | 40,861,136 | 56,682,351 |
| ஆண்டுக்குரிய பணிக்கொடை மாற்றங்கள் | 5,859,469 | 7,764,121 | (12,970,451) |
| ஆண்டுக்குள் செலுத்தப்பட்ட / செலுத்த வேண்டிய பிரதிஇலாபங்கள் | (7,465,493) | (2,984,542) | (2,850,764) |
| | 44,034,691 | 45,640,715 | 40,861,136 |

| 13. காணிக்கான முற்கொடுப்பனவு வரி உரிமை | 2012.12.31 திகதியன்று ரூபா | 2011.12.31 திகதியன்று ரூபா | 2010.12.31 திகதியன்று ரூபா. |
|---|---|---|---|
| ஆரம்ப நிலுவை | 3,079,183 | 3,151,083 | 3,595,000 |
| தேய்மானம் | (71,900) | (71,900) | (443,917) |
| இறுதி நிலுவை | 3,007,283 | 3,079,183 | 3,151,083 |

# நிதி வெளிப்பாடுகள் தொடர்பான குறிப்பு

டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கான

| 14. கற்புலனாகாச் சொத்துக்கள் | 2012.12.31 திகதியன்று ரூபா | 2011.12.31 திகதியன்று ரூபா | 2010.12.31 திகதியன்று ரூபா |
|---|---|---|---|
| மென்பொருள் | 1,077,307 | 1,009,829 | 1,106,618 |
| அமுலிலுள்ள பணிகள் | 8,233,971 | 6,409,972 | 6,409,972 |
| | 9,311,278 | 7,419,800 | 7,516,589 |

| 15. வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய நிதி | 2012.12.31 திகதியன்று ரூபா | 2011.12.31 திகதியன்று ரூபா | 2010.12.31 திகதியன்று ரூபா |
|---|---|---|---|
| வர்த்தக செலுத்த வேண்டிய நிதி | 41,016,920 | 31,767,673 | 56,199,125 |
| ஏனைய செலுத்த வேண்டிய நிதி | 51,128,665 | 55,664,729 | 47,714,166 |
| திரண்ட செலவீனம் | 12,105,463 | 8,859,281 | 23,934,813 |
| | 104,251,048 | 96,291,683 | 127,848,104 |

16. மூலதனம் மற்றும் ஒதுக்கீடு

2012 டிசெம்பர் 31ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்குள் அங்கீகாரம் பெற்ற மூலதனத்தில் மாற்றங்கள் இல்லை

பங்காளர் மூலதனம்

2012 டிசம்பர் 31ஆம் திகதியன்று ரூபா 652,067,602 அரச வளங்கள் மூலம் பங்காளர் மூலதனம் உள்ளடங்கியுள்ளது.

## அபிவிருத்தி மற்றும் விற்பனை வரி

32

இலங்கை தேயிலை சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் தேயிலை ஏற்றுமதிக்காக அனுமதி வழங்கும் வகையில் CUSDEC இற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள வேளையில் தேயிலை ஏற்றுமதிக்காக பதிவு செய்யப்பட்டள்ள சகல ஏற்றுமதியாளர்களைப் போன்று ஏற்றுமதி செய்ப்படும் சகல தேயிலை கிலோ கிராமிற்காகவும் ரூபா 3.50 நிதி அறவிடப்பட வேண்டும். கோவைகளின் ஒழுங்கு விதிமுறைகளுக்கு அமைய சேகரிக்கப்பட்ட சகல நிதி இலங்கை தேயிலை சபையினால் தீர்மானிக்கக் கூடியவாறு பெயரிடப்பட்ட கணக்குகளில் வைப்பிலிட வேண்டும்.

இக்கோவை அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் இலங்கைதேயிலை சபையினால் பெயரிடப்பட்ட கணக்குகளில் வைப்பில் இடப்பட்டுள்ள நிதிச் சபையினால் இலங்கையில் அல்7லது அதற்கு வெளியே தேயிலை ஊக்குவிப்பு மற்றும் விற்பனை வியூக செயற்பாடுகளுக்கு உரியதான பணிகளுக்கு மாத்திரம் பயன்படுத்த வேண்டும்.

| | 2012.12.31 திகதியன்று ரூபா. | 2011.12.31 திகதியன்று ரூபா. |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை | 1,348,778,067 | 194,275,470 |
| ஏற்றுமதியாளர்களினால் சேகரிக்கப்பட்ட நிதி | 1,186,445,976 | 1,113,814,616 |
| முதலீடு மீதான வட்டி | 211,481,173 | 66,443,637 |
| ஊக்குவிப்புச் செலவீனம் - வெளிநாடு | (17,491,926) | (10,320,861) |
| ஊக்குவிப்புச் செலவீனம் - உள்நாடு | (4,942,201) | (3,150,408) |
| சர்வதேச தேயிலை சபையின் பங்களிப்?பு | (2,900,111) | (2,286,956) |
| தூதுவர் சபைகளுக்கான நன்கொடை – ஏனைய தேயிலை வகைகள் உட்பட நன்கொடைகள் | (3,036,776) | (4,497,426) |
| சர்வதேச சந்தைகளில் பங்கேற்பு | (7,650,352) | (5,500,005) |
| இறுதி நிலுவை | 2,710,683,852 | 1,348,778,067 |

## விசேட ஒதுக்கீடு

32

ரூபா 481,933,543 விசேட ஒதுக்கீட்டை உருவாக்க சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் இதன் பயன்பாடு தொடர்பாக பொறுத்தமானவாறு சபையினால் தீர்மானம் எடுக்கப்படும்.

## 17. பொறுப்புக்கள் மற்றும் ஒதுக்கீடுகள்

பிணக்குகளைத் தீர்க்கும் சபையினால் வழங்கப்பட்ட வழக்குத் தீர்ப்பு இலங்கை தேயிலை சபைக்கு எதிராக வழங்கப்பட்டமையினால் ஆண்டுக்குள் ரூபா 15,556,355 நிதி செலுத்த வேண்டியிருந்தது. இலங்கை தேயிலை சபை இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்ததுடன் அது தொடர்பிலான பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## 18. நிதி பாதுகாப்பு முகாமைத்துவ நோக்கம் மற்றும் கொள்கைகள்

சபையின் பிரதான நிதிப் பொறுப்பு வர்த்தகம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளில் அடங்குகின்றன. இந்நிதிப் பொறுப்புக்களில் பிரதான நோக்கமாக அமைவது இ.தே.ச. செயற்பாடுகளுக்கு நிதி வழங்குவதாகும். இலங்கை தேயிலை சபையிடமுள்ள வர்த்தகம் மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய நிதி மற்றும் செயற்பாடுகள் மூலம் நேரடியாகக் கிடைக்கும் நிதி குறுகிய கால வைப்பாகும். இலங்கை தேயிலை சபை செயற்பாட்டு ரீதியிலான பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளது. இது தொடர்பில் முகாமைத்துவம் தொடர்பான இலங்கை தேயிலை சபையின் சிரேஷ்ட முகாமையாளர்கள் விசேட கவனத்துடன் உள்ளனர். சபையின் அங்கத்தவர்கள் கீழே குறிப்பிடப்பட்ட அவ்வவ் பாதிப்புக்கள் தொடர்பில் முகாமைத்துவக் கொள்கை மீளாய்வுகளை மேற்கொள்ள இணக்கங்களை எட்டியுள்ளன.

### பாதிப்புக்கள்

இலங்கை தேயிலை சபையின் நோக்கமாக அமைவது தொடர்ச்சியான நிதி வழங்கல்களை சமநிலையுடன் பேணுவதாகும். இலங்கை தேயிலை சபையின் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட கழிவற்ற கொடுப்பனவுகளை அடிப்படையாகக் கொண்ட நிதிப் பொறுப்புக்கள் தொடர்பான பக்கத் தோற்றம் கீழுள்ள அட்டவணையில் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

| | 2012.12.31 திகதியன்று ரூபா | 2011.12.31 திகதியன்று ரூபா |
|---|---|---|
| 2012 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கான (ரூபா) | | காலவதியாதல் |
| வர்த்தகம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 104,251,048 | பொதுவாக 3 மாதங்கள் |
| 2011 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கான (ரூபா) | | |
| வர்த்தகம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 96,291,683 | பொதுவாக 3 மாதங்கள் |
| 2011 ஜனவரி 1ஆம் திகதியன்று | | |
| வர்த்தகம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 127,848,104 | பொதுவாக 3 மாதங்கள் |
| | 2012 | 2011 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | ரூபா. | ரூபா. |
| கழி : நிதி மற்றும் குறுகிய கால வைப்பு | 104,251,048 | 96,291,683 |
| தேறிய கடன் | (42,831,205) | (40,118,006) |
| மூலதனம் | 61,419,843 | 56,173,677 |
| மூலதனம் மற்றும் தேறிய கடன் | 652,067,602 | 652,067,602 |
| விகிதாசாரம் | 713,487,445 | 708,241,279 |
| புநயசபைெ சயவழை | 1061.66% | 1160.81% |

## 19. உரிய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்கள்

### 19.1 அரச மற்றும் அரசினால் நிருவகிக்கப்படும் நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை தேயிலை சபை பொதுவாக செயற்பாடுகளுக்கு உரியதான கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்றது. உரிய தரப்பினர் எனப்படுவது இலங்கை அரசாகும். இலங்கை அரசின் பல்வேறுபட்ட திணைக்களங்கள் மற்றும் அரசினால் நிறுவகிக்கப்படக் கூடிய நிறுவனங்களுடன் அடங்குகின்றன. கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பான விபரங்கள், தனிப்பட்ட ரீதியில் முக்கியத்துவம் மிக்க மற்றும் ஒரு சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் கூட்டு அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான இலங்கை தேயிலை சபை அரசு மற்றும் அரசினால் நிறுவகிக்கப்படும் நிறுவனங்களுடன் எட்டப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் கீழ் குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றன.

| | 2012.12.31 திகதியன்று ரூபா | 2011.12.31 திகதியன்று ரூபா |
|---|---:|---:|
| கொடுக்கல் வாங்கல்கள் | | |
| வருமானம் | 117,110,000 | 122,000,000 |
| பயன்பாட்டுச் செலவீனம் | 17,880,913 | 16,323,656 |
| | | |
| நிலுவை | | |
| கிடைக்க வேண்டிய நிதி | | |
| ம.தோ.அ.ச (பெருந்தோட்ட அமைச்சு) | 25,000,000 | 25,000,000 |

### 19.2 மூலதன முகாமைத்துவ உள்ளீடு

இலங்கை தேயிலை சபையின் பிரதான முகாமைத்துவ பணிப்பாளர் சபை அடங்கியுள்ளது.

| | 2012.12.31 திகதியன்று ரூபா | 2011.12.31 திகதியன்று ரூபா |
|---|---:|---:|
| குறுகிய கால தொழில் பிரதிலாபங்கள் | 53,250 | 359,500 |

## ஐந்தொகை தினத்திற்குப் பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகை தினத்திற்குப் பின்னர் இடம்பெற்ற சகல முக்கியத்துவம் மிக்க நிகழ்வுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், தேவையான சந்தர்ப்பங்களில் பொறுத்தமான ஒப்பீடுகள் மற்றும் வெளிப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல
My No. எல்பி/டி/எஸ்எல்ரீபீ/எவ்ஏ/2012

ඔබේ අංකය
உமது இல
Your No.

දිනය
திகதி
Date 2014 ஏப்ரல் 25

தலைவி,

இலங்கை தேயிலைச் சபை

**இலங்கை தேயிலைச் சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை தேயிலைச் சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு மற்றும் ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றை கொண்ட 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையிற் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கையொன்று சபையின் தலைவிக்கு 2014 சனவரி 31 இல் வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தலிற்கும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, புத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone. 2887028 /034
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail oaggov@sltnet.lk

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, இலங்கை தேயிலை சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்எவ்ஆர்எஸ் /எல்கேஏஎஸ்)

எல்கேஏஎஸ். 16

(i) நிலையான சொத்துக்களில் காட்டப்பட்ட ரூபா 17,000 மற்றும் ரூபா 224,280 ஆன முறையே கம்பொல மற்றும் பண்டாரவளை பிரந்திய அலுவலகங்களின் காணிகளின் நிலையான பெறுமதி கணக்குகளிற்கு கொண்டுவரப் பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 56.3 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டு முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டதும் தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களில் தற்போதும் பயன்படுத்தப்படுகின்றதுமான சொத்துக்கள் மீள்பெறுமதியிடப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

எல்கேஏஎஸ். 39

1995 இலிருந்து பொல்கெனா தேயிலை தொழிற்சாலையிலிருந்து பெறவேண்டிய ரூபா 4,239,769 தொகை அறவீட்டின் சாத்தியத் தன்மையை கருத்திற்கொள்ளாமல் கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தது.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 இல் பெறப்பட்ட ரூபா 7,233,260 தொகையான தேயிலை உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகளின் அனுமதிப்பத்திர புதுப்பித்தல் கட்டணங்கள் மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு இனங்காணப்பட்டு கணக்குகளிற்கு சீராக்கப்படாமல் நிதி நிலைமைக் கூற்றில் பிற்போட்ட புதுப்பித்தல் வருமானமாக வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2011 ஆம் ஆண்டிற்காக 2010 இல் பெறப்பட்ட ரூபா 5,621,928 தொகையான கழிவு தேயிலை விற்பனையாளர், தேயிலை பொதியிடுவோர், தேயிலை ஏற்றுமதியாளர்கள் மற்றும் களஞ்சியங்கள் என்பவற்றின் பதிவுக் கட்டணங்கள் மீளாய்வாண்டு இறுதிவரை வருமான கணக்கிற்கு சீராக்கப்படாமல் பெறப்பட்ட முற்பணக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 2,870,000 மற்றும் ரூபா 8,992,795 தொகையான முறையே கழிவுத் தேயிலை மற்றும் பச்சை தேயிலை இலை விற்பனையாளர்களிடமிருந்து 2013 ஆம் ஆண்டிற்காக 2012 இல் பெறப்பட்ட அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் பிற்போட்ட புதுப்பித்தல் வருமானக் கணக்கின் கீழ் காட்டப்படாமல் வியாபார செலுத்த வேண்டியவைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) 2011 திசெம்பர் மாதத்திற்கான ரூபா 1,350,250 தொகையான ஊழியர் சேமலாப நிதியத்தின் ஊழியர்கள் மற்றும் தொழில் கொள்வோனின் உதவுதொகைகள் மீளாய்வாண்டிற்கான செலவினமாக கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. ஆதலால், ஊழியர் சேமலாப நிதிய செலவினம் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்டிருந்த வியாபாரச் சந்தைகளின் பங்குபற்றியோரிடமிருந்து பெறப்பட்ட ரூபா 1,464,094 தொகையான முற்பணங்கள் வியாபார சந்தை செலவினங்களிற்கு சீராக்கப்படாமல் செலுத்த வேண்டியவைகளாக காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு வைப்புக்களாக ஏற்றுமதியாளர்களால் செலுத்தப்பட்ட தேயிலை ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் வரி நடைமுறை பொறுப்பாக காட்டப்படாமல் உரிமை மூலதனத்திற்குள் எடுக்கப்பட்டிருந்தது. அந்த வைப்புக்களின் விபரங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

### 2.2.3 பெற வேண்டிய மறறும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்தி சபையிடமிருந்து (ஜேஈடிபீ) ஐந்து ஆண்டுகளிற்கு அதிகமாக காலமாக பெறவேண்டியவையாகக் காட்டப்பட்டிருந்த ரூபா 25,000,000 தொகை மீளாய்வாண்டு இறுதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அறவீடு ஐயத்திற்கிடமாக இருந்தமையால் நட்ட மற்றும் ஐயக் கடன்களின் கீழ் இந்தத் தொகைக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேலும், 2012 யூன் 19 இல் நடைபெற்ற பொது முயற்சிகள் குழு கூட்டத்தின் பிரகாரம், ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்தி சபை மற்றும் சபை ரூபா 16 மில்லியன் பெறுமதியான கந்தானவிலுள்ள ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்கு சொந்தமான இலங்கை தேயிலை அருங்காட்சியத்தின் உரிமையாண்மையை பெறுவதற்கும் மீதி ரூபா 8 மில்லியனைப் பதிவழிப்பதற்கும் தீர்மானத்திற்கு வந்திருந்தன. எவ்வாறாயினும், இந்த நடைமுறை 2014 சனவரி 31 இல் கணக்காய்வு திகதிவரை பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

சபையின் தலைவி உரிமையாண்மையை மாற்றுகின்ற நடைமுறையை துரிதப்படுத்தும் நோக்கில் ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்தி சபையுடன் இந்த விடயங்களினை இறுதியாக்குவதற்கு அமைச்சு அலுவலகர்களுடன் பல கூட்டங்களிற்கு சமூகமளித்திருந்தது என குறிப்பிடடிருந்தார்.

(ஆ) சபையானது மீளாய்வாண்டின் போது இந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்ட திறைசேரி மானியங்களை விஞ்சி சபையின் சொந்த நிதிகளிலிருந்து ரூபா 2,669,759 தொகையான தொழிற்சாலை நவீனமயப்படுத்தல் மற்றும் மீள்நடுகைகளிற்காக தேயிலைத் தொழிற்சாலைகள் மற்றும் பொருந்தோட்டங்களிற்கு உதவு தொகைகளை வழங்கியிருந்தது. திறைசேரியிலிரந்து இத்தொகை அறவிடப்பட முடியாதிருந்த போதிலும் சபையானது திறைசேரியிலிருந்து பெறவேண்டியவையாக கணக்கிடப்பட்டிருந்தது.

(இ) மூன்று ஆண்டுகளிற்கு அதிகமான காலமாக நலன்புரி சங்கத்திடமிருந்து பெறவேண்டியவையான ரூபா 261,383 தொகையான முற்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டிலும்கூட அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 53,602 தொகையான தரவு செயற்படுத்தல் கட்டணங்கள் மற்றும் பதவியணியினர் பிரயாணம் என்பவற்றிற்கான ஏற்பாடுகள் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக நடைமுறைப் பொறுப்புக்களாக காட்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிலும்கூட தீர்ப்பதற்கு சபையால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றிக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) (i) 1957 இன் 51 ஆம் இலக்க தேயிலைக் கட்டுப்பாட்டு அதிகாரச் சட்டத்தின் 49 ஆம் பிரிவு மற்றும் 1975 இன் 14 ஆம் இலக்க இலங்கை தேயிலைச் சபை கட்டளைச் சட்டத்தின் 25(3) ஆம் பிரிவு | அமைச்சரவையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் 2010 யூலை 29 இல் சபைத் தீர்மானத்தின் பிரகாரம், 2011 இலிருந்து கருத்திற்கொள்ள வேண்டிய தொகைகளால் பதிவுக் கட்டணம், பதிவு புதுப்பித்தல் கட்டணம் மற்றும் அனுமதிப்பத்திர கட்டணம் என்பன அதிகரிக்கப்பட்டிருந்ததுடன் அதிகாரச் சட்டங்களின் பிரகாரம் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>இந்த விடயம் ஏற்கனவே சட்டமா அதிபர் |

நாயகத்திற்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்தது என சபையின் தலைவி குறிப்பிட்டிருந்தார்.

(ii) 1975 இன் 14 ஆம் இலக்க இலங்கை தேயிலைச் சபை கட்டளைச் சட்டத்தின் 13 மற்றும் 14 ஆம் பிரிவுகள்

செஸ்வரி நிதியத்தின் தாபிப்பு மற்றும் செயற்பாடு என்பன அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கி மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

அதிகாரச் சட்டத்தைத் திருத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதன்படி, இந்த அதிகாரச் சட்டத்திற்கு வேண்டப்பட்ட திருத்தத்தை செயற்படுத்துவதற்கு உப குழுவொன்று வடிவமைக்கப்பட்டிருந்தது என சபையின் தலைவி குறிப்பிட்டிருந்தார்.

(ஆ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 132 ஆம் பிரிவு

தேயிலை மேம்பாட்டுச் பிரிவுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஒரு செயற்திட்ட ஆலோசனையாளரிடமிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரி கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசாங்க நிதிப் பிரமாணங்கள்

(i) நி.பி 507

நிதிப் பிரமாண அறிவுறுத்தல்களின் பிரகாரம், புத்தக மீதிகள் மற்றும் பெறுமதிகள் என்பன கணிப்பீட்டுச் சபை அறிக்கைகளிற்குள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, புத்தகத்தில் பதியப்பட்ட அளவிற்கும் பௌதீக ரீதியாகவுள்ள மீதிக்கும் இடையிலான முரண்பாடுகள் கணிப்பீட்டுச் சபை அறிக்கைகளில் காட்டப்பட்டிருக்காததுடன் கணிப்பீட்டுச் சபையின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது.

(ii) நி.பி 676(2)

பிரமாணங்களைக் கடைப்பிடிக்காமல் மூன்று மொழிகளிலும் ஒன்பது உத்தியோகபூர்வ விளம்பரங்கள் வெளியிடப்பட்டிருக்காததுடன் 07 உத்தியோகபூர்வ விளம்பரங்கள் பல சந்தர்ப்பங்களில் ஒரு மொழியில்

வெளியிடப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| (ஈ) | 1978 திசெம்பர் 12 ஆம்திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம், நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை.<br><br>நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளது வரையாக்கப்படுகின்றன என சபையின் தலைவி குறிப்பிட்டிருந்தார். |
| (உ) | பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள் | |
| | (i) 1990 ஒக்தோர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க | மோட்டார் வாகனங்களின் எரிபொருள் நுகர்வு ஒவ்வொரு ஆறு மாதங்களிற்கு ஒருதடவை பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 2008 யூன் 26 ஆந் திகதிய 14/2008 ஆம் இலக்கம் | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு முரணாக 2011 திசெம்பர் முதல் 2012 மே வரை சபையின் தலைவிக்கு மாதந்த போக்குவரத்து வாடகையாக ரூபா 75,000 படி செலுத்தப்பட்டிருந்தது.<br><br>அந்தப் படிக்காக சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது என சபையின் தலைவி குறிப்பிட்டிருந்தார். |
| (ஊ) | 2006 மார்ச் 01 ஆந் திகதிய 9 ஆம் இலக்க தேசிய கொள்வனவு முகவராண்மை சுற்றறிக்கை | (i) ரூபா 6.28 மில்லியன் பெறுமதியான கட்டிட புதுப்பித்தல் ஒப்பந்தத்திற்காக கொள்வனவு நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.<br><br>(ii) ரூபா 4.68 மில்லியன் தொகையான மரத் தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தங்கள் கொள்வனவு வழிகாட்டல்களை கடைப்பிடிக்காமல் (குறிப்பு 3.4) பதிவு செய்யப்படாத வழங்குநர்களிற்கு வழங்கப்பட்டிருந்தன.<br><br>(iii) கொள்வனவு வழிகாட்டல்களிற்கு முரணாக (குறிப்பு 2.4) கொள்வனவு குழுவின் அங்கீகாரத்திற்கு முன்னர் ரூபா 6.5 மில்லியன் பெறுமதியான மோட்டார் |

வாகனம் கொள்வனவு செய்வதற்கு ரூபா 500,000 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

சுங்கவரி அதிகரிப்பு காரணமாக ரூபா 2 மில்லியனை சேமிப்பதற்கான அவசர தேவைக்காக மோட்டார் வாகனம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் குழு முறையாக அங்கீகாரம் செய்வதற்கு முன்னர் கொள்வனவு குழு கலந்தலோசித்து முற்பணம் செலுத்துவதற்கு உடன்பாடு காணப்பட்டது என சபையின் தலைவி குறிப்பிட்டிருந்தார்.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் தொழிற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 10,859,989 ஆன மிகைக்கு எதிராக ரூபா 11,390,437 ஆன தேறிய பற்றாக்குறையை விளைவித்திருந்தது, ஆதலால், அது நிதிசார் விளைவுகளில் ரூபா 22,250,426 ஆன வீழ்ச்சியைக் காட்டுகின்றது. மீளாய்வாண்டிற்காக சபையின் அனுமதிப்பத்திரக் கட்டணம், பதிவு மற்றும் புதுப்பித்தல் வருமானம் குறைவடைந்தமை மற்றும் நிர்வாகம் மற்றும் செயற்பாட்டு செலவினம் அதிகரித்தமை என்ற காரணங்கள் காரணமாக இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக இருந்தது.

### 3.2. செயற்பாட்டு மீளாய்வு

#### 3.2.1 சபையின் செயற்பாடுகள்

தேயிலை ஆணையாளரின் பிரிவு, தேயிலை ஏற்றுமதிப் பிரிவு, தேயிலை மேம்பாட்டுப் பிரிவு, பகுப்பாய்வு ஆய்வு கூடம் மற்றும் தேயிலை ருசி பார்க்ககும் பிரிவு என்பவற்றின் ஊடாக இலங்கை தேயிலை கைத்தொழில் நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்துதல், சந்தைப்படுத்தல், இலங்கை மற்றும் வெளிநாடுகளில் "இலங்கை தேயிலை" ஐ ஊக்குவத்தல், தேயிலை மீதான சந்தை ஆராய்ச்சிகளை நடாத்துதல், தேயிலை கைத்தொழிலிற்கான சந்தை அறிவுத்திறன்களை வழங்குதல், ஆய்வு கூடம் மற்றும் தேயிலை நுட்ப சேவைகளை வழங்குதல் என்பன பிரதான பணிகளாகும்.

(அ) தேயிலைக் கைத்தொழிலின் செயலாற்றல்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்ற தரவுகளின்படி, முன்னைய 4 ஆணகளுடன் ஒப்பிடப்பட்டு மீளாய்வாண்டிற்கான தேயிலை உற்பத்தி மற்றும் இலங்கையிலிருந்தான ஏற்றுமதிகள் மற்றும் தேயிலை உற்பத்தி

மற்றும் தேயிலை ஏற்றுமதி ஊக்குவிப்பு என்பவற்றின் முன்னேற்றத்திற்காக சபையால் செய்யப்பட்ட செலவினம் என்பன கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | இலங்கையில் தேயிலை உற்பத்தி | தேயிலை உற்பத்தி முன்னேற்றத்திற்காக தேயிலைச் சபையால் செய்யப்பட்ட அபிவிருத்திச் செலவினம் | இலங்கையில் இருந்தான தேயிலை ஏற்றுமதிகள் (மீள் ஏற்றுமதிகள் உள்ளடங்கலாக) | தேயிலை ஏற்றுமதியை அதிகரிப்பதற்காக தேயிலைச் சபையால் செய்யப்பட்ட ஊக்குவிப்புச் செலவினம் | ஒரு கிலோ கிராமிற்கான உற்பத்திக் கிரயம் | ஒரு கிலோ கிராமிற்கான விற்பனை விலை |
|---|---|---|---|---|---|---|
| | கிலோகிராம் (மில்லியன்) | ரூபா | கிலோகிராம் (மில்லியன்) | ரூபா | ரூபா | ரூபா |
| 2008 | 318.7 | 3,644,246 | 319.8 | 109,358,718 | 231.49 | 310.81 |
| 2009 | 291.1 | 24,552,506 | 289.7 | 102,286,182 | 269.01 | 360.45 |
| 2010 | 331.4 | 10,394,094 | 324.4 | 58,843,391 | 313.17 | 370.61 |
| 2011 | 327.5 | 29,133,757 | 322.6 | 25,755,657 | 355.02 | 360.53 |
| 2012 | 328.4 | 23,669,759 | 319.9 | 36,021,266 | தரப்பட வில்லை | 392.03 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தேயிலை ஊக்குவிப்புச் செலவினம் ரூபா 10.26 மில்லியனால் அதிகரித்திருந்த போதிலும் தேயிலை ஏற்றுமதிகள் 2.7 மில்லியன் கிலோகிரம்களால் குறைவடைந்திருந்தது.

(ii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தேயிலை உற்பத்திகள் 0.9 மில்லியன் கிலோகிரம்களால் அதிகரித்திருந்தது.

(iii) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கைகளின் பிரகாரம், தேயிலை ஆராய்ச்சி நிறுவகம், தேயிலை சிறுநில உடமையாளர் அதிகாரசபை மற்றும் மற்றும் சபை என்பன சேர்ந்து சிறு நில உடமையாளர் மற்றும் தேயிலை தொழிற்சாலைகளின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு விசேடமாக தேயிலை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை தொழிற்சாலையை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டிருந்தது. தேயிலை சிறு நிலவுடமையாளரின் உற்பத்தி மற்றும் பச்சைத் தேயிலை இலை கையாள்பவர் என்பவற்றைக் கண்காணிப்பதற்கு இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விரிவாக்கல் உத்தியோகத்தர் (கள ஒருங்கிணைப்பாளர்) நியமிப்பதற்கு திட்டமிடப்பட்டது. எனினும், இந்நடவடிக்கை மீளாய்வாண்டின் இறுதிவரை அமுலாக்கப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சித்திட்டம் மாத்தறை மற்றும் மத்துகம பிராந்திய அலுவலகங்களில் தொடங்கப்பட்டிருந்ததுடன் தொடர்புபட்ட குழு வேலையில் சில நடைமுறைரீதியான கஷ்டங்கள் காரணமாக இது ஏனைய பிராந்திய அலுவலகங்களில் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை என்று சபையின் தலைவி குறிப்பிட்டிருந்தார்.

(ஆ) வெளிநாட்டு வியாபார சந்தைகளில் பங்குபற்றல்

வெளிநாட்டு வியாபார ஊக்குவிப்பு வேலைகள் சபையால் பொறுப்பேற்கப்பட்டிருந்ததுடன் பிரதான தேயிலை இறக்குமதி செய்கின்ற நாடுகளில் நடைபெற்ற சர்வதேச உணவு மற்றும் மென் பாணங்களிற்கான வியாபாரச் சந்தையில் சுத்தமான இலங்கை தேயிலை சின்னங்களை ஊக்குவிப்பது தொடர்பில் 2009 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டின் போதும் அனுசரணை வழங்கப்பட்டது. 2009 ஆம் அண்டிலிருந்து வெளிநாட்டு வியாபார சந்தைகளிற்கான பங்குபற்றல் கீழே தரப்படுகின்றன.

| | 2012 | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|
| சபையால் நடாத்தப்பட்ட பொருட்காட்சிகளின் எண்ணிக்கை | 17 | 15 | 18 | 25 |
| பங்குபற்றிய கம்பனிகளின் எண்ணிக்கை | தரப்படவில்லை | 94 | 101 | 81 |

(இ) பதிவு நடவடிக்கைகள்

2009 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலுள்ளவாறு பின்வரும் தேயிலை உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகளிற்கான பதிவு செய்தல், சான்றுபடுத்தல் மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்கல் என்பன கீழே தரப்படுகின்றன.

| பதிவு மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்கல் | 2012 எண்ணிக்கை | 2011 எண்ணிக்கை | 2010 எண்ணிக்கை | 2009 எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| பச்சை தேயிலை வியாபாரிகள் | 1982 | 1914 | 1866 | 1703 |
| செயற்படும் தேயிலை தொழிற்சாலைகள் | 702 | 695 | 712 | 697 |
| தேயிலை ஏற்றுமதியாளர்கள் | 383 | 363 | 347 | 325 |
| தேயிலை பொதியிடுவோர் | 412 | 392 | 375 | 351 |
| இறக்குமதியாளர்கள் | 192 | 184 | 57 | 51 |
| தேயிலை களஞ்சிப்படுத்துவோர் | 446 | 404 | 359 | 229 |
| வியாபரச் சின்னம் (லயன் லோகோ) | 98 | 99 | 96 | 94 |

(ஆண்டறிக்கைகள் 2009-2012)

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

2012 ஆம் ஆம் ஆண்டறிக்கையின் பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தொழிற்சாலை நவீனமயப்படுத்தலுக்கான உதவுதொகைகள் ரூபா 8.2 மில்லியனால் குறைவடைந்திருந்ததுடன் 16 செயற்பாடற்ற தொழிற்சாலைகளின் அதிகரிப்பும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) தேயிலை பரீட்சித்தல் பிரிவின் நடவடிக்கைகள்

வாடிக்கையாளர் பொதிகள், தனியார் துறை விற்பனைகள் மற்றும் நேரடி விற்பனைகளின் கண்காணிப்பு மற்றும் உறுதிப்படுத்தல் என்பவற்றிற்காக தேயிலைகளின் கைதவிர்ப்பில் ஏதாவது வழங்கப்பட்ட புள்ளி மற்றும் சின்னமிடப்பட்ட உற்பத்திகளிற்கான லயன் லொகோ சான்றிதழ் வழங்கல் என்பவற்றில் ஆகக் குறைந்த தர நியமத்தை கண்காணிக்கப்ட பேணுகின்ற ஐஎஸ்ஓ 3720 ஐ பேணுவதற்கு தேயிலை ருசி பார்த்தல் பிரிவால் ஒவ்வொரு ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்ட மாதிரி தேயிலைப் ருசி பார்த்தல் கீழே தரப்படுகின்றன.

| | 2012 | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|
| தரக் கட்டுப்பாட்டிற்கான தேயிலை ருசி பார்த்தல் | எண்ணிக்கை | எண்ணிக்கை | எண்ணிக்கை | எண்ணிக்கை |
| - ஏலத்திற்கு முன் | 299,770 | 151,767 | 164,336 | 130,007 |
| - கப்பலில் ஏற்ற முன் | 4,915 | 4,981 | 6,183 | 6,620 |
| - இறக்குமதிகள் | 1,907 | 4,615 | 6,404 | 5,552 |
| - இறக்குமதிகளின் முன் | 1,299 | 3,068 | 2,761 | 2,597 |
| தனியார் துறை விற்பனை வழிகளின்மதிப்பீட்டுச் சான்றிதழ் உறுதிப்படுத்தல் | 6,632 | 5,255 | 5,025 | 11,523 |
| நேரடி விற்பனைகளை உறுதிப்படுத்தல் | 1,768 | 1,550 | 1,470 | 1,349 |

(உ) பகுப்பாய்வுஆய்வு கூட சேவைகள்

தேயிலை ஆணையாளருடைய பிரிவிலிருந்து உள்ளக ரீதியாகவும் தேயிலை ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து வெளிவாரியாகவும் கிடைத்த மாதிரிகளிற்கான தர நியம சான்றிதழை வழங்குவதன் மூலம் தர நியம முகாமைத்துவத்தின் முன்னேற்த்தைப் பேணும் நோக்கத்துடன் பேணப்பட்ட பகுப்பாய்வு ரீதியான ஆய்வு கூட சேவைகள் மூலம் ஒவ்வொரு ஆண்டிலும் பரீட்சிக்கப்பட்ட மாதிரிகள் மற்றும் உழைத்த வருமானம் என்பன பின்வருமாறு உள்ளன.

| ஆண்டு | பரீட்சிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை | வருமானம் |
|---|---|---|
| | | ரூபா |
| 2012 | 5,042 | 4,858,000 |
| 2011 | 7,933 | 6,071,200 |
| 2010 | 7,025 | 4,171,600 |
| 2009 | 7,679 | 3,787,900 |

(ஆண்டறிக்கைகள் 2009-2012)

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 36.4 சதவீதத்தால் பரீட்சிக்கப்பட்ட மாதிரிகளின் குறைவு காரணமாக 2012 ஆம் ஆண்டில் ரூபா 1.2 மில்லியனால் மாதிரி பரீட்சிப்புகளிலிருந்தான வருமானம் குறைவடைந்திருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) மாதிரி பரீட்சிப்பிற்கான ஆய்வுகூட பதவியணியினரின் பற்றாக்குறை, தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆலோசனை மற்றும் பதவியணியினரின் உதவி என்பவற்றிற்காக ஒரு மாதத்திற்கு ஆலோசனைக் கட்டணம் ரூபா 30,000 மற்றும் ஏனைய பதவியணியினருக்கு ரூபா 25,000 என்பவற்றை ஆய்வுகூடத்தின் தேறிய வருமானமாத்தில் 50 சதவீத கொடுப்பனவு அடிப்படையில் ஒரு ஆண்டிற்கு 2011 ஒக்தோபரில் இருந்து பெறப்பட்டிருந்தது. முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஆலோசனைக் கட்டணம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளாக முறையே ரூபா 52,000 மற்றும் ரூபா 335,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும், பரீட்சிப்பு முறைப்படி செய்யப்பட்டிருக்கவில்லை என்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. உடன்பட்ட காலத்திற்காக ஆய்வு கூடத்தின் தேறிய வருமானத்தின் 50 சதவீதமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

கட்டணக் கொடுப்பனவு அடிப்படையில் விஞ்ஞானிகளைப் பெறுவதற்கு தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்துடன் புரிந்துணர்வு விஞ்ஞாபனம் (எம்ஓயூ) கைசாத்திடப்பட்டு 2011 செப்தெம்பரில் பதவியணியினர் பற்றாக்குறையினை சபையில் பரீட்சிப்பு வசதி மீது கைத்தொழில் தேவைப்படுத்தியமைய சீராக்குவதற்காக புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தை கைசாத்திட்டிருந்தது. புரிந்துணர்வு விஞ்ஞாபனத்தின் படி, நோக்கங்கள் அடையப்பட்டிருக்காமையால் எதிர்பார்க்கப்பட்டவாறு எவ்வித வருமானமும் உருவாக்கப்பட்டிருக்கவில்லை என்று சபையின் தலைவி குறிப்பிட்டிருந்தார்.

3.2.2 தேயிலை ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களிற்கான வரிவிதிப்பு

2010 ஒக்தோபர் 27 இல் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையில், ஒரு கிலோகிராமிக்கு ரூபா 3.50 ஆக தேயிலை ஏற்றுமதியாளர்களிடமிருந்து சபையால் 2010 நவம்பர் 01 இலிருந்து 2012 திசெம்பர் 31 வரையான காலத்தின் போது தேயிலை ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களிற்காக ரூபா 2,535.22 மில்லியன் தொகை சேகரிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முறையான திட்டம் மற்றும் முகாமைத்துவம் இன்மையால், அத்தகைய சேகரிப்பான ரூபா 2,535.22 மில்லியனில் ரூபா 120.62 மில்லியன் அல்லது 4.76 சதவீதம் மாத்திரம் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் நடாத்தப்படுவதிலுள்ள தாமதம் காரணமாக மீளாய்வாண்டின் இறுதிவரை ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களிற்காக ரூபா 1,150 மில்லியன் பாதீட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. அதில், மீளாய்வாண்டின் போது உள்ளபடியான வரிச் சேகரிப்பு ரூபா 36.44 மில்லியனை விஞ்சியிருந்த போதிலும் ரூபா 36.02 மில்லியன் அல்லது 3.13 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) வரி சேகரிப்பின் பிரதான நோக்கம் தேயிலை ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்களில் பயன்படுத்துவதற்காக என்று இருந்த போதிலும் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் நடாத்தப்படுவதிலுள்ள தாமதம் காரணமாக மீளாய்வாண்டின் போது அப்பணம் குறுகியகால முதலீடுகளில் முதலீடு செய்யப்பட்டடிருந்ததுடன் வட்டியாக ரூபா 211.48 மில்லியன் தொகை உழைக்கப்பட்டிருந்தது.

(ஈ) தேயிலை தோட்டங்களிற்கு இடையில் வருடாந்தம் போட்டிகளை நடாத்துவதற்கு ரூபா 2.3 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் இந்நடவடிக்கை திட்டமிட்டவாறு மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) 2012 ஒக்தோபர் 27 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளிற்கு ஒரு தடவையும் கைத்தொழில் உடமையாளர்களால் காலரீதியான முன்னேற்றத்தை மீளாய்வு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அத்தகைய மீளாய்வு உடமையாளர்களல் மேற்கொள்ளப்பட்டிருந்ததா என்பதற்கான கணக்காய்விற்கான சான்றுகள் எதுவும் கிடைத்திருக்கவில்லை. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் வரைவு ஆண்டறிக்கையின் பிரகாரம், கௌரவ பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

கைத்தொழில் மற்றும் வியாபாரத்தின் முன்னுரிமை மற்றும் எதிர்பார்ப்புகளுடன் இணங்கியிருக்க வேண்டியதுடன் ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் குழுவை (பிஎம்சீ) மீளமைத்திருந்ததுடன் புதிய ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் குழு தொடங்க வேண்டியிருந்த புதிய தந்திரோபாய சந்தைப்படுத்தல் திட்டமொன்றை உருவாக்கி 2013 இன் கடைசிப் பகுதியின் போது நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும்.

(ஊ) புதிய சந்தைப்படுத்தல் பகுதிக்காக பிரச்சார தணிக்கை நாடுபூராவும் பரிந்துரைக்கப்பட்ட ஊக்குவிப்பு நடவடிக்கைகாக 2012 ஆகஸ்ட் 02 இல் ரூபா 130,000 மாதாந்த சம்பளத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் செயற்திட்ட ஆலோசனையாளர் நியமிக்கப்பட்டிருந்தார். எவ்வாறாயினும், இந்த நடவடிக்கை 2013 செப்தெம்பர் 30 இல் கணக்காய்வு திகதிவரை அமுலாக்கப்பட்டிருக்காததுடன் செயற்திட்ட ஆலோசனையாளரும் 2013 ஆகஸ்ட் 01 இல் சேவையிலிருந்தும் இராஜினாமா செய்திருந்தார்.

(எ) 2012 வருடாந்த சர்வதேச தேயிலை குழுவின் புள்ளிவிபர சஞ்சிகையின் பட்டாளத்தின் பிரகாரம், துருக்கி, ஐக்கிய இராச்சியம், எகிப்து, மொரோக்கோ மற்றும் ஆப்கானிஸ்தான் என்ற நாடுகளே உலகத்தின் முன்னனி ஐந்து தேயிலை வாடிக்கையாளர்களாகும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது சபையால் அந்த நாடுகளில் எவ்வித ஊக்குவிப்பு நடவடிக்கைகளும் நடாத்தப்பட்டிருக்கவில்லை என்னு அவதானிக்கப்பட்டது. மேற்குறிப்பட்ட சஞ்சிகையின் பிரகாரம், இலங்கை தேயிலையின் நிலைமை கடந்த நான்கு ஆண்டுகளாக தொடர்ச்சியாக மூன்றாவது இடத்தில் இருந்தது. எவ்வாறாயினும், உலகச் சந்தையை பிடிப்பதற்கு சபையால் முறையான ஊக்குவிப்பு திட்டமெதுவும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2.3 செயல்நடவடிக்கை திட்டத்தின்படி நடாத்தப்பட்டிருக்காத நடவடிக்கைகள்

திட்டமிடப்பட்டவாறு மீளாய்வாண்டின் போது பின்வரும் நடவடிக்கைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

| நடவடிக்கை | மதிப்பிடப்பட்ட தொகை |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| ஏல நடைமுறைகளின் முந்திய பிந்திய தானியங்கி | 60 |
| சுழற்சி நிதியத்தின் கீழ் மென்மையான கடன் திட்டம் | 10 |
| அறுவடைக்கு பிந்திய சேதங்களை குறைத்தல் | 20 |

14

ஏல நிகழ்ச்சித்திட்டத்தின் தானியங்கி கொழும்பு தேயிலை வியாபார சங்கத்தால் நடாத்துவதற்கு பிரேரிக்கப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், கொள்கை தீர்மானம் காரணமாக, இந்த நிகழ்ச்சதிட்டம் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. சுழற்சி நிதியத்தின் கீழான மென்மையான கடன் திட்டம் அமுலாக்கப்பட்டிருந்ததுடன் 09 சமுதாய அமைப்புகளிற்காக ஏறத்தாழ ரூபா 05 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்ததுடன் அறுவடைக்கு பிந்திய சேதக் குறைப்பு நிகழ்ச்சித் திட்டம் நிதி இன்மை காரணமாக அமுலாக்கப்பட்டிருக்கவில்லை என்று சபையின் தலைவி குறிப்பிடடிருந்தார்.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

சபையால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் ஆளணி நிலைமை கீழே தரப்படுகின்றன.

| பதவி | அனுமதிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்கள் | மிகுதியான பதவிகள் |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 04 | 03 | 01 | - |
| இரண்டாம் தர நிலை | 27 | 23 | 12 | 04 |
| மூன்றாம்தர நிலை | 193 | 155 | 40 | 06 |
| ஆரமப நிலை | 76 | 69 | 07 | - |
| மொத்தம் | 300 | 250 | 60 | 10 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட 2011 திசெம்பர் 01 ஆந் திகதிய டிஎம்எஸ்/சீ/2/02/62 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், 300 எண்ணிக்கையான ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்நேரத்தில் சேவையிலிருந்த உடமையார்களிற்கு தனிப்பட்ட ரீதியாக 10 எண்ணிக்கையான மிகுதிப் பதவிகள் தனிப்பட்ட ரீதியில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும்)/ உதவிப்பணிப்பாளர் (ஐரீ), பிரதி மற்றும் உதவி தேயிலை ஆணையாளர்கள், தொழில்நுட்ப உதியாளர்கள் (ஆய்வுகூடம்) போன்றோர் உள்ளடங்கலாக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 60 வெற்றிடங்களாக இருந்தன.

(ii) மீளாய்வாண்டின் போது ரூபா 803,483 செலவழித்து சபையின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக புதினப் பத்திரிகைகளில் பதின்மூன்று விளம்பரங்கள் பிரசுகிகப்பட்டிருந்தன. மேற்குறிப்பட்ட பதின்மூன்றில், ரூபா 151,782 செலவிலான இரண்டு விளம்பரங்கள் தவறுகளுடன் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 317,296

செலவிலான இன்னொரு ஆறு விளம்பரங்கள் எந்தவொரு விண்ணப்பதாரிகளையும் தெரிவுசெய்யப்படாமையால் பயனற்றிருந்தன.

3.4. **சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேயிலை ஆணையாளர் பிரிவு குடியிருந்த கட்டிடம் 2012 திசெம்பர் 31 இல் காலிசெய்யப்பட்டிருந்ததுடன் 2005 இலிருந்து 2011 மே 31 வரை ரூபா 2.8 மில்லியன் செலவழித்து நடுவர்தீர்ப்பு ஊடாக வளவின் உடமையாளரிடம் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 2.4 மில்லியன் தொகையான வாடகை முற்பணம் சபையால் அறவிடப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், வளவின் உடமையாளர் கட்டிடத்திற்கான சேதங்களிற்காகவும் 2003 சனவரியிலிருந்து செப்தெம்பர் வரை கட்டிடத்தை குத்தகைக்கு விடப்படவேண்டிய பகுதியை மீளமைப்பதற்கு தவறியிருந்ததற்காகவும் 20 சதவீத வட்டி மற்றும் 15 சதவீத பெறுமதி சேர் வரியுடன் ரூபா 4.9 மில்லியன் கோருவதற்காக 2008 ஒக்தோபர் மாதத்தில் சபைக்கு எதிராக நடுவர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். சபையானது இந்த வழக்கிற்கு எதிராக மேன்முறையீடு செய்திருந்ததுடன் விசாரணைகள் இன்னமும் செயற்பாட்டில் உள்ளன.

(ஆ) சபையின் ஒவ்வொரு பிரிவிற்கும் தேவைப்பட்ட செயற்பாடுகளிற்கு ஆதாரவளிப்பதற்காக விசேட பிரயோக மென்பொருள் மற்றும் தொடர்புபட்ட வன்பொருள் வழங்கி பொருத்துவதற்காக 2009 திசெம்பர் 31 வரை தனியார் நிறுவனமொன்றிற்கு சபையால் ரூபா 9,038,930 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த வலையமைப்பு முறைமையின் விநியோகம் மற்றும் பொருத்துதல் 2005 ஏப்ரல் 07 இல் இரண்டு தரப்பினருக்கும் இடையில் கைசாத்திடப்பட்ட உடன்படிக்கையின்படி 90 நாட்களிற்குள் பூர்த்தியாக்கப்பட வேண்டும். இரண்டு தரப்பினர் மத்தியிலும் குறைபாடுகளிருந்தமை காரணமாக பூர்த்தியாக்கல் காலம் 2008 ஏப்ரல் 01 வரை பரஸ்பரம் நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த நடவடிக்கையின் ரூபா 2,628,958 பெறுமதியான ஒரு பகுதி மாத்திரமே பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி மீளாய்வாண்டு இறுதிவரை பூர்த்தியாக்கப்படாமல் நடைபெறும் வேலையாக கணக்கில் காட்டப்பட்டிருந்தது எனக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(இ) குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தமல் பின்வரும் முற்பணங்கள் திருப்பிச் செலுத்தப்பட்டிருந்தது.

| முற்பணத்தின் திகதி | காரணம் | தொகை | திருப்பிச் செலுத்தப்பட்ட திகதி | கையில் வைத்திருந்த நாட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| 2012.01.30 | பானத்திற்கான 50 சதவீத எவ்ஏஓ/ஐஜீஜீ | 100,000 | 2012.03.02 | 31 |
| 2012.10.11 | நானாவித செலவினம் | 20,000 | 2012.10.22 | 10 |
| 2012.07.18 | 08 மாதிரிகளின் பகுப்பாய்வு | 16,800 | 2012.10.26 | 96 |

(ஈ) கனடா, போலந்து, ஜேர்மனி மற்றும் பாங்கொக் தூதரக கணக்குகளிலுள்ள ரூபா 611,178 மொத்தமான வங்கி மீதிகள் மூன்று ஆண்டுகளிற்கு மேலாக பயனற்றிருந்தன.

4. **முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் பொழுது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் நிதியதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கையின் மூலம் சபை தலைவியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பதிவேட்டுப் பொருளிருப்புக் கட்டுப்பாடு
(ஆ) கணக்கீடு
(இ) பெறவேண்டியவைகளும் செலுத்த வேண்டியவைகளும்
(ஈ) ஊக்குவிப்பு நடவடிக்கைகள்
(உ) கணக்கீட்டுப் பதிவேடுகளின் பேணுகை

ஒப்பம்: எச்.ஏ.எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*M*

17

# இலங்கை தேயிலை சபையின் அலுவலக உள்ளீடு

பிரதான அலுவலகம்

**இலங்கை தேயிலை சபை**
574, காலி வீதி, கொழும்பு 03, இலங்கை
த.பெ.இல 1750, கொழும்பு, இலங்கை

தொலைபேச : 011 2582121
011 2583687
துரித : 011 2587814
தொலைநகல் : 0112582122

இலத்திரனியல் : teaboard@pureceylontea. com

இணையதளம் :www.pureceylontea.com

தலைவர்
தொலைபேசி : 011 2587814 /2590968
தொலைநகல் : 0112585701
இலத்திரனியல் : Chairman@pureceylontea.com

பணிப்பாயளர் நயாகம்
தொலைபேசி: 011 2587814 /2508991
தொலைநகல் : 0112582122
இலத்திரனியல: dgsltb@pureceylontea.com

## தேயிலை ஆணையாளர் பிரிவு

தேயிலை ஆணையாளர்
தொலைபேசி : 0112580182/2580152/2502485/2584845/2587814/2587773
மின்னஞ்சல் : Comtea
தொலைநகல் : 0112580161
இலத்திரனியல்: teacomm@pureceylontea.com

## தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு.

பணிப்பாளர் (ஊக்குவிப்புப் பரிவு) கப்லக்ஸ் பிரபகண்டா கொழும்பு இலங்கை.
தொலைபேச : 0112583343/ 0112587814 /0112581418 / 0112580169
தொலைநகல் : 0112587341
இலத்திரனியல் : promotion@pureceylontea.com

## தேயிலை ஏற்றுமதிப் பிரிவு

பிரதி தேயிலை ஆணையாளர் (ஏற்றுமதி)
தொலைபேசி : 0112502485/2584845/2587814/2504090/2587773
டெலிகிராம் : Comtea
தொலைநகல ் : 0112584844
இலத்திரனியல் :exports@pureceylontea.com

பகுப்பாய்வு ஆய்வுகூடம்

| | |
|---|---|
| பணிப்பாளர் (ஆய்வுகூடம்) | தொலைபேசி : 0112587814/2581576<br>தொலைநகல் : 0112581576<br>இலத்திரனியல்: lab@pureceylontea.com |

பிராந்திய அலுவலகங்கள்

| | |
|---|---|
| கம்பொல | உதவித் தேயிலை ஆணையாளர்<br>பிரதேச அலுவலகம்<br>இலங்கை தேயிலை சபை<br>140, அபகஹமுவ வீதி, கம்பொல<br>தொலைபேசி / தொலைநகல் : 081-2352279<br>இலத்திரணியல் : atcgp@pureceylontea.com |
| மாத்தறை | உதவித் தேயிலை ஆணையாளர்<br>பிரதேச அலுவலகம்<br>இலங்கை தேயிலை சபை<br>46, வில்பெரட் குணசேகர மாவத்தை, கோட்டை மாத்தறை<br>தொலைபேசி / தொலைநகல் : 041-2222636<br>இலத்திரனியல் : atcmt@pureceylontea.com |
| மதுகம | உதவித் தேயிலை ஆணையாளர்<br>பிரதேச அலுவலகம்<br>இலங்கை தேயிலை சபை<br>281, அகலவத்தை வீதி, மதுகம<br>தொலைபேசி / தொலைநகல் : 034-2247444<br>இலத்திரனியல் : atcgl@pureceylontea.com |
| இரத்தினபுரி | உதவித் தேயிலை ஆணையாளர்<br>பிரதேச அலுவலகம்<br>இலங்கை தேயிலை சபை<br>61/1, புதிய நகரம், இரத்தினபுரி<br>தொலைபேசி / தொலைநகல் : 045-2222136<br>இலத்திரனியல் : atcrt@pureceylontea.com |
| பண்டாரவளை | உதவித் தேயிலை ஆணையாளர்<br>பிரதேச அலுவலகம்<br>இலங்கை தேயிலை சபை<br>விசாகா மாவத்த, புதிய பதுளை வீதி, பண்டாரவளை<br>தொலைபேசி / தொலைநகல் : 057-2222812<br>இலத்திரனியல் : atcbw@pureceylontea.com |
| காலி | உதவித் தேயிலை ஆணையாளர்<br>பிரதேச அலுவலகம்<br>இலங்கை தேயிலை சபை<br>20, லோவ டிக்சன் வீதி காலி<br>தொலைபேசி / தொலைநகல் : 091-2232052<br>இலத்திரணியல் : atcgl@pureceylontea.com |

# வெளிநாட்டுக் கிளைகள்

இலங்கை தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு – ஐக்கிய அரபு எமீர் இராச்சியம்

அமைச்சர் ஆலோசகர் - தேயிலை ஊக்குவிப்பு
தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு
இலங்கை கவுன்சிலர் அலுவலகம்
விலா இல. 2, ப்ளோட் பீ - 44, வீதி 322 - பீ

அல் - ஹூதைபா, டுபாய், ஐக்கிய அரபு எமீர் இராச்சியம்
(த.பெ.இல 51528)
தொலைபேசி : 00971 4 3987871
தொலைநகல் : 00971 4 3984687
இலத்திரனியல் : ctbureau@emirates.net.ae / ceylonte@eim.ae

இலங்கை தேயிலை ஊக்குவிப்புப் பிரிவு – ரஷ்யா

பிரதம செயலாளர் - தேயிலை ஊக்குவிப்பு பிரிவு
இலங்கை தூதுவராலயம்
24, யுலிஸ்டா ஷெப்கிதா வீதிய, மொஸ்கோ 129090, ரஷ்யா
தொலைபேசி / தொலைநகல் : 007-495-688 1620 / 495-688-1651/ 495-688-1463
தொலைநகல் : 007-495-688-1757
இலத்திரனியல் : tea@srilankaembassy.com

இலங்கை தேயிலை சபை

வருடாந்த அறிக்கை **2012**

இலங்கை தேயிலை சபை
574, காலி வீதி, கொழும்பு – 03, இலங்கை
TEL. 011 2582121/ 011 2583687/ E MAIL: teaboard@pureceylontea.com
WEB: www. pureceylontea.com